



# தமிழரசு

ஜூன் 16 - 30, 1998 ரூ.3







# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


★ நடப்பாய் வாழி காவிரி ........ 2

★ ஆலயங்களின் பணிகள்
- முதலமைச்சர் கலைஞர் ........ 9

★ அறந்தழைக்க அரும்பணிகள் ........ 12

★ குமாரசாமி ராஜா ........ 17

★ கலைஞர் ஆட்சியில் விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ........ 20

★ அரசு ஆணைகள் ........ 30

★ விழியில் இருட்டு மொழியில் வெளிச்சம்
- கவிஞர் சாமிபழனியப்பன் ........ 33

★ நினைவாற்றலைப் பெருக்கும் வல்லாரை
- டாக்டர் பி.பாலசுப்பிரமணியம் ........ 36

★ எங்கள் ஊர்ப் பிரச்சினை ........ 37

★ காமராஜர் பற்றிக் கவியரசு கண்ணதாசன் ........ 42

★ தொழில்துறையில் முதலிடம் பெறும் மாநிலமாக
தமிழ்நாட்டை உருவாக்குவோம்
- முதலமைச்சர் கலைஞர் ........ 43

★ ஆப்டிகல் பைபர்கேபிள் தொழிற்சாலை ........ 46


---

### திருக்குறள்

***மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்***
***வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.***

இல்லத்திற்குரிய பண்புகளுடன், பொருள் வளத்துக்குத் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாவாள்.

**கலைஞர் உரையிலிருந்து...**

---


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

ஆனி - ஆடி

ஜூன் 16-30, 1998


மலர்: 28 இதழ்: 24


### முதல் பக்க அட்டையில்...

தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பார்வையிடுதல்.

### கடைசிப் பக்க அட்டையில்...

திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்தில் 75 இணைகளுக்குத் திருமணத்தை மாண்புமிகு முதலமைச்சர் நடத்தி வைத்தல்.





# நடப்பாய் வாழி காவிரி

## கவியரசர் இளந்தேவன்

பூவிரித்து, பூ மணக்கும் கா விரித்து, தமிழகத்தின் புகழ் விரித்து நடந்து செல்லும் நதி நங்கை காவிரி. நீர் என்றால் அது காவிரி என்றும்; நிலம் என்றால் அது சோழமண்டலம் என்றும்; மன்னன் என்றால் அவன் சோழன் என்றும் எண்ணிப் போற்றுகிற மரபு, காவிரிக்கும், கவின்மிகு தமிழகத்திற்கும், ஆளும் அரசுக்கும் அமைந்த உறவை எடுத்துக் காட்டுவதாகும்.

*தண்ணீரும் காவிரியே!*
*தார்வேந்தன் சோழனே!*
*மண்ணாவதும்*
*சோழமண்டலமே!*

- என்னும் பழம்பாடல் - ஓடும் நதிக்கும், வாழும் நிலத்திற்கும், ஆளும் அரசுக்கும் அமைந்த நெருக்கத்தை சுருக்கமாகக் கூறும் சூத்திரம் போல் அமைந்துள்ளது.

**காவிரியா? காவேரியா?**

கா(சோலை) விரித்துச் செல்வதால் காவிரி என்பது சரி. காவேரி என்பது ஏன்? கானல் வரிப் பாடலில் இசைக்காக இளங்கோ 'காவேரி' என்று நீட்டினார். அந்த இன்னிசை ஒலியும் காவிரிக்குச் சொந்தமானது. பொன்னி என்னும் புனைபெயரும் காவிரிக்கு உண்டு. பொன் துகளை வாரிவருவதால் அப்பெயரா? மண்ணைப் பொன்னாக்கும் மகிமையால் அப்பெயரா? காரணம் எதுவாயினும் காவிரிக்குப் பொன் என்னும் பெயரும் - இருக்கிறது; இனிக்கிறது!

**காவியங்களில் காவிரி**

சேரன் இளங்கோ இசைத்த செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். அந்தச் சேரமன்னர் குலக்கொழுந்து சோழ நாட்டுக் காவிரியின் புகழைச் சொல்லி மகிழ்ந்ததைப் போல் வேறு எந்தக் கவிஞனும் பாடிப் பரவசப்பட்டதில்லை. சிலப்பதிகாரத்தில் உள்ள முப்பது காதைகளில் பன்னிரு காதைகளில் காவிரி பேசப்படுகிறாள். மொத்தம் 21 இடங்களில் காவிரி பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆற்றுவரிப் பாடல்களில் கோவலனும், மாதவியும் காவிரியின் புகழை மாற்றி மாற்றி இசைக்கிறார்கள்.

*மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ வாடை யது போர்த்துக்*
*கருங்கயற் கண் விழித்தொல்கி*
*நடந்தாய் வாழி காவிரி*



*பூவார் சோலை மயிலாடப்*
*புரிந்து குயில்கள் இசைபாடக்*
*காமர் மாலை அருகசைய*
*நடந்தாய் வாழி காவிரி*

இந்த வரிகள் மாதவியின் காதல் வரிகளில் காணப்படும் காவிரியைப் பற்றிய வருணனை வரிகளாகும்.

'நடந்தாய் வாழி காவிரி' என்னும் தொடர் நாடறிந்த நற்றமிழ்த் தொடரல்லவா!

சிலம்போடு இணைவைத்து, இரட்டைக் காப்பியங்களில் ஒன்று - என்று பேசப்படும் மணிமேகலைக் காப்பியத்தில் 7 இடங்களில் காவிரியைக் குறித்த குறிப்புகளைக் காணலாம்.

வேதங்களில் மிகப் பழையதாகிய 'ரிக்' வேதத்தில் காவிரியைக் காணலாம். பிற்காலத்தெழுந்த இலக்கியங்களிலும், புராணங்களிலும் காவிரியின் புகழைக் கண்டு மகிழலாம்.

காவிரியின் புகழைப் பாடக் காவேரிப்புராணம் என்னும் தனிநூலே உள்ளது. வடமொழியில் எழுதப்பட்ட 'பிரம்மகைவர்த்தம்' என்னும் நூலின் அடிப்படையில் அமைந்த இந்த நூலை மொழிபெயர்த்துத் தந்தவர் திருச் சிற்றம்பல முனிவர் என்பவர்.

கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம் என்று பாவேந்தர் பாடுகிறார், ஆழ்வாரோ - 'கங்கையிற் புனிதமாய காவிரி என்று (கங்கையினும் மிக்க புனிதமுடையது காவிரி) காவிரியின் தெய்வத்தன்மையை வியந்து பாடுவார்; விதந்து ஓதுவார்!



## காவிரியின் நடைபாதை

காவிரி ஆறு கருநாடக மாநிலத்தின், குடகு மாவட்டத்திலுள்ள, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரைச் சேர்ந்த பிரம்மகிரி மலையில் 'தலைக்காவிரி' என்னும் இடத்தில் தோன்றுகிறது. மலைப்பகுதிகளையும், கருநாடக மாநிலத்தின் தக்காணப்பீடபூமி பகுதியையும், கடந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு மேல் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நுழைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகும் ஹேமாவதி, ஹேரங்கி, லக்ஷ்மணதீர்த்தம், கபினி, சுவர்ணவதி போன்ற முக்கியமான சில துணை நதிகள் கருநாடகத்தில் காவிரியில் கலக்கின்றன. பீடபூமியின் உட்பரப்பில் தோன்றும் சிம்ஷா, அர்க்காவதி ஆகிய ஏனைய துணை நதிகள் காவிரியாற்றின் இடப்பக்கத்தில் சேருகின்றன.

கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியைக் கடக்கும்போது இந்த ஆறு மேட்டூருக்குக்கீழே தெற்கு நோக்கித் திரும்புகிறது. பவானி, நொய்யல், அமராவதி போன்ற துணை நதிகள் ஆற்றின் வலப்புறமாகக் கலக்கின்றன. அமராவதி ஆறு காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கிறது. கருநாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் மலைச்சரிவுகளையும், பீடபூமியின் செங்குத்தான சரிவுகளையும் கடந்த பின்னர், கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஆழ்ந்து குறுகி ஒடுங்கிப் பாய்ந்து கடக்கிறது. பவானி காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரியின் அடிமட்ட வாட்டமும் ஆழமும் வரவரக் குறைந்து ஆறு விரிவடையத் தொடங்குகிறது. திருச்சி மாவட்டத்தில் மேல் அணைக்கு மேல்புறத்தில் அது 2 கி.மீ. அளவிற்கும் அகன்று காணப் படுவதால் அது "அகண்ட காவிரி" என அழைக்கப்படுகிறது. ஆற்றின் வேகம் குறைகின்ற காரணத்தால் வெள்ளத்தில் கலந்துவரும் வண்டல்மண் படிய ஆரம்பிக்கிறது. ஆற்றுப்படுகை மணல் மேடிட்டு, வண்டல் படிந்து ஆறு பிரிவுபட ஆரம்பிக்கிறது. மேல் அணையில் இருபெரும்பிரிவுகளாகப் பிரிந்து வட பிரிவு கொள்ளிடம் என அழைக்கப் படுகிறது. கல்லணைப் பகுதியில் காவிரியாறு மீண்டும் காவிரி, வெண்ணாறு என இரண்டாகப் பிரிகிறது. கல்லணையைக் கடந்து செல்லும் காவிரி, வெண்ணாறு ஒவ்வொன்றும் மேலும் பல கிளை

## சோழ மண்டலம்

- தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஆறு காவிரி ஒன்றே ஆகும்.
- தமிழ்நாட்டின் 34% நிலப்பகுதி காவிரிப் படுகையில் அமைந்து உள்ளது.
- தமிழகத்தின் கால்வாய்ப் பாசனத்தில் 85% காவிரி ஆற்றையே நம்பி உள்ளது.
- தன் உணவு உற்பத்திக்கு காவிரியையே பெரிதும் சார்ந்துள்ளது தமிழகம்.

இந்தப் புள்ளி விபரங்கள் சொல்லுகின்ற உண்மை என்ன?

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்றென்றும் காவிரியே' - இதுதான் அந்த உண்மை. இதுதான் தமிழர்களின் இதயகீதம். தமிழ் மொழியின் சொற் களஞ்சியத்தைப் போல, தமிழகத்தின் நெற்களஞ்சியமும் உலகம் போற்றும் உயர்வை உடையது.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் - சோழ மண்டலம். **"முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனை"** அரிய தமிழால் பாடிய அருணகிரியார் - "ஏழ்தலம் புகழ் காவிரியால் விளை சோழமண்டலம்" - என்று போற்றுகிறார். சோழ மண்டலத்தின் வளம் காவிரியின் நலத்தைப் பொருத்தே அமைகிறது.

சோழனின் மகவு சோழநாடு. அந்தச் சோழ நாட்டை அவனருளால் வளர்க்கும் தாய் காவிரி என்னும் பொருள்பட -

*"வாழி யவன்றன் வளநாடு*
*மகவாய் வளர்க்கும் தாயாகி*
*ஊழியுய்க்கும் பேருதவி*
*ஒழியாய் வாழி காவிரி"*

- என்று பாடிப் பரவுகிறது சிலப்பதிகாரம்.

சோழ மன்னர்களுக்கும் காவிரிக்கும் உள்ள தொடர்பு காலத்தால் முற்பட்டது. சோழ மன்னர்கள் 'பொன்னி வளவன்' என்று பெயர் சூட்டிக் கொண்டார்கள். அந்தச் சோழமண்டலத்தைக் காப்பது காவிரி; அந்தக் காவிரியைக் காப்பவர் சோழமன்னர்கள் என்பதால் காவிரிக் காவலர் என்ற பெயரையும் அவர்கள் பெற்றார்கள்.

காவிரியைக் காப்பது சோழரின் கடமை என்னும் மரபு மன்னர் ஆட்சிக் காலத்தில் அன்று விளங்கியது போலவே மக்களாட்சி, காலத்தில் இன்றும் துலங்குகிறது. அந்தச் சோழ மண்ணின் மைந்தராகிய கலைஞர் தமிழகத்தின் முதலமைச்சர் என்னும் முறைமையால் மண் ஆளும் உரிமையாலும், மண்ணின் மைந்தராம் மரபாலும் காவிரிக் காவலராய் விளங்குகிறார். கலைஞர், காவிரி நீரில் தமிழர்க்குள்ள உரிமையை நிலை நாட்டுவதில் மட்டுமல்ல, இன்னொரு வகையிலும் காவிரிக் காவலராய் விளங்குகிறார். எப்படி?

களாகவும், அக்கிளைகள் மேலும் பல சிறு கிளைகளாகவும் உட்கிளைகளாகவும் பிரிவதால் இவை 36 கிளை நதிகளாக,காவிரி டெல்டா பகுதியில் பரவிப் பாய்ந்து சுமார் 125 கி.மீ. விரிவுக்குள் கடலில் கலக்கின்றன. காவிரியாறு,இறுதியில் ஒரு குறுகிய ஓடையாக,பூம்புகாருக்கு அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

காவிரியின் மொத்த நீளம் 800 கி.மீ. ஆகும். இதில் 320 கி.மீ. கருநாடக மாநிலத்திலும், 64 கி.மீ. கருநாடக, தமிழ்நாடு மாநிலங்களிடை எல்லையாகவும் 416 கி.மீ. தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளது.

### நடைக்கு வந்த தடை

காவிரி டெல்டா பகுதியில் காவிரி ஆறு, வெண்ணாறு, குடமுருட்டி, அரசலாறு, மன்னியாறு, வீரசோழனாறு, நந்தலாறு, முடிகொண்டான் ஆறு, சிறுமலைராஜன் ஆறு, வெட்டாறு, கோரையாறு, பாமினி ஆறு, வெள்ளையாறு, ஓடம்போக்கியாறு, அரிச்சந்திரா நதி போன்ற 36 ஆறுகளும், ஆழியனாறு, கோணங்கடங்கலாறு, ஆனந்தக் காவிரி, கோண வாரி ஐம்புகாபுர வாரி, வல்ல வாரி, முதலை முத்து வாரி, கண்ணனாறு, பாட்டுவனாச்சியாறு போன்ற நூற்றுக்கணக்கான வடிகால்களும், மொத்தம் சுமார் 1500 கிலோ மீட்டர் தூரம் காவிரி டெல்டா பகுதியில் பாய்கின்றன. இவைகளின் மூலம் சுமார் 10 இலட்சம் ஏக்கர் பழைய நஞ்செய்ப் பகுதி பாசன வசதி பெறுகின்றது. இவையெல்லாம் பல ஆண்டுகளாக, தூர் வாரப்படாமல் வண்டல் படிந்து கரையோரப் பகுதிகளில் மண்மேடிட்டும், செடி கொடிகள் குறிப்பாக நெய்வேலி காட்டாமணக்கு மண்டியும், ஆங்காங்கே ஆக்ரமிப்புகளும் எல்லாம் சேர்ந்து நீர்வழிப்போக்கைப் பெரிதும் தடுத்து, அதனால் விவசாயத்திற்கு,போதிய நீரை வழங்க இயலாமலும், வெள்ளக்காலங்களில் வெள்ளம் விரைவில் வடியாமல் கரைகளில் பெரும் உடைப்பு எடுத்தும் இலட்சக்கணக்கான ஏக்கர் பயிர்களை மூழ்கடித்து உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களை உண்டாக்கின.

பாசன நீரைப் பங்கிடுவதற்கு சுமார் 30,000 பாசன வாய்க்கால்கள் 22335 கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ளன. இந்த வாய்க்கால்கள் எல்லாம் மேலே கூறிய ஆறுகள் வடிகால்களைப் போலவே தூர்ந்து போயும், நெய்வேலி காட்டாமணக்கு மண்டியும், ஆக்ரமிப்பாலும் பாசன நீரை முழுமையாக வழங்க முடியாமல் விவசாய காலங்களில் பெரும் பிரச்சினையாக ஆகிவிடுகின்றன.

கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாய் மூலம் சுமார் 2.50 இலட்சம் ஏக்கர் புதிய நஞ்சைப் பகுதி பாசன வசதி பெறுகின்றது. இந்தக் கல்லணைக் கால்வாயில் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களில் தூர் வாரப்படாமல் செடிகொடிகள் மண்டிப் பாசன நீரை பாங்காகப் பங்கிடுவதற்கு இடையூறுகள் இருக்கின்றன.

கல்லணைக்குக் கீழ் காவிரி டெல்டா பாசனம் மூன்று பெரும் பிரிவுகளை கொண்டு செயல்படுகிறது. அவை காவிரி வடிநிலப் பகுதி, வெண்ணாறு வடிநிலப் பகுதி, கல்லணைக்கால்வாய் வடிநிலப் பகுதி என்பனவாகும்.

இதில் காவிரி வடிநிலப் பகுதியில் 4,93,837 ஏக்கரா நிலங்களும், வெண்ணாறு வடிநிலப் பகுதியில் 4,96,814 ஏக்கரா நிலங்களும் பாசனம் பெறுகின்றன. மேற்படி வடிநிலைப் பகுதிகளில் நீர்ப் பாசனம் 1668 கிலோ மீட்டர் நீளம் உள்ள 38 ஆறுகள், 23822 கிலோமீட்டர் நீளமுள்ள 29881 பாசனக் கால்வாய்கள் மூலமாக நடைபெறுகிறது.

கல்லணைக்கால்வாய் வடிநிலைப் பகுதியில் 227471 ஏக்கரா நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இங்கு நீர்ப்பாசனம் 2300 கிலோமீட்டர் நீளம் உள்ள கால்வாய்கள் மூலமாகவும் 696 கண்மாய்கள் மூலமாகவும் நடைபெறுகிறது. இந்த பரந்துகிடக்கும் பாசனக் கட்டமைப்பு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கொண்டது.

### பாசன நலன்கள் பாதிப்பு

மேற்குறிப்பிட்டுள்ள பாசனக் கட்டமைப்புகள் அனைத்தும் கடந்த பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படவில்லை. கரைகள் பலப்படுத்தப்படவில்லை. ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதி மேற்படி கட்டமைப்புகளில் உள்ள நீரொழுங்கிகள், தலைமதகுகள், அணைகள், கலுங்குகளைச் செப்பணிடவே போதுமானதாக இல்லை. மேலும், பஞ்ச காலங்களில் நீர் பற்றாக் குறையினாலும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் நீரில் மூழ்கியதனாலும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பொருளாதாரத்தில் வலுவிழுந்து விட்டனர். இதனால் அரசு ஆண்டுந் தோறும் கால்வாய்களைத் தூர் வார குடிமரா மத்துத் திட்டத்தில் கொடுத்துவந்த 4/7 பங்கைப் பெற்று பணி செய்ய முன்வராததினால் அத்திட்டம் பயனற்றுவிட்டது. இதனால் கால்வாய்கள் தூர் வாரும் பணியும் பாதித்துவிட்டது. மேலும் நெய்வேலி காட்டாமணக்கு என்னும் செடி ஆறுகள், வடிகால்கள், கால்வாய்கள், ஏரிகளில் அதிக அளவில் பரவி,பாசனக் காலங்களில் நீரின் வேகத்தைத் தடுப்பதுடன் வண்டல் படிவதையும் துரிதப்படுத்திவிட்டது. அதேபோல் வெள்ளக் காலங்களில் நீர் வடிவதைத் தாமதப்படுத்தி நெற்பயிர்கள் நீரில் மூழ்கடித்து பயிர்களை அழுகச் செய்தும் விளைச்சலைப் பெரிதும் பாதிப்படையச் செய்தும் விவசாயிகளைப் பெருந் துன்பத்துக்கு ஆளாக்கி விட்டன.



ஆக மொத்தத்தில் பல ஆண்டுகளாகப், பாசன நீரைப் பங்கிடுவதிலும் வெள்ளத்தை விரைவில் வெளியேற்றுவதிலும் காவிரி டெல்டா பகுதியில் பெரும் சிரமங்கள் இருந்து வருகின்றன.

1996ஆம் ஆண்டு வெள்ளச் சேதங்களை பார்வையிட வந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேலே உள்ள பெரும்பிரச்சினைகளுக்கு, ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் எல்லாம் சரியானபடி தூர் வாரி செடிகொடிகள் மற்றும் காட்டாமணக்குகளை அகற்றி



அகலமும் ஆழமும் ஆக்கி கரைகளைப் பலப்படுத்தி பாசன வாய்க்கால்களையெல்லாம் அதேபோல் தூர் வாரிச் செப்பனிட்டால் ஒரு முடிவு காண இயலும் என்று உணர்ந்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தனர். பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் ஏப்ரல் '97 முதல் வாரத்தில், ரூ.10 கோடியை உடனடியாக ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.

### தூர் வாரும் பணி - 1997

ஏப்ரல் '97 கடைசி வாரம் தொட்டு ஜூன் '97 கடைசி வாரம் வரை இருமாதங்களில் ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் குளங்களில் இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டன. இப்பணிகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித்துறை அமைப்பில் உள்ள ஏனைய மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றுபோல் பாராட்டினார்கள்.

1997 இல் 936 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆறுகள், வடிகால்களிலும், 1170 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால்களிலும், 74 கண்மாய்களிலும் ரூ.12.75 கோடி செலவில் தூர் வாரப்பட்டது.

இதன் மூலமாகக் கீழ்கண்ட பலன்களை நேரடியாகக் காண முடிந்தது.

1. தூர் வாரப்பட்ட பகுதிகளில் பாசனத்திற்கு நீர் துரிதமாகத் சேதமின்றி, தேக்கமின்றிச் சென்றடைந்தது.
2. தூர் வாரும் பணி முடித்து குறுவை சாகுபடிக்காக ஜூன் 12, 1997இல் தண்ணீர் திறந்து விட்டதால் விவசாயிகள் குறுவைப் பயிரில் மிகுந்த விளைச்சலும் லாபமும் பெற்றனர். அரசாங்கமும் பொது விநியோகத்திற்குத் தேவையான நெல்லையும் கொள்முதல் செய்ய முடிந்தது. அரசாங்கம் விவசாயிகள் குறுவையில் உற்பத்தி செய்த நெல் அனைத்தையும் நியாய விலை கொடுத்து வாங்கியதால் விவசாயிகளுக்கு நியாயமான விலையும், விலைப்பாதுகாப்பும் கிடைத்துப்பலன் அடைந்தனர்.
3. தூர் வாரப்பட்ட பகுதிகளில் வெள்ள நீர் துரிதமாக வடிந்தது. தேக்கம் ஏற்பட்டுப் பயிர்கள் நீரில் மூழ்கும் அபாயம் தவிர்க்கப் பட்டது.
4. தூர் வாரப்பட்ட பகுதிகளில் தூர் வாரப்பட்ட மண்ணைக் கொண்டு கரைகளைப் பலப்படுத்தியதால் டிசம்பர் 1997இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் கரை உடைப்பு ஏற்படவில்லை. வெள்ளச் சேதமும் இல்லை.

எனினும் 1997 டிசம்பரில் பெய்த பெருமழையால் வெள்ளம் ஏற்பட்டு தூர் வாரப்படாத ஏனைய பகுதிகளில் சேதம் ஏற்பட்டது. எனவே, இந்த ஆண்டு அரசாங்கம் அரசாணை எண்.158 நாள் : 7-4-98ன் படி ரூ.20 கோடி தூர் வார ஒதுக்கியது. இதன்படி 480 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆறுகளிலும், 1050 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்களிலும், 300 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால்களிலும் 74 கண்மாய்களிலும் தூர் வார திட்டமிடப்பட்டுப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றன.

காவிரி டெல்டாவில் உள்ள எஞ்சிய அனைத்து ஆறுகளிலும், வடிகால்களிலும், கால்வாய்களிலும், ஏரிகளிலும் தூர் வாரும் பணி, கரைகள் பலப்படுத்தும் பணி முடியும்வரை இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடும், பணியும் ஆண்டுதோறும் தொடரப்பட வேண்டும். இதைக் கண்கூடாகக் கண்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நடப்பு ஆண்டில் (1998-99) தூர் வாரும் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ரூ.20 கோடியை வழங்கினார்கள்.

எந்தெந்த ஆறுகளில், வடிகால்களில், பாசன வாய்க்கால்களில், குளங்களில் முன்னுரிமை கொடுத்து இப்பணிகளெல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதற்கு தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கூட்டங்கள் ஏற்பாடு செய்து பொது மக்கள், விவசாயிகள், சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித்துறையைச் சார்ந்த பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் ஒன்றியத் தலைவர்கள் மற்றும் ஏனையப்

அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகிய எல்லோரது கருத்துக் கணிப்புகளும் பெறப்பட்டன. அதன் அடிப்படையில் இவ்வாண்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இப்பணிகள் எல்லாம் மே '98 முதல் வாரத்தில் தொடங்கப்பட்டன. சென்ற ஆண்டில் எடுக்கப்பட்ட ஆறுகள். வடிகால்கள், வாய்க்கால்கள் எல்லாம் இவ்வாண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு சென்ற ஆண்டுப் பணிகள் தொடர்ச்சியாக இவ்வாண்டுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு காவிரி ஆறு, வெண்ணாறு, வெட்டாறு, முடிகொண்டான் ஆறு, திருமலைராஜன் ஆறு, கடப்பாறு, அரிச்சந்திரா நதி போன்ற ஆறுகளும், புதுப்பாண்டி ஆறு, பழம்பாண்டி ஆறு, கழுமலை ஆறு, தூரியாறு, மின்னியாறு போன்ற வாய்க்கால்கள், வடிகால்களும் மற்றும் 73 ஏரிகளும் தூர்வாரும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு, விவசாயிகள் சீர்காழிப் பகுதியில் 'குள்ளக்காரு' சாகுபடி தூர்வாரும் பணிக்காக தள்ளி வைத்துள்ளனர். 'குள்ளக்காரு' பகுதி சுமார் 6800 ஏக்கர் பரப்பாகும். தெற்குராஜன் ஆறு, புதுமண்ணியாறு, அவைகளின் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு கிளை வாய்க்கால்கள் எல்லாம் முழுமையாக தூர் வாரி கரைகள் பலப்படுத்தப்படும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**தூர் வாரிய தூயவரே வருக!**

தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட முடிவுசெய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22-6-98 அன்று காலை 8-35 மணிக்கு விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி வந்தார். ஒரு வரலாற்றுச் சிறப்புள்ள பணிக்கான வருகை அது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் அவரது துணைவியார் திருமதி தயாளு அம்மையார் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும், உயர் அதிகாரிகளும் வந்தனர்.

திருச்சி விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு ஆகியோர் வரவேற்றனர். அங்கிருந்து தஞ்சை வரை முதலமைச்சர் அவர்களுக்கு வழிநெடுக அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்ட எல்லையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராமநாதன், இ.ஆ.ப, மாலைபணிவித்து வரவேற்றார்.

பல்வேறு வரவேற்புகளைத் தொடர்ந்து, முதலாவதாகத் திருவையாறில் நடை பெறும் தூர்வாரும் பணியைப் பார்வையிட முதலமைச்சர் சென்றார்.

**மக்களின் மகிழ்ச்சி**

திருவையாறு, வீரமாங்குடியில் - முதலமைச்சர் தூர்வாரப்பட்ட தூரியாற்றைப் பார்வையிட்டார். அப்போது திரண்டுவந்த மக்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களை வாயார வாழ்த்தினார்கள். ஆண்டாண்டு காலமாக தூர்வாராமல் கிடந்த ஆறு - கலைஞரின் ஆணையின் பேரில் தூர் வாரப்பட்டது குறித்து தங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்தார்கள். சிலர் ஆற்றுக்குள் இறங்கி ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் நண்பகல் 12 மணியளவில் வாழ்க்கை கிராமத்தில் - மன்னியாற்றில் நடைபெற்ற தூர்வாரும் பணியைப் பார்வையிட்டார். ஆழப்படுத்தப்பட்ட ஆறு, உயர்த்தப்பட்ட கரைகள், உற்சாகம் ததும்பும் விவசாயப் பெருமக்கள் - இந்தக் காட்சிகளுக்கு நடுவே முதலமைச்சர் - இவ்வாறு காணும் இடமெல்லாம் களிப்பு களிநடனம் புரியக் கண்டோம்.

56 கி.மீ. நீளமுள்ள மன்னியாறு முழுவதும் தூர்வாரும் பணி முடிவுற்றதைக் கண்டு மகிழ்ந்த முதலமைச்சர் அவர்கள் பிற்பகல் 1-10 மணியளவில் கோவிலாச்சேரியில் - பழவாறு தூர்வாரும் பணியைப் பார்வையிட்டார். இந்தப் பணியால் பயன்பெறும் பாசனப் பரப்பு 3983 ஏக்கர் ஆகும்.

1-30 மணிக்கு, திருப்பனந்தாள் வந்த முதலமைச்சர், ஆர்ச் பாலத்திலிருந்து பணி முடிவடைந்திருந்த மன்னியாற்றுப் பரப்பைப் பார்வையிட்டார்.

**அரசன் நிலையில் நின்று - முதலமைச்சர் கலைஞர் மேற்கொண்ட அற்புதத் திட்டம்**

"தஞ்சையில் தரணியில் மேற்கொள்ளப் பட்டு வரும் தூர்வாருகின்ற பணி முதல்வர் கலைஞர் அவர்கள் அரசன் நிலையில் நின்று மேற்கொண்ட அற்புதத் திட்டம்" - என்று 'தினமலர்' நாளிதழ் இயக்குநர் கே.வெங்கட்ராமன் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள பாராட்டுக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:


"தஞ்சைத் தரணியில் ஆறுகள், வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தால் விவசாயிகள் வாழ்வு மட்டுமல்ல; நாட்டின் பொருளாதாரமும் தழைத்தோங்கும்.

காவிரி நீர்ப் பிரச்சினை என கர்நாடகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, காலத்தை வீணடித்தது போதும். கிடைக்கும் தண்ணீரை அப்படியே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தங்களது மாபெரும் தூர்வாரும் பணித்திட்டம் பாராட்டுக்குரியது.

மன்னர்கள் காலத்தில் நடந்த பணி இது என்று கூறுகின்றனர். எனக்கு தெரிந்தவரை நீண்டகாலம் இந்தப் பணி தஞ்சையில் நடக்கவில்லை.

அரசன் ஸ்தானத்தில் தாங்கள் இந்த அற்புதத் திட்டத்தை அமல் படுத்தியதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் தொடர சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் மயிலாடுதுறையிலிருந்து மங்கைநல்லூர் சென்று வீரசோழனாறு தூர்வாரப்பட்டு, பணி முடிவடைந்ததைப் பார்வையிட்டார். பாசனத்திற்கு மிக இன்றியமையாததும், இதுவரை எவரும் எப்போதும் செய்திராததுமாகிய



தூர்வாரும் பணியை முறையோடு செய்ததற்காக வேளாண்குடியினர் அனைவரும் மகிழ்ச்சியோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

திருவாஞ்சியத்திலும், திருவிடைச் சேரியிலும் புத்தாற்றில் தூர்வாரப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு நெடுஞ்சேரி - பெரும்பண்ணையூர் பகுதியில் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டார். பெரும் பண்ணையூர் - நீதிக்கட்சித் தலைவர் சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தின் சொந்த ஊர் என்பது நினைவுகூரத்தக்கது.

நாள்முழுதும் காவிரித் தாய் நடந்து செல்லும் பகுதிகளின் மேம்பாடு நடந்து வருவதைப் பார்வையிட்ட பொன்னியின் செல்வர் கலைஞர் அவர்கள் மாலையில் திருவாரூர் அருகில் உள்ள காட்டூரில் உள்ள தமது அன்னையார் அஞ்சுகம் அம்மையார் அவர்களின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திவிட்டு திருவாரூர் சென்று தங்கினார்.

## இரண்டாம் நாள் பயணம்

காலை 8.45 மணிக்கு திருவாரூரிலிருந்து புறப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புலிவலத்தில் உள்ள வாழைவாய்க்காலில் தூர்வாரும் பணியைப் பார்வையிட்டு தொடர்ந்து மாங்குடியில் பாண்டவையாற்றில் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டார். அடுத்து கச்சநகரம், சோழாவதியாற்றில் நடைபெறும் பணிகளைக் கண்ட கலைஞர் அவர்கள் திருக்குவளையில் தாம் பிறந்த இல்லத்திற்குச் சென்றார். முதல்வர் பிறந்த இல்லம் முத்துவேலர் நூலகத்தையும், அஞ்சுகம் படிப்பகத்தையும் கொண்டு அறிவாலயமாக விளங்குகிறது.

தமது வரலாற்றையே தமிழ்மொழியின் வரலாறாகவும், தமிழகத்தின் வரலாறாகவும் ஆக்கிக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் பல்வேறு புகைப்படங்களை முதல்வருடன் செய்தியாளர்கள் கண்டுகளித்தார்கள். பிறந்த இல்லத்திற்கு வரும்போது தங்களது உணர்வுகள் எப்படி உள்ளன என்று செய்தியாளர்கள் கேட்டபோது - ''பிறந்த மண்ணுக்கு வரும்போது அலைமோதும் இந்தப் பசுமையான நினைவுகளை, மன உணர்ச்சிகளை தழுதழுத்த குரலில் தான் உங்களிடம் கூறமுடிகிறது'' - என்று பதில் கூறினார் கலைஞர்.

பின்பு வெள்ளத்திடலில் தெற்குவழிப் பாசன வடிகால் தூர்வாரும் பணியையும், தொடர்ந்து எட்டுக்குடியில் வடக்கு காட்டாறு வடிகால் தூர்வாரும் பணிகளையும் பார்வையிட்டார்.

வழியெங்கும் பொதுமக்களின் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் பெற்று வந்தார் முதலமைச்சர். முதல்வர் பிறந்த திருக்குவளையில் ஊர்ப் பொதுமக்கள் உள்ளம் பூரிக்க வரவேற்பை வழங்கி மகிழ்ந்தார்கள்.

இதற்குமுன் எந்த முதலமைச்சரும் சென்றிராத குறுகிய கிராமத்துப் பாதைகளிலும், முதலமைச்சர் கலைஞரின் பயணம் தொடர்ந்தது. அடுத்து அவர் பார்வையிட்டது திருவாய்மூரில் தெற்குக் காட்டாற்றில் நடைபெற்று வந்த பணிகளை.

தொடர்ந்து தென்கரை ஈசனூரில் சீராவட்டனாறு, ஆலங்குடியில் அரிச்சந்திரா நதி, கொக்கலடி பாமணியில் அடப்பாறு, பாண்டிபாலத்திலிருந்து மரைக்கா கோரையாறு, தம்பிக்கோட்டை கீழக்காட்டில் பாமணியாறு, வீரக்குறிச்சியில் நசுவினி ஆறு, ஒரத்தநாடு குருமண் தெருவில் காரிமுத்து ஏரி வடிகால் ஆகிய இடங்களில் முழுமூச்சோடு நடைபெற்று வந்த பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டார்.

## கல்லணையில் காவிரி நீர்திறப்பு

காவிரிக்குக் குறுக்கே கல்லணை கட்டி, சோழ மண்டல வேளாண்மைக்குப் புத்துயிர் கொடுத்தான் சோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தான். அவனுக்குப் பிறகு காவிரி நடந்து செல்லும் பாதையிலிருந்த தடைகளை அகற்றி, காவிரிப் பாசனத்திற்கு உயிரோட்டத்தை அளித்திருக்கிறார் கலைஞர். அவரே தமது திருக்கரங்களால் கல்லணை மதகுகளைத் திறந்து, காவிரியை **'தடம் பார்த்து நடந்து செல்க'** என்று அனுப்பி வைத்தார். ஆம்! பாசனத்திற்குக் கல்லணையிலிருந்து காவிரி நீரைத் திறந்துவைத்தார், அந்தக் காவிரிக் காவலர்.

தொடர்ச்சி - 41 ஆம் பக்கம்



# ஆலயங்களின் பணிகள் பக்தர்களின் மனம் மகிழும் அளவிற்கு நடைபெற வேண்டும்!

*திருவேற்காடு கருமாரி அம்மன் கோயிலில் 75 இணைகளுக்குத் திருமணத்தை நடத்திவைத்து, **கலைஞர்** உரை*

இன்றையதினம் அறநிலையத் துறையின் சார்பாகவும் நம்முடைய அன்பிற்குரிய தவத்திரு ராமதாசு அடிகளார் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாகவும் அவரோடு ஒத்துழைத்த அறங்காவல் குழுவினர்களின் ஆர்வத்தின் காரணமாகவும் இங்கே 75 மணமக்களுக்கு மணவிழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. இந்த மணமக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தம்பி துரைமுருகன், ஜோடிகள் ஜோடிகள் என்றே சொன்னார். நல்ல தமிழில் இணை என்று தமிழ்க்குடிமகன் சொன்னது போலச் சொல்லி இருக்கலாம். ஆனால் ஏதோ இரண்டு ஜோடி வேட்டி, இரண்டு ஜோடி வளையல் என்று சொல்வதைப் போல, நானும் ஒருமுறையாவது திருத்திக்கொண்டு இணை என்று சொல்வாரா என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அதற்கு இணைந்து வருவதாகத் தெரியவில்லை. ஜோடிகள், ஜோடிகள் என்றே குறிப்பிட்டார்.

ஜோடிகள் அல்ல இவர்கள் - இணைகள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமேயானால் இல்வாழ்விலே அடிபெடுத்து வைக்கும் மணமக்கள். இந்த 75 இணை - இந்த 75 இணை மணமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று உங்கள் அனைவரோடும் சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன்.

**கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன்**

மேடைக்கு வந்ததும் நண்பர் சுதர்சனம், எம்.எல்.ஏ., அவர்கள் என்னைப் பார்த்து 'இப்போதுதான் கோவிலுக்கு முதன்முதலாக வருகிறீர்களா' என்று கேட்டார். நான் அவரிடத்தில் பதில் சொன்னேன். தம்பி துரைமுருகன் சொன்னதைப் போல - இது முதன்முறை அல்ல, எத்தனையோ முறை எத்தனையோ கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன் என்று அவரிடம் நான் குறிப்பிட்டேன். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் நான் பிறந்த ஊர் திருக்குவளையே பெரிய பாடல் பெற்ற ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஸ்தலம் திருக்குவளை. அந்த திருக்குவளையிலே உள்ள கடவுளுக்குச் சரியான - மிகத் தூய்மையான தமிழ்ப் பெயர் - அந்த அம்மனை வண்டமரும் பூங்குழலாள் என்ற அழகிய தமிழிலேதான் அழைப்பார்கள். எவ்வளவு அழகான தமிழ் நயத்தோடு வைக்கப்பட்ட பெயர் அது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



அந்தக் கோவிலைச் சார்ந்துள்ள வீதியில் ஒரு குடும்பத்திலே பிறந்தவன் நான். அதற்குப் பிறகு நான் படிக்க வந்த இடம் - திருவாரூர் - அதுவும் பாடல் பெற்ற



ஆலயங்களிலே ஒன்று. பிறந்த ஊரிலே, திருக்குவளையிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன். பிறகு நான் வளர்ந்த ஊரான திருவாரூரிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் முன்பு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது இரண்டாவது முறையோ அல்லது மூன்றாவது முறையோ நான் முதல்வராக இருந்தபோது - பந்தலிட்டு நடைபெற்ற ஒரு பெரிய இலக்கிய விழாவில் கலந்து கொண்டு "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்ற தலைப்பில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் உரையாற்றியிருக்கிறேன். மதுரை முத்து அவர்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரியார் காலத்திலே, அண்ணா காலத்திலே, ஏன் என்னோடும், இந்த இயக்கத்தினுடைய தளகர்த்தராக வாழ்ந்தவர், விளங்கியவர். தீவிர சுயமரியாதைக்காரர். அவர் என்னை அழைத்துக் கொண்டு - பழனி திருக்கோவிலுக்கு இருவரும் சென்றிருக்கிறோம். அங்கே வந்திருந்த பக்தர்களையெல்லாம் கண்டு பேசியிருக்கிறோம். அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

**என்னைக் கவர்ந்த சிற்பங்கள்**

தமிழ்நாட்டிலே உள்ள ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. குறிப்பாக மதுரைக்கு அருகிலே உள்ள அழகர்கோவில் சிற்பங்களைப் பற்றி நான் பல நண்பர்களிடம் பேசி மகிழ்ந்திருக்கிறேன். நெல்லை மாவட்டத்தில் கிருஷ்ணாபுரம் என்கிற ஊரிலே உள்ள கோவில் சிறபங்களை நான் பல முறை சென்று பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்குத் தமிழகத்தின் திருக்கோயில்களிலே உள்ள சிற்பக்கலை என்னைக் கவர்ந்திருக்கின்றது. இந்தக் கோவில்கள் எப்படி ஒரு காலத்தில் இயங்கின, எப்படி இயங்க வேண்டும் என்ற கருத்துக்களை ஆன்மீகக் கருத்துடைய பல பெரியவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆலயங்களின் வருமானம் ஆலயத்திலே இருக்கின்ற ஆண்டவனுக்கு மாத்திரமே செலவிடப்படாமல், அந்த ஆண்டவனால் படைக்கப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் எனக் கருதப்படுகின்ற அனைவருக்கும் அவர்களுடைய நல்வாழ்விற்காகவும், அந்தத் தொகை செலவிடப்பட வேண்டும் என்பதைப் பல ஆன்மீகப் பெரியவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதன் காரணமாகத்தான் கோயிலைச் சார்ந்த இடங்களில் இளைஞர்கள் கல்வி கற்கின்ற இடங்கள் - இதுபோன்ற நல்ல காரியங்கள் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எல்லாம் அந்தக் காலந்தொட்டு நடைபெற்றே வந்திருக்கின்றன. இடைக்காலத்தில் இவைகள் எல்லாம் நின்று போயிருக்கலாம்.

**மீட்கப்பட்ட கோயில் சொத்துக்கள்**

அந்தக் கோயில்களை இடைக்காலத்திலே வயப்படுத்திக் கொண்டவர்கள் ஆண்டவன் பெயரால் - ஆண்டவனையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றிக் கொண்டு பல பேர் இருந்திருக்கிறார்கள் என்பதை மறைக்கத் தேவையில்லை. அதனால் தான் ஆண்டவனுடைய சொத்துக்கள் கோவில்களுக்குரிய உடமைகள் இவைகள் எல்லாம் பலரால் கவரப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டு இந்த இரண்டாண்டு கால ஆட்சியில் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியின் காரணமாகவும் அவருக்கு அரசு தந்துள்ள ஒத்துழைப்பின் காரணமாகவும் இந்த இரண்டாண்டு காலத்தில் மாத்திரம் கோவில் சொத்துக்கள் - நிலம் போன்றவை, வீட்டுமனை போன்றவைகள் எல்லாம் 125 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மணிவிழா நிகழ்ச்சியிலே உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மணவிழாக்கள் 1982 ஆம் ஆண்டு முதல், இது போன்ற திருக்கோவில்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இங்கே எடுத்துக்காட்டப்பட்ட - அரசு சார்பிலே நடத்தப்படும் ஏழையெளிய பெண்களுக்காக வழங்கப்படும் பத்தாயிரம் ரூபாய் நிதியில் நடத்தப்படும் திருமணங்கள் வேறு.

### ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவி

தம்பி வேணு அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல 89 - 90 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது ஏழையெளிய வீட்டுப் பெண்களுக்கு அந்தப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால், அந்தப் பெண்ணின் திருமணத்திற்காக ஐயாயிரம் ரூபாய் அரசாங்கம் நிதியாக வழங்கும் என்று அறிவித்து அவ்வாறு வழங்கப்பட்டது. பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு இன்னொரு ஆட்சி வந்தது உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சியில் இந்தத் திருமணத் திட்டம் மும்முரமாக ஆர்வமாகத் தொடரப்படவில்லை.

பிறகு 96ஆம் ஆண்டு நான் மீண்டும் முதலமைச்சராக வந்தபிறகு அந்த ஐயாயிரம் ரூபாய் என்பதை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தி இதுவரையிலே அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழையெளிய வீட்டுப் பெண்களுக்கு நிதி உதவி தந்திருக்கிறோம். இந்த ஆண்டும் பெருந்தொகை - பல்லாயிரக்கணக்கான திருமணங்களை நடத்திக்கொள்கின்ற அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது வேறு.

ஆனால் அறநிலையத்துறையின் சார்பாக 82ஆம் ஆண்டு முதல் 96ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இந்தத் திருக்கோவில்கள் மூலம் நடத்தப்பட்ட இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 14 ஆண்டு காலத்தில் 1,171. இந்த 14 ஆண்டுக் காலத்தில் 1,171 திருமணங்களில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 294. ஆனால் இந்த இரண்டாண்டுகளில் மாத்திரம், இந்த ஆட்சியில் திருக்கோவில்களில் நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 1,031.

இந்த அளவிற்கு ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றி வைக்க வேண்டுமென்பதற்காகத் திமுகழக அரசு இந்த அரசின் சார்புடைய அறநிலையத்துறை எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

இந்தத் திருமணத்திலேகூட அவர்களுக்கு - மணமக்களுக்கு இந்த மணவிழாவை நடத்திக்கொள்கிற செலவுகளை இந்தத் துறை ஏற்றுக்கொண்டுள்ளது என்பது மாத்திரமல்ல. இங்கே இந்த ஆலயத்தில் மணமக்களுக்கு ஒவ்வொரு இணைக்கும் 3,000 ரூபாய் பெறுமானமுள்ள சீர்வரிசையும் தரப்படுகின்றது. இது அவர்களுக்குக் கருமாரியம்மன் என்ற தாய் வீட்டிலிருந்து தரப்படுகின்ற சீர்வரிசை என்று அவர்கள் மகிழ்ச்சியோடு எண்ணிக்கொண்டு அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

### 'ஆலயம்' விரோதமான சொல் அல்ல

ஆலயங்களுக்குத் திமுகழக ஆட்சி எதிரானதல்ல. ஆனால் சில பேர் அத்தகைய ஒரு தவறான பிரச்சாரத்தை நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள். 'ஆலயம்' என்ற வார்த்தை எங்களுக்கு எதிரான வார்த்தை என்றால், நான் எங்களுடைய கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு 'அண்ணா அறிவாலயம்' என்ற பெயரை வைத்திருக்க மாட்டேன். ஆகவே 'ஆலயம்' என்ற சொல் எங்களுக்கு விரோதமான சொல் அல்ல.

சில பேர் கூட, என்ன ஆலயம் என்று பெயர் வைத்திருக்கிறீர்களே என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்ன பதில், நான் 'ஆலயம்' என்ற சொல்லையே வெறுப்பவன் அல்ல என்பதுதான். ஆலயத்தில் தவறுகள் நடந்தால் அதைக் கண்டிப்பவன்; தவறுகள் நடைபெறக் கூடாது என்று கருதுபவன்.

மனித சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கை உண்டு. எனக்கென்று ஒரு கொள்கை உண்டு. என்னுடைய கொள்கையை மற்றவர்கள் மீது நான் திணிக்க விரும்பவில்லை. எடுத்துச் சொல்லலாம். விளக்கலாம். ஏற்றுக் கொண்டால் மகிழலாம். ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்கள் வழியிலே அவர்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமே தவிர, அதைத் தடுத்து நிறுத்துவது தகாது என்பது என்னுடைய கொள்கை.

அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் எந்தவொரு கருத்தையும் பிறர் மீது திணிக்கக் கூடாது என்பது எங்களுடைய இயக்கம் கொண்டிருக்கின்ற கொள்கையாகும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இயங்குகின்ற அரசுதான் என்னுடைய தலைமையிலே இயங்குகின்ற திமுகழக அரசாகும்.

### ஓடாத தேரை ஓட்டிக்காட்டினேன்

இந்த அரசுக்கு ஆலயங்களை எல்லாம் அகற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், இருபதாண்டு காலம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 47 முதல் 67 வரையில், திருவாரூர் தேர் ஓடாமலே இருந்தது. நான் முதலமைச்சராக ஆன பிறகுதான் ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட்டிக் காட்டினேன். இன்னமும் அது ஓடிக் கொண்டிருக்கின்றது.

நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் சென்னையிலே கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குளம் தூர்ந்து கிடந்ததைத் தூர் வாருவதற்காகச் சீரணிப்படையோடு சென்று தூர் வாருகின்ற பணியைத் தொடங்கி வைத்திருக்கிறேன். எனவே ஆலயங்களின் காரியங்கள் அந்த ஆலயங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பக்தர்களின் மனம் மகிழ்கின்ற அளவிற்கு நடைபெற வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபாடான கருத்து கிடையாது.

அதற்கெல்லாம் உச்சமாக, இன்றைக்கு ஆலயங்கள் இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்றன என்பதை எண்ணும் போது, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் அறநிலையத்துறையின் சார்பிலும் நம்முடைய ராமதாசு அடிகளார் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாகவும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்ற 75 இணைகளுக்கான இந்தத் திருமணங்கள்தான் என்பதை எடுத்துக்கூறி இன்றைக்கு நம் முன்னிலையிலே திருமணம் செய்துகொண்டுள்ள இந்த மணமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*- முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்*
*சென்னையை அடுத்துள்ள திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில் 19-6-98 அன்று 75 இணைகளுக்குத் திருமணம் நடத்திவைத்து, அலுவலக நுழைவு வாயில், அர்ச்சகர் குடியிருப்பு ஆகியவற்றைத் திறந்துவைத்து, இசைக் கலைஞர்களுக்கான குடியிருப்புக் கால்கோள் விழாவைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.*

★ ★ ★

# அறந்தழைக்க அரும்பணிகள்

## இந்து சமய அறநிலையத்துறையின்


### ஈராண்டுச் சாதனைகளில் சில...

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உயரிய வழிகாட்டுதலில், மக்கள் நல மேம்பாட்டிற்காகப் பல வழிகளிலும் பாடுபட்டு வரும் சமுதாய நல நிலையங்களாக நம் திருக்கோவில்கள் திகழ்ந்து வருகின்றன.

**இலவசத் திருமணங்கள்**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய இந்து மக்களுக்குத் திருக்கோவில்களின் சார்பில் இலவசமாகத் திருமணம் நடத்திவைக்கும் திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்படுகிறது.

இந்த இலவசத் திருமணத்திட்டத்தின் கீழ் 1996 டிசம்பர் முதல் இதுவரை மொத்தம் 1,031 இணைகளுக்கு தலா ரூ.3,000 வீதம் ரூ.30,93,000 செலவில் இலவசத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டிருப்பது அறநிலையத் துறையின் மகத்தான சாதனையாகும்.



**திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்துதல்**

திருக்கோயில்களில் வடமொழியிலேயே அருச்சனை செய்யப்பட்டு வந்த நிலையில், அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்தும், உச்ச நீதி மன்றத் தீர்ப்புரையின் அடிப்படையிலும், திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இன்றைய நிலையில் 4,331 திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் அருச்சனை செய்வதை நெறிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத் திருக்கோயில்களில் ஒரே மாதிரியான 108 தமிழ் அருச்சனை போற்றிகளைப் பயன்படுத்த குழுவின் பரிந்துரையின் தமிழ்த் திருமுறை நூல்களின் சொற்களைக் கொண்டு 108 போற்றிகள் தயாரித்து அச்சிடப்பட்டு வருகிறது. தமிழில் 2,326 இலட்சார்ச்சனைகளும், 14 கோடியருச்சனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

திருமுறைப் பதிகங்கள், திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்கள், திருமுருகாற்றுப்படை, நாலாயிர திவ்யப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களில் குறிப்பிட்ட பதிகங்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்படுகின்றன.

ஒலிபெருக்கிக் கருவிகள் மூலம் பக்திப் பாடல்கள் காலை-மாலை வேளைகளில் 1517 திருக்கோயில்களில் ஒலி பரப்பப்படுகின்றன.

தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, திருப்பாவை, திருக்குறள், நாலாயிர திவ்யப்பிரபந்தம் போன்ற நூல்களின் கருத்துக்களைத் தக்க சான்றோர்கள் - தமிழறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் 612 திருக்கோயில்களில் நடத்தப்படுகின்றன.

**தமிழ்ப்புலவர்கள் நியமனம்**

தமிழகத் திருக்கோயில்களில், இந்து சமயக் கருத்துக்களைப் பரப்புதல், சமயப் பிரச்சாரம் செய்தல், தலவரலாறு தொகுத்தல், திருக்கோயில் வரலாறுகளைப் பற்றிப் பக்தர்களுக்குக் கூறி வழிகாட்டுதல், சமயத் திருமறை நூல்களைப் பற்றி விரிவுரையாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் இதுவரை 133 தமிழ்ப்புலவர்கள் பணியமர்த்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 110 தமிழ்ப் புலவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.

இவர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதந்தோறும் ரூ.1500 திருக்கோயில் நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது.

### ஒரு காலப் பூசைத்திட்டம்

நலிந்த நிலையில் உள்ள 1000 திருக்கோவில் களில் ஒரு காலப் பூசைத்திட்டத்தை அறநிலையத் துறை மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகிறது.

பொதுமக்கள் தம் பங்காக ரூ.2500 மட்டும் திரட்டித் தந்தால், எந்தத் திருக்கோவிலுக்காக அத்தொகை வழங்கப் பட்டதோ அந்தத் திருக்கோவிலுக்கு அறநிலையத்துறை தன் பங்காக ரூ.22500 செலுத்தி, அக்கூடுதல் தொகை ரூ.25000 அத்திருக்கோவிலின் பெயரில் நிரந்தர வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை ஒரு கால பூசைக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி, ஏற்கெனவே 6260 திருக்கோயில்களுக்கு வைப்புநிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில், 1000 திருக்கோயில்களுக்கும் வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### கருணை இல்லம்

21 திருக்கோயில்களில், கருணை இல்லங்கள் (அன்பு இல்லம்) தொடங்கப்பட்டு, சுமார் 25 ஆண்டுகளில் 870 சிறுவர் மற்றும் சிறுமியர்கள் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளில், 22 திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டு, 341 சிறுவர்-சிறுமியர்கள் பயனடைந்துள்ளனர்.


கருணை இல்லச் சிறுவர்/சிறுமியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.600 வீதம் உணவு வகைக்கு செலவிடப் பட்டு வருகிறது. இதைத் தவிர உடைகள்/உறைவிடம்/மருத்துவ உதவி/பாடநூல்கள் அளித்தல் ஆகியவை இலவசமாகத் திருக்கோயில் நிதி மூலம் செய்யப்படுன்றன.

### தலவரலாறு வெளியிடுதல்

தமிழகத் திருக்கோயில்களின் தொன்மை மிக்க வரலாற்று விபரங்களை, பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், திருக்கோயில்களின் அருமை பெருமைகளை விளக்கும் தல வரலாறுகள்/தல புராணங்கள், பிள்ளைத் தமிழ், கலம்பகம் போன்றவை தயாரித்து வெளியிடுதல் திட்டத்தின் அடிப்படையில் 11-6-1998 அன்று மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு விழாவில் தமிழகத் திருக் கோயில்களுக்கான 504 தலவரலாறுகளும்,7 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் நூல்களும், 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### ஓய்வூதியத் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள்/பட்டாச்சாரியர்கள்/ஓதுவார்கள்/வேதபாராயணர்கள்/இசைக் கலைஞர்கள் ஆகியோர்களுக்கு மாதம் ரூ.350 வீதம் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. 9-8-1996 முதல் ஓய்வூதியம் ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தற்போது கூடுதல் 701 ஓய்வுபெற்ற பணியாளர்கள் ஓய்வூதியம் பெற்றுப் பயனடைகின்றனர்.



### திருக்கோயில் பணியாளர் நலன்

திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலனைப் பேணிக் காப்பதற்கும் அவர்களது ஊதியத்தைச் சீரமைப் பதற்கும் நால்வர் குழு அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு அரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கையினைப் பரிசீலனை செய்து ஆலய ஊழியர்களுக்கு 13-4-1998 அன்று அரசு பல சலுகைகளை அறிவித்துள்ளது. அவ்வறிவிப்பின்படி முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.3.23 கோடி அளவிலும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.5.73 கோடி அளவிலும் சலுகை பல அரசால் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ் இசைப் பள்ளிகள்

இளைய தலைமுறையினருக்கு முறையாக தமிழிசையைக் கற்பிக்க 8 சைவத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட தேவார இசைப் பள்ளியில் 93 மாணவர்களும், 7 வைணவத் திருக் கோயில்களில் தொடங்கப்பட்ட திவ்வியப் பிரபந்த இசைப்பள்ளியில் 98 மாணவர்களும் சேர்ந்து பயன்பெறுகின்றனர். உள்ளூர் மாணவர்களுக்கு ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.


### நாதசுர இசைப் பயிற்சிப் பள்ளி

திருக்கோயில்களில் இசைக்கப்படும் இசைக் கருவிகளான நாதசுரம், தவில் போன்ற கருவிகளை முறையோடு பயில,

10 திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட நாதசுரம்/தவில் பயிற்சிப் பள்ளிகளில் 88 மாணவர்கள் சேர்ந்து நாதசுர இசையும், 50 மாணவர்கள் சேர்ந்து தவில் இசையும் பயின்று பயன் பெறுகின்றனர்.

### புத்தொளிப் பயிற்சித் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள்/பட்டாச்சாரியர்கள்/ஓதுவார்கள்/கிராமக்கோயில் பூசாரிகள் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு பூசை முறைகளை ஆகம விதிகளின்படி செய்திட வகை செய்யும் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்கு 23 மையங்களில் தொடங்கப்பட்டு, 378 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



### நாதசுரம், தவில், தாளம் இசைக்குழு நியமனம்

நிதி வசதியற்ற புராதனமான திருக் கோயில்களில், நாதசுர மங்கள இசை மீண்டும் ஒலிக்கும் வகையில், முதற்கட்டமாக 26 புராதன திருக்கோயில்களில் நாதசுரம், தவில், தாளம் ஆகிய இசைக்குழு ஏற்படுத்தி, முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் ஊதியம் வழங்கிட, ஆலய மேம்பாட்டு நிதி வட்டியிலிருந்து ஒரு கோடி ரூபாய் தனி முதலீடு செய்து, அதன்மூலம் பெறப்படும் வட்டித் தொகையினை இத் திட்டத்திற்குப் பயன்படுத்த அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

### திருக்கோயில் ஓவியங்கள், சிற்பங்கள், திருவிழாக்கள், ஒலி-ஒளி நாடா தயாரித்தல்

திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய அம்சங்களை ஒலி, ஒளி நாடா மூலம் தயாரித்து நிரந்தர கலையம்சமாகப் பாது காத்திட முதற்கட்டமாக ஆறு முதுநிலைத் திருக் கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி-ஒளி நாடா தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் குடியிருப்புகளில் உள்ள இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

திருப்பணி - திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மூலம் இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் உள்ள 50 கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி அளித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### குடமுழுக்கு விழாக்கள்

தமிழகத்தில் உள்ள பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பெற்ற, சரித்திர முக்கியத்துவம் வாய்க்கப் பெற்ற திருக்கோயில்களில் முதற்கட்டமாக 1000 திருக் கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க 1996, 1997, 1998 மே மாதம் வரை 988 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. 1993 முதல் 1995 முடிய மொத்தம் 435 திருக்கோயில்களில் மட்டுமே குடமுழுக்கு விழா நடத்தப் பட்டுள்ளதை ஒப்பிட்டு நோக்கும்போது 1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் நடைபெற்ற குடமுழுக்கு விழாக்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### திருப்பணி மற்றும் இதர வேலைகள்

1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் மொத்தம் 1086 திருப்பணி மற்றும் இதர வேலைகள் நடைபெற்றுள்ளன. இவ்வேலைகளுக்கு ரூ.1580.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1993 முதல் 1995 வரையிலும் திருப்பணி மற்றும் இதர வேலைகள் எண்ணிக்கை 1145 மட்டும். இவ்வேலைகளுக்கு ரூ.1263.78 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

### கிராமக்கோவில் பூசாரிகள் ஒய்வூதியம்

அறநிலையக் கட்டுப் பாட்டில் இல்லாத, கிராமப் புறத்தில் உள்ள திருக் கோவில்களில் பணிபுரிந்த ஒய்வு பெற்ற பூசாரிக்கு மாதம் ரூ.500 வீதம் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 622 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

### சிறப்பு வழிபாடு

தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தும் வகையில் தமிழகத் திருக்கோவில்களில் ஆண்டுதோறும் விடுதலை நாள், அறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடு பொது விருந்து திருக்கோவில்களின் நிதியில் இருந்து நடத்தப்படுகிறது.

1997 ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாளிலிருந்து 31ஆம் நாள் வரை தமிழகத் திருக்கோவில்களில் மொத்தம் 630180 பொதுமக்களுக்கு சுதந்திரத் திருநாள் பொன்விழா பொது

**திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய அம்சங்களை ஒலி, ஒளி நாடா மூலம் தயாரித்து நிரந்தர கலையம்சமாகப் பாதுகாத்திட முதற்கட்டமாக ஆறு முதுநிலைத் திருக்கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி, ஒளி நாடா தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

விருந்து அளிக்கப்பட்டது. அதற்கு ரூ.47,076,690-05 திருக்கோவில் நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டது.

### 1998-99 நடப்புநிதியாண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

★ திருவாரூர் உலோகத்திருமேனிகள் பாதுகாப்பு மற்றும் பார்வை மையத்திற்கு ரூ.49.45 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்பட உள்ளது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ.20 இலட்சம் செலவிடப்படும்.

★ புதியதாக உருவாக்கப்பட்டவுள்ள அரியலூர், திருவள்ளூர், நாமக்கல், கரூர், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்படவுள்ள 8 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு, புதியதாக 8 மாருதி வேன்கள் ரூ.29 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

★ தமிழ்நாட்டில் .உள்ள 30,000 கல்வெட்டுக்களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டுப்புத்தகமாக வெளியிடப்பட உள்ளது. முதல்கட்டமாக, நடப்பு ஆண்டில் 10,000 கல்வெட்டுக்களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டுப் புத்தகமாக வெளியிட ரூ.8.25 இலட்சம் செலவிடப்படும்.

★ நிலை-3ல் 100 செயல் அலுவலர் பணியிடங்கள் மற்றும் நிலை-4ல் 100 செயல் அலுவலர் பணியிடங்கள் ஆக மொத்தம் 200 பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப் படும். இதற்காக ஆகும் செலவு ரூ.114.17 இலட்சமாகும்.

★ உதவி ஆணையர் நிலையில் உள்ள 7 திருக்கோயில் பணியிடங்களைத் துணை ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை-1ல் உள்ள 16 திருக்கோயில் பணியிடங்களை உதவி ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை-2ல் உள்ள 7 திருக்கோயில் பணியிடங்களை செயல் அலுவலர் நிலை-1க்கும், செயல் அலுவலர் நிலை 3ல் உள்ள 10 திருக்கோயில் பணியிடங்களை நிலை 2க்கும், செயல் அலுவலர் நிலை 4ல் உள்ள 8 திருக்கோயில் பணியிடங்களைச் செயல் அலுவலர் நிலை 3க்கும் நிலை உயர்வு செய்யப்படும். இதற்கு ஆகும் செலவினம் ரூ.8.14 இலட்சமாகும்.

★ திருக்கோயில்களில் தணிக்கை நிலுவைகளைக் குறைக்கப் புதியதாக 50 தணிக்கை ஆய்வர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்காக ஏற்படும் செலவினம் ரூ.27.68 இலட்சமாகும்.

★ பழனி, அருள்மிகுதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு புதிய கூடுதல் ஆணையர் பதவி ஏற்படுத்தப்படும். இதற்காகும் செலவினம்ரூ.1.68 இலட்சமாகும்.

★ அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக 100 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

★ இந்துசமய அறநிலையத்துறையில் உள்ள 10 மண்டல இணை ஆணையர் அலுவலங்களில் ரூ.10 இலட்சம் செலவில் 'கணிப்பொறி' வசதி செய்யப்படும்.

★ தற்போது ஆண்டுதோறும் திருக்கோயில் திருப்பணிக்காக வழங்கி வரும் அரசு மானியம் ரூ.45 இலட்சத்திலிருந்து, ரூ.75 இலட்சமாக உயர்த்துப்படுகிறது.

★ பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற 50 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்படும்.

★ ரூ.2.40 இலட்சம் செலவில் மங்களாசாசனம் மற்றும் பிரசித்தி பெற்ற சரித்திரப்புகழ் வாய்ந்த 20 திருக்கோயில்களில் நாதசுரக் கலைஞர்கள் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

★ ரூ.21 இலட்சம் செலவில் 99 திருக்கோயில்களில் கூடுதலாக 100 ஓதுவார்கள் நியமனம் செய்யப்படுவர்.

★ 10 திருக்கோயில்களில் ஒலி-ஒளி நாடா தயார் செய்யப்படும். இதற்காகும் செலவு ரூ.11 இலட்சமாகும்.

★ 1000 திருக்கோயில்களில் ஒருகால பூசை நிதியுதவித் திட்டம் கூடுதலாக ஏற்படுத்தப்படும். இது வகைக்கு ரூ.225 இலட்சம் செலவு ஏற்படும்.

★ திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்யப்படும்.

★ நகைகள் மதிப்பீட்டிற்கு உயர்மட்டக்குழு ஏற்படுத்தப்படும்.

★ திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்குவதற்காக 50 தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன.

★ ரூ.3.10 இலட்சம் செலவில் சைவத்திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யப் பிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தப்படும்.

★ புதிதாக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம், கடலூர் ஆகிய இடங்களில் உற்சவ விக்கிரகங்கள் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு பகுதி-2 திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த வகைக்கு ரூ.20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட, 20 திட்டங்களுக்கும் மொத்தம் ரூ.588.92 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# மணிக்கணக்கில் நிறைவேறும் மக்களின் தேவைகள்!

## கலைஞர் அரசு அறிவித்த "நமக்கு நாமே" திட்டம் - கனவுகளை நனவாக்குகிறது

### "நமக்கு நாமே" திட்டத்தின் ஆற்றல் - நடைமுறை நிரூபணம்

*'இந்து' நாளிதழிலிருந்து...(15. 6. 98)*






கேட்பதற்கு விநோதமாக இருக்கலாம்; ஆனாலும் உண்மையிலும் உண்மை! ஒற்றை மெழுகுவர்த்தி, நூறு மெழுகுவர்த்திகளுக்கு ஒளியூட்டுவதுபோல், உன்னதச் செயல் ஒன்று தொடர்ந்து வரும் உயரிய செயல்களுக்கெல்லாம் தூண்டுதலாக அமையும் என்பது நிரூபணம்.


திருச்சி - மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தின் சேதுராப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், தங்கள் கிராமத்தில் கால்நடை மருத்துவத் துணை நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று ஒருமித்த குரலில் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டனர்.

இதனை, "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் செயல்படுத்த இயலும் என்றும் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்த மறுகணமே, நிலக்கிழார் திரு.ஆர்.மூர்த்தி, தன்னுடைய நிலத்தை, கால்நடை மருத்துவமனை கட்டுவதற்கு இலவசமாகத் தர முன்வந்தார். உடன் மாவட்ட ஆட்சியர் 10 மூட்டை சிமெண்ட் வாங்குவதற்காக ரூ.1300-ஐ அன்பளிப்பாக வழங்குவதாகத் தெரிவித்தார். ஊராட்சித் தலைவர் திரு.ராமு, செங்கற்கள் இலவசமாக வழங்குவதாகவும், உள்ளூர் மக்களின் பங்காக ரூ.25,000 வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

தொடர்ந்து திரு.ஆறுமுகம், ரூ.10,000 அன்பளிப்பாகத் தருவதாகவும், அடித்தளம் அமைப்பதற்கான கருங்கற்களை வழங்குவதாக திரு.வளன்கன்னி என்பவரும் அந்த இடத்திலேயே அறிவித்தனர். தேவையான கொத்தனார்களையும் ஆண், பெண் வேலையாட்களையும் ஏற்பாடு செய்து தருவதற்கு கட்டட மேஸ்திரி திரு.பி.கே.மூர்த்தி முன்வந்தார். நாகமங்கலம் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு.கருப்பையா மூன்று மரக்கதவுகளையும், ஆறு சன்னல்களையும் அன்பளிப்பாக வழங்கிட முன்வந்தார். அடித்தளத்திற்கு சரளைக்கற்களை அளிப்பதாக திரு.சக்திவேல் தெரிவித்தார். லாரி உரிமையாளரான திரு.அழகிரிசாமி, கட்டடம் கட்டத்தேவையான மணலை எடுத்து வர தன்னுடைய லாரியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்தார். உள்ளூர் மக்களின் உற்சாகத்தைக் கண்ட மணிகண்டம் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் டாக்டர் சுந்தரராசன், மருத்துவமனைக்குக் தேவையான மேசை, நாற்காலிகள், மின் விசிறி ஆகியவற்றிற்கான தொகையைத் தருவதாக உறுதி கூறினார். பொதுமக்களிடமிருந்து வரவேற்பும், அமோகமான ஆதரவும் வந்ததால், உடனடியாகக் கால்கோள் நிகழ்ச்சியை நிகழ்த்த விரும்பினர்.

மக்களின் அமோக ஆதரவால் அரசின் உதவியுடன் கிராமத்து மக்களின் நீண்ட நாள் கனவு இரண்டே மணி நேரத்தில் நனவானது.





**இந்த "நமக்கு நாமே" திட்டம், தமிழகத்தின் உயிர்நாடிகளான பட்டிதொட்டிகள் கிராமப் பகுதிகளை வளமிக்கதாகவும் வசதிமிக்கதாகவும் ஆக்கிட மக்களும் மாநில அரசும் உழைப்பையும் உரிய நிதியையும் வழங்கிடத் தயாராக இருப்பதற்கு உயர்ந்ததோர் எடுத்துக்காட்டாகும்.**

# குமாரசாமி ராஜா

முன்னாள் தமிழக முதல்வர் திரு. குமாரசாமி ராஜா அவர்கள் நூற்றாண்டு விழாவை யொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராஜபாளையத்தில் - 8.7.1898ல் பிறந்தவர்தான் பூ.ச.குமாரசாமி ராஜா அவர்கள். இப்போது விருதுநகா மாவட்டத்தில் இவ்வூர் உள்ளது.

குமாரசாமி ராஜாவின் தந்தையார் பூசப்பாடி சஞ்சீவராஜா; குமாரசாமி ராஜா பிறந்த எட்டாவது நாளே ஈன்ற அன்னையார் முத்தம்மாள் இயற்கை எய்தினார். இவர்கள் குடும்பம் சுமார் 400 ஆண்டுக் காலத்திற்கு முன்பு - அதாவது கிருஷ்ண தேவராயர் காலத்தில் இராசபாளையத்திற்குக் குடிபெயர்ந்து வந்ததாகும்.

குமாரசாமி ராஜாவின் வாழ்க்கை இளமையிலிருந்தே தனித்தன்மை வாய்ந்தது. அவருடைய இளமை வாழ்க்கை உள்ளத் துணிச்சலையும், உறுதிப்பாட்டையும் தடைகள் வரினும் தளராது தயங்காது செல்லும் ஊக்கத்தையும் அவருக்கு அளித்தது. எட்டு நாள் குழந்தையாக இருக்கும் போதே தாயை இழந்தார். மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார்.



உடன்பிறந்தார் யாருமில்லை. அவருடைய தந்தைக்கும் உடன்பிறந்தார் இல்லை. எனவே தமது வம்சத்தின் ஒரே குலக் கொழுந்தாய் தந்தைவழிப் பாட்டியின் பாராமரிப்பில் வளரலானார். அருமைப் பேரனை அகலவிடாது அருகே வைத்துக் கொள்ள, பாட்டி முயன்றாலும் பேரனுக்கோ துள்ளலும், துடிப்புமாக தோழர்களோடு விளையாடு வதிலேதான் விருப்பம் இருந்தது. இந்தச் சுதந்திர உணர்வே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பிற்காலத்தில் ஈடுபடுவதற்கு ஆதரமாக அமைந்தது.

தொடக்கக் கல்வியை உள்ளூரில் முடித்து, உயர்நிலைப் பள்ளிக் கல்விக்காக திருவில்லிப்புத்தூர் சென்றார். படிப்பை விட விளையாட்டிலே தான் அவரது திறமை வெளிப்பட்டது. அந்த இளம் பருவத்திலேயே பாடப் புத்தகங்களை விட நாளிதழ்களில் நாட்டம் அதிகம் ஏற்பட்டது.

அன்னிபெசன்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

அவரது வெடிப்புறப் பேசும் தன்மையும், வனப்புமிக்க வாலிபத் தோற்றமும், எவருக்கும் உதவும் ஈரநெஞ்சும் மாணவர்கள் நடுவேமட்டுமல்லாமல் மக்கள் மத்தியிலும் அவருக்குப் பெரும் செல்வாக்கைப் பெற்றுத்தந்தன.

1919-ல் அவர் திருவில்லிபுத்தூரில் தமது உயர்நிலைப் பள்ளிக் கல்வியை நிறுத்திவிட்டு இராஜபாளையத்திலேயே தங்கத் தொடங்கினார். அந்த ஆண்டு அவரது வாழ்வில் மறக்க முடியாத ஆண்டு - அண்ணல் காந்தியடிகளை அவர் சந்தித்த ஆண்டு!

காந்தியடிகளைக் கண்டதும், அவரால் கவரப்பட்ட குமாரசாமி ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியா கிரகத்தில் ஈடுபட்டார். காங்கிரஸ் இயக்கம் அவரது மூச்சும் பேச்சும் ஆனது.

1912-ஆம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நடந்தது. 1919ல் மனைவி மறைந்தார். 1920, மே மாதத்தில் அவர் மறுமணம் செய்துகொண்டார்.

காங்கிரஸ் பணிகளிலே தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்ட குமாரசாமி மதுவிலக்கு பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தீண்டாமை ஒழிப்பு, தமது பகுதியிலே குடிசைத் தொழிலாகக் கதரை வளர்ப்பது ஆகியவற்றில் அவரது பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஒவ்வொரு அரசியல் தொண்டரையும், சமூகத் தொண்டரையும் ஆதரிக்கும் புகலிடமாக அவரது இல்லம் விளங்கியது.

கூட்டுறவுத் தத்துவத்தில் நாட்டம் கொண்டிருந்த குமாரசாமி பல கூட்டுறவு அமைப்புகளின் தலைவராக விளங்கினார். இன்று புகழ்பெற்று விளங்கும் பூபதி ராஜா கூட்டுறவு வங்கியைத் தொடங்கிய பெருமை இவரையே சாரும். 1924 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கூட்டுறவு வங்கி, இன்று மகத்தான வளர்ச்சி பெற்று குமாரசாமி ராஜா அவர்களின் உழைப்பையும், முயற்சியையும் உலகிற்கு அறிவித்து நிற்கிறது. இராஜபாளையம் பஞ்சாயத்து தலைவராகவும், தாலுகா கழகம் மற்றும் மாவட்டக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் பல்லாண்டு காலம் அவர் பணிபுரிந்துள்ளார்.

1932-ஆம் ஆண்டு அன்னியர் ஆட்சியை எதிர்த்துப் போரடியமைக்காக ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். இந்திய அரசியல் வரைபடத்தில் இராஜபாளையத்திற்கு ஒரு தனி இடம் பெற்றுத் தந்தது குமாரசாமி ராஜா அவர்களின் தியாகத் தலைமையேயாகும். எண்ணமும், சொல்லும், செயலும் அவரிடத்தில் ஒன்றாகவே விளங்கின. இந்த மகத்தான பண்பே அவரை மாபெரும் தலைவராக ஆக்கியது.

1934 ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் முதன் முதலாகச் சட்டசபைக்குப் போட்டியிட்ட போது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியின் வேட்பாளராக குமாரசாமி ராஜா நின்றார். தேர்தலில் அவர் பெற்ற வெற்றி ஈடுஇணையில்லாதது. பதிவான வாக்குகளில் 98.5 சதவிகிதம் வாக்குகளை அவர் பெற்றார்.


1936 ஆம் ஆண்டு காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினரானார்.

1938 - இல் 40 வது தமிழ்நாடு அரசியல் மாநாடு நடைபெற்றபோது வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து குமாரசாமி ராஜா அரும்பணியாற்றினார்.

திரு.காமராஜ் அவர்களும், திரு.ஆர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் அந்த வரவேற்புக் குழுவின்

**முன்னாள் முதலமைச்சர் பி.எஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா நினைவு மண்டபம் மற்றும் திருமண மண்டப அமைப்புப் பணிகளை மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க.முத்துசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கிருஷ்ணன் ஆகியோர் பார்வையிடுகிறார்கள்.**







செயலாளர்களாக விளங்கினார்கள். காங்கிரசின் தேசிய மாநாடு போல அது அமைந்தது. அப்போதைய முதலமைச்சர் திரு.ராஜாஜி அவர்களும் ஏனைய அமைச்சர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

1939 - இல் இரண்டாம் உலகப் பெரும் போர் நடைபெற்றவேளையில், இந்தியாவின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போர் முயற்சிகளைத் திணித்தபோது காங்கிரஸ் அரசுகள் பிரிட்டிஷ் இந்திய அரசோடு ஒத்துழைக்க மறுத்தன. எனவே, சட்டசபைகளும், அமைச்சரவைகளும் கலைக்கப்பட்டன. குமாரசாமி ராஜா சட்டமன்ற உறுப்பினர் பதவி இழந்தார்.

தனி நபர் சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டதால் ஒன்பது மாதச் சிறைத் தண்டனையும், 300 ரூபாய் அபராதத் தொகையும் விதிக்கப்பட்டார். சிறைச்சாலையில் கூட தனித்து ஒதுங்கியிராமல் சமையலறைப் பொறுப்பேற்று மற்றவர்க்கு வயிறார உணவூட்டி மகிழ்ந்தார்.

விடுதலைக்குப் பிறகு மறுபடியும் உள்ளாட்சி நிர்வாகம், மற்றும் கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபட்டார். மாணவர்களுக்கான 'ஸ்கௌட்' இயக்கம் இவரைப் பெரிதும் கவர்ந்தது. சென்னை, அடையாற்றில் தலைமையகம் கொண்டிருந்த 'இந்துஸ்தான் ஸ்கௌட் அசோசியேஷனுக்குத்' தலைவராக விளங்கினார்.

1946 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவில்லிப்புத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு உறுப்பினராகப் போட்டியின்றித் தேர்வு பெற்றார்.

திரு.டி.பிரகாசம் தலைமையில் அமைந்த அமைச்சரவையில், வேளாண்மைத்துறை அமைச்சுப் பொறுப்பு அவரைத் தேடிவந்தது. முதலமைச்சர் பிரகாசம் அவர்களுக்கும் தமக்கும் ஏற்பட்டக் கருத்து வேற்றுமையின் காரணமாக 1947-பிப்ரவரியில் குமாராசாமி ராஜா அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

1949-ஏப்ரலில், திரு.குமாரசாமி ராஜா அவர்கள் சென்னை மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். அவரது அமைச்சரவை ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பத்தைப் போல விளங்கியது. தமது அமைச்சரவையின் உறுப்பினர்களிடம் காட்டிவந்த அன்பும், மதிப்பும், அவர்கள் இவரிடம் காட்டிவந்த அன்பும் - மதிப்பும் குறிப்பிடத்தக்க அளவில் அமைந்திருந்தன.

அவரது ஆட்சிக் காலத்தில் அவர் கொண்டுவந்த மிகப்பெரிய சீர்திருத்தம் நிர்வாகத் துறையிடமிருந்து நீதித்துறையைத் தனியே பிரித்ததாகும். இவ்வகையில் முன்னோடியாக விளங்கி ஏனைய மாநிலங்களும் பின்பற்ற வழிவகுத்தார்.

ஒரு முடிவை அவர் எடுத்த பிறகு, எதற்காகவும் யாருக்காகவும் அதிலிருந்து பின்வாங்க மாட்டார். அபத்தமான கோரிக்கைகளை தமக்கு வேண்டியவர்கள் வைத்தாலும் அப்போதே கண்டித்தார். சட்டத்தையும், நீதியையும் கண்களாக மதித்த ராஜா அடுத்த தேர்தலைப் பற்றி நினைத்ததில்லை. எனவே, 1952-ல் ஜனவரி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார்.

இயல்பாகவே கலையிலும், கலாச்சாரத்திலும் பேரார்வம் கொண்டவர் குமாரசாமி ராஜா. ஆகவே தீவிர அரசியலிலிருந்து தம்மை விடுத்துக் கொண்டவுடன், அந்தக் கலைகளை வளர்ப்பதற்காகக் காந்தி கலை மண்டபத்தைத் தோற்றுவித்தார். அவருடைய இல்லமும் உடைமைகளும் அந்த மன்றத்திற்கே வழங்கப்பட்டன.

மன்ற வளர்ச்சிக்கான பணிகளில் அவர் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தபோது, ஆளுநர் பதவி அவரைத் தேடி வந்தது. காந்தி கலை மன்றத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தாலும் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரிசா மாநில ஆளுநராகப் பதவியேற்றார்.

இரண்டாண்டுகளுக்கு மேல் அப்பணியில் இருந்த திரு.குமாராசாமி ராஜா உடல்நலம் சீர்குலைந்ததன் காரணமாக அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

இராஜபாளையம் திரும்பிய திரு.ராஜா, காந்தி கலை மன்றத்தின் வளர்ச்சிப் பணிகளில் முழுமூச்சாக ஈடுபட்டார்.

1941-ல் அவர் சிறையிலிருந்து வெளியான போதிருந்தே சர்க்கரை நோயின் கடுமை தொடங்கியிருந்தது. இடையில்லாத பொதுநலப் பணிகளால், கடுமையான உழைப்பால் அவர் உடல், சீர்கேடு அடைந்தது. 14-3-1957 அன்று ஐதராபாத்திலிருந்து சென்னை திரும்பிய திரு.ராஜா 15-3-1957 அன்று காலையில் வழக்கம்போல் நண்பர்களைக் காணப் புறப்பட்டார். காலை 9.00 மணிக்கு, திடீரென மயக்கமுற்று சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அன்று மாலை 7.00 மணிக்கு மாரடைப்பு கா, காரணமாக உயிர் நீத்தார்.

மறுநாள் அவரது பூத உடலுக்கு இராஜபாளையத்தில் இந்தியத் திருநாடே அஞ்சலி செலுத்தியது.

1978ல் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.சஞ்சீவரெட்டி அவர்கள் அமரர் குமாரசாமி ராஜா அவர்களின் திருவுருவச் சிலையை இராஜபாளையத்தில் திறந்து வைத்தார்.

8.7.98 அன்று முன்னாள் முதலமைச்சர் பிஎஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், ஜவஹர் திடலில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்புடன் நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சிங்கராஜா கோட்டை ராஜாக்கள் சங்கம் கட்டியுள்ள பி.எஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா திருமண மண்டபம், திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள குமாரசாமி ராஜா திருவுருவச்சிலை, புதுப்பிக்கப்பட்டுள்ள காந்தி கலை மன்றம், நூல் நிலையம், பி.எஸ்.குமாராசமி ராஜா திருவுருவப்படம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, குமாரசாமி ராஜா நினைவிடத்தில் அணையா ஜோதி ஏற்றி விழாப்பேருரையாற்றுகிறார்கள்.

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டில் குமாரசாமி ராஜா அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. நாட்டுக்கும், மொழிக்கும் பாடுபட்ட நல்லோரை, அவர்களது நினைவை, போற்றிப் பாராட்டும் கலைஞர் அவர்கள் அரசின் சார்பில் 'குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பொருத்தமானது, போற்றிப்புகழத்தக்கது. ★

# கலைஞர் ஆட்சியில் விருதுநகர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.*
*வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.*

**ச. கிருஷ்ணன், இ.ஆ.ப.,** மாவட்ட ஆட்சித் தலைவர்

- என்றார் மகாகவி பாரதியார் அவர்கள். அவ்வகையில் அரசு மக்களின் நல் வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் பயன்கள் காலதாமதமின்றி விரைவாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளின் மூலமாக அரசின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு விரைவாகச்சென்றடைந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அரசு பொறுப்பேற்றவுடன் சமூகநலத்துறையின் வாயிலாக ஏழை மகளிருக்கு திருமண உதவியாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்திற்கு 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை வெளியிட்டது. இதன்பேரில் விருதுநகர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் இந்நாள் வரை 2,059 பேருக்கு ரூ.2,05,90,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1,83,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.67,20,000 அதிகம் ஆகும். விதவை திருமண உதவித் திட்டத்தின் கீழ் 9 பேருக்கு ரூ.55,000 வழங்கப் பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் சென்ற நிதி ஆண்டு வரை 75 பேருக்கு ரூ.1,96,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1,50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் கலப்பு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 22 பேருக்கு ரூ.2,70,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.1,70,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத் தின் கீழ் 6 பேருக்கு ரூ.17,000 வழங்கப் பட்டுள்ளது. நடப் பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



விதவை, கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்றோருக்கு மொத்தம் 130 பேருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப் பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இதுவரை 966 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**வி**ருதுபட்டி என்று முன்னாளில் அழைக்கப்பட்ட விருது நகரைத் தலைநகரமாக கொண்ட விருதுநகர் மாவட்டம் 1985 ஆம் ஆண்டு மார்ச் 15 நாள் உருவாக்கப்பட்டது. இம்மாவட்டம் அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய ஆறு சட்டப்பேரவைத் தொகுதிகளையும் சிவகாசி நாடாளுமன்றத் தொகுதியையும் கொண்டது. இதன் பரப்பளவு 4,243,2 ச. கி.மீ. மக்கள் தொகை 15,65,037.

குமாரசாமி ராஜா, காமராஜர் ஆகிய முதலமைச்சர்களை தமிழ்நாட்டுக்கு அளித்து பெருமை கொண்ட மாவட்டம் இது. சென்னை மாகாணம் என்றப் பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றக் கோரி தனது இன்னுயிரை இழந்த வீரர் சங்கரலிங்கனார் தோன்றிய மாவட்டம் இது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் இம்மாவட்டம் அடைந்த வளர்ச்சி விவரங்கள் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 15.034 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.30,06,800 வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்கு 17 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவைத் தாய்மார்கள் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,258 மாணவர்களுக்கு ரூ.83,500 மதிப்புள்ள இலவச பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 65 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விருதுநகர் அரசு குழந்தைகள் காப்பகத்தில் 180 ஆதரவற்ற குழந்தைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, உறைவிடம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இலவச பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 1996-97 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.518.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 1,580 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.593.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 903 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### *விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.ச.கிருஷ்ணன் இ.ஆ.ப அவர்களைச் சந்தித்தபொழுது, மாவட்ட வளர்ச்சி பற்றி அவர் குறிப்பிட்டவை :*

"கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டில், வளர்ச்சித் திட்டங்களை முடுக்கி விட்டு, விரைந்து பணியாற்றிடும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டுள்ள "நமக்கு நாமே" - திட்டத்தைப் பொறுத்தவரையில், நல்ல ஈடுபாட் டோடு, பொதுமக்கள் பங்கேற்கின்றனர். ஜோகில்பட்டி என்ற கிராமத்தில் மாறுகால், வரத்துக்கால் சீரமைப்பு போன்ற பணிகளில் அரசோடு பங்கேற்று செயல்படுத்துவதில் கிராம மக்கள் அதிக அக்கறை காட்டிப் பணியாற்றினர். பள்ளிக் கட்டடங்கள், ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் போன்ற பொதுக் காரியங்களுக்கு மனமுவந்து இனாமாக நிலம் தர முன் வருகின்றனர். மறவன் குளம் என்ற பகுதியில், 40,50 ஆண்டுகளாகத் தூர் வாராமல் கிடந்த குளம் கிராம மக்களின் ஒத்துழைப் பில் சீரமைக்கப்பட்டது. முத்துராமலிங்க புரம் என்ற ஊரில், மேனிலைப்பள்ளி மேம்பாட்டிற்கு, கிராமமக்கள் மனமுவந்து நிதியுதவியளித்துள்ளனர்.

சிவகாசிக்கு அருகில் ஆனையூர் என்ற கிராமத்தின் குடிநீர்த் திட்டம் பொதுமக்களின் முழு ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில் முறைகேடுகள் ஏதும் நடந்துவிடாமல் மிகுந்த முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதனடிப்படையில், திருமண நாளுக்கு முன்னர் விண்ணப்பிக்கும்பொழுது, உரிய சான்றிதழ்கள் அனைத்தையும் இணைக்க இயலாவிட்டால், முதலில் விண்ணப்பத்தையும், அழைப்பிதழையும் இணைத்து மனுச் செய்துவிட்டுப் பின்னர் உரிய சான்றிதழ்களைக் கொடுத்தால் போதுமானது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வுதவித் தொகைகள் பொதுமக்கள் கூடுகின்ற ஏதாவதொரு பொதுநிகழ்ச்சியில் வழங்கப்படுகின்றன. அதேபோன்று இலவசப் பட்டாக்கள், தொழில்கருவிகள் போன்றவற்றையும் பொதுமக்கள் முன்னிலையில் வழங்குவதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.


தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 85 பள்ளிகள் உள்ளன. இவற்றில் சுமார் 4,500 குழந்தைத் தொழிலாள மாணவர்கள் பயிலுகின்றனர். இத்தகையோர் பள்ளியில் பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில், இப்பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தை விரிவு படுத்தியுள்ளோம்.

குழந்தைத் தொழிலாளர் நிதித் திட்டத்தின் கீழ், தையல்கருவிகள், தொழில் கருவிகள், தளவாடங்கள், விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிடும் வகையில், ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.10,000 வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறைக் குடியிருப்புகளில், அடிப்படை வசதிகள் குறித்த குறைபாடுகளைக் களையும் அடிப்படையில் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று, காவலர்களின் குறைகள் கேட்கப்பட்டன. பொதுப்பணித்துறை, நகராட்சி, மின்துறை அலுவலர்களுடன் அவ்விடத்திலேயே விவாதித்து தெருவிளக்கு, குடிநீர் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வகை செய்யப்பட்டது. அரசு ஆணையின்படி தனித்தனி மின்மீட்டர்கள் பொருத்தும் பணியில் நிலவிய இடர்ப்பாடுகள் களையப்பட்டன.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு குளம் அல்லது ஒரு ஊரணி அல்லது கசிவுநீர்க்குட்டை எனும் அடிப்படையில், ஒவ்வொன்றிற்கும் ரூ.2.5 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை செலவிட உத்தேசித்துள்ளோம்.

இரா.பரதன்
துணை இயக்குநர்



## இந்திரா ஆவாஸ் யோஜனா

இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டு ரூ.455.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு1884 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.416.215 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 589 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 718 தொகுப்பு வீடுகள் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

## வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு ரூ.727.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மொத்தம் 934 பணிகள் முடிக்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.1087.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 706 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 160 பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.1,087.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ. 219.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதன் மூலம் 3,660 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் ரூபாய் 223 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதன் மூலம் 2,729 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.223 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

## சுயவேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் 407 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 1997-98 ஆம் ஆண்டில் 331 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1998-99 ஆம் ஆண்டில் ரூ.38.004 இலட்சம் செலவில் 800 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1997-98 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.198.25 இலட்சம் ஆகும். மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 525 கழிவறை கட்டும் பணிகளும், 7 பள்ளிக் கட்டடங்களும், 110 தொகுப்பு வீடுகளும், 27 சாலைப் பணிகளும் போன்ற 111 பணிகள் எடுக்கப்பட்டு 38 பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதி பணிகள் நடைபெற்று வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 6 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய வெள்ளூர், பாளையம்பட்டி, மகாராஜாபுரம், கிருஷ்ணாபுரம், காயில்பட்டி, ஆலடிப்பட்டி ஆகிய 6 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென அரசு ரூ.216.818 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

## நமக்கு நாமே திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1997-98 ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் பாலவநத்தம், கன்னிசேரிபுதூர், ஜோகில்பட்டி, நல்லாங்குளம், உலக்குடி, கிருஷ்ணப்பேரி, ஊமத்தம்பட்டி, அப்பைநாயக்கன்பட்டி, குன்னூர், திருவண்ணாமலை, வடக்கு தேவதானம், கிருஷ்ணாபுரம் ஆகிய 12 கிராமங்ககள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.13 இலட்சம் செலவில் 93 பணிகள் எடுக்கப்பட்டு 87 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் ஆவுடையாபுரம், சத்திரப்பட்டி, சான்சாபுரம், வலையப்பட்டி, ஆனையூர், பிள்ளையார் நத்தம், சத்திரப்பட்டி, சத்திரம்புளியங்குளம், மண்டப சாலை, நாலூர், சூலக்கரை ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.27,45,000 செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.184 இலட்சங்கள் நிதி பெறப்பட்டு மொத்தம் 115 பணிகள் 465 ஹெக்டேர் மற்றும் 153 கி.மீட்டர் அளவில் மேற்கொள்ளப் பட்டன.

1997-98 ஆம் ஆண்டில் ரூ.115 இலட்சம் நிதி பெறப்பட்டு 57 பணிகள் 21.60 ஹெக்டேர் மற்றும் 13 கி.மீட்டருக்கு மேற்கொள்ளப்பட்டன.

## விருதுநகர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தலைநகர் | : | விருதுநகர் |
| பரப்பு | : | 4,243.2 ச.கி.மீ. |
| மக்கள் தொகை | : | 15,65,037 |
| ஆண்கள் | : | 7,84,912 |
| பெண்கள் | : | 7,80,125 |
| வளர்ச்சி விகிதம் (1981-91) | : | 15.92% |
| எழுத்தறிவு | : | 8,52,680 |
| மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.) | : | 63 |

### நகராட்சி : 6

இராசபாளையம், அருப்புக்கோட்டை, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சாத்தூர்.

### சட்டபேரவைத் தொகுதிகள் : 6

அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராசப்பாளையம்

### பாராளுமன்றத் தொகுதி : 1

சிவகாசி

### வருவாய் நிர்வாகம்

#### கோட்டங்கள் : 2

அருப்புக்கோட்டை, சிவகாசி

### வட்டங்கள்: 7

ஸ்ரீவில்லிபுத்தூர், இராசபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், திருச்சுழி (காரியப்பட்டி புதிய தாலுகாவாக அரசு அறிவித்துள்ளது).

### டவுன் பஞ்சாயத்துக்கள் : 10

திருத்தங்கல், வந்திராமிருப்பு, சேத்தூர், மம்சாபுரம், சுந்தரபாண்டியம், காரியப்பட்டி, செட்டியார்பட்டி, வ.புதுப்பட்டி, எஸ்.கொடிகுளம், மல்லாங்கிணறு.

### ஊராட்சி ஒன்றியம்: 11

அருப்புக்கோட்டை, விருதுநகர், காரியப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி, இராசபாளையம், ஸ்ரீவில்விபுத்தூர், வந்திராமிருப்பு, சிவகாசி, வெம்பக்கோட்டை, சாத்தூர்

### கல்வி

பள்ளிகள் 1,416 (அரசு மற்றும் தனியார்), கல்லூரிகள் 11

### தொழிற்சாலைகள்

மாவட்டம் முழுமையும் சுமார் 3,932 தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. லித்தோ பிரஸ் 120 உள்ளன. இவைதவிர சென்னை சிமெண்ட் ஆலை மற்றும் தமிழ்நாடு/சிமெண்ட் ஆலை போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

### மழையளவு

சராசரி 811.7 மி.மீ.

### ஆறுகள்

அர்ஜுனா ஆறு, குண்டாறு, வைப்பாறு மற்றும் கௌசிக ஆறு

#### குறிப்பிடத்தக்கோர்

குமாராசாமி ராஜா (ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதல் முதலமைச்சர்,) காமராசர்.

#### வழிபாட்டிடங்கள் :

ஆண்டாள் ஆலயம், ஸ்ரீவில்விபுத்தூர்; ரமண மகரிஷி பிறந்த இடம். திருச்சுழி; மாரியம்மன் ஆலயம், இருக்கண்குடி; அய்யனார் கோயில், இராசபாளையம்; வத்திராமிருப்பு அருகில் அர்சுனாபுரம் கிராமத்தையொட்டி நல்லதங்காள் கோயில்.

### சிறப்புகள் . :

சிவகாசி, பட்டாசு/தீப்பெட்டித் தொழில் மூலம் "இந்தியாவின் ஜப்பான்" என்று அழைக்கப்படுகிறது.

### வரலாறு

முற்காலத்தில் பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. 1985 மார்ச் 15 ஆம் தேதி இம்மாவட்டம் உருவாக்கப்பட்டது.

### அமைவிடம்

கிழக்கில் இராமநாதபுரம் மாவட்டம்; வடக்கில் மதுரை, சிவகங்கை; தெற்கில் தூத்துக்குடி, திருநெல்வேலி, மேற்கில் கேரள மாநிலம்.

---

1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.46 இலட்சங்கள் நிதி பெறப்பட்டு 51 பணிகள் 155 ஹெக்டேர் மற்றும் 3 கி.மீட்டருக்கு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வேளாண்மைத்துறை

வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறுத் திட்டங்களை உருவாக்கி விவசாயிகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுத்து திட்டங்களை சிறப்புற அரசு செயல்படுத்தி வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் மாநில திட்டங்களுக்கு அரசு ரூ.1,51,43,800 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,501 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய அரசு திட்டங்களுக்கு ரூ.17,17,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,107 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களுக்கு ரூ.54,25,200 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13,545 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள். மொத்தத்தில் விவசாயத் திட்டங்களுக்கு ரூ.2,22,70,700 நிதி ஒதுக்கப்பட்டு, இதன் மூலம் 18,153 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

1997-98 ஆம் ஆண்டில் மாநில திட்டங்களுக்கு ரூ.1,89,00,970 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12,097

விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள். மைய அரசுத் திட்டங்களுக்கு ரூ.14,77,500 நிதி ஒதுக்கப்பட்டு, இதன் மூலம் 2,498 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

மைய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களுக்கு ரூ.56,10,200 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.2,58,00,667 ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 32,378 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

1996-97 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 26,369 ஹெக்டேரில், 1,17,052 மெட்ரிக் டன். தானியங்கள் உற்பத்தி 22,657 ஹெக்டேரில், 32,526 மெட்ரிக் டன். பயறு வகைகள் உற்பத்தி 21,836 ஹெக்டேரில், 7,858 மெட்ரிக் டன். பருத்தி உற்பத்தி 33,491 ஹெக்டேரில் 26,483 மெட்ரிக் டன். கரும்பு 3,759 ஹெக்டேரில் 25,140 மெட்ரிக் டன். கடலை உற்பத்தி 12,246 ஹெக்டேரில், 13,183 மெட்ரிக் டன். எள் உற்பத்தி 5,687 ஹெக்டேரில், 3,181 மெட்ரிக் டன். சோயா மொச்சை 103 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 49 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1,28,241 ஹெக்டேரில் பயிர் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 37,338 ஹெக்டேரில் 1,75,078 மெட்ரிக் டன். தானியம் உற்பத்தி 25,290 ஹெக்டேரில் 44,952 மெட்ரிக் டன். பயறு வகைகள் உற்பத்தி 25,095 ஹெக்டேரில் 9,562 மெட்ரிக் டன்.

பருத்தி 38,578 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 71,879 மெட்ரிக் டன்னும், கரும்பு 2,951 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 26,559 மெட்ரிக் டன்னும், கடலை 13,605 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 12,380 மெட்ரிக் டன்னும், எள் 6,023 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 1,788 மெட்ரிக் டன்னும், சூரியகாந்தி 3,189 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 1,317 மெட்ரிக் டன்னும், சோயா மொச்சை 67 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 54 மெட்ரிக் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் நெல் 62 ஹெக்டேரிலும், தானியம் 403 ஹெக்டேரிலும், பயறு வகைகள் 504 ஹெக்டேரிலும், பருத்தி 1,570 ஹெக்டேரிலும், கரும்பு 478 ஹெக்டேரிலும், கடலை 228 ஹெக்டேரிலும், எள் 237 ஹெக்டேரிலும் மொத்தத்தில் 3,482 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் கீழ் ரூ. 779.31 இலட்சம் நிதி செலவிடப்பட்டு, 211 குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் வாயிலாக 1,95,453 பேர் பயனடைந்துள்ளனர்.


## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் 1996 ஏப்ரல் திங்கள் முதல் 1998 மே திங்கள் முடிய விவசாயத்திற்காக 958 புதிய மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்த தொழில் நிறுவனங்களுக்காக 1,057 புதிய மின் இணைப்புகளும், 539 கூடுதல் மின்பளு இணைப்புகளும், 22 உயர் அழுத்த மின் இணைப்புகளும், 2,263 குடியிருப்புகளுக்கு புதிய மின் இணைப்புகளும், 197 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 5,357 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக 4 புதிய துணை மின் நிலையங்கள் ரூ.586.78 இலட்சம் செலவிலும், 3 புதிய கப்பாசிட்டர்கள் ரூ.30 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

5 துணை மின் நிலையங்களில் மின் மாற்றியின் திறனை உயர்த்திட ரூ.287.52 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.



மாவட்டத்தில் 4 இடங்களில் 38 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ.394 இலட்சம் மதிப்பில் புதிய மின் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்யும் வகையில் 20 கிராமங்களில் ரூ.35.5 இலட்சம் செலவில் மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இராசாபாளையத்திற்கு ரூ.503 இலட்சம் செலவில் 23 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. சிவகாசி நகரில் ரூ.590 இலட்சம் செலவில் 20 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## மாவட்டத் தொழில் மையம்

விருதுநகர் மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் மாவட்டத்தொழில் மையத்தின் மூலம் 4,413 பேருக்கு சிறு தொழில் துவங்க தற்காலிகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 3,311 பேருக்கு சிறு தொழில் துவங்க நிரந்தர சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 11,633 பேருக்கு வேலைவாய்ப்பும், 1,000 பேருக்கு குடிசைத் தொழில் செய்ய சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு, அதன் மூலம் 1,116 பேருக்கு வேலை வாய்ப்பும், 710 பேருக்கு கைவினைத் தொழில் துவங்கச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 742 பேருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளன.



பராதப் பிரதமரின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் 1,062 பேருக்கு தொழில் துவங்க ரூ.540.94 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பின் தங்கிய பகுதிகளில் தொழில் துவங்குவதற்காக 40 பேருக்கு மாநில மூலதன மானியம் மற்றும் சிறப்பு மூலதன மானியமாக ரூ.89.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 417 பேருக்கு குறைந்த மின் அழுத்த மின் மானியமாக ரூ.143.33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 62 பேருக்கு ஜெனரேட்டர் வாங்குவதற்கு மானியமாக ரூ.19.08 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குடிசைத்தொழில் துவங்க 38 பேருக்கு ரூ.5.29 இலட்சம், கைவினைத் தொழில் துவங்க 20 பேருக்கு ரூ.1.07 இலட்சம், சிறு தொழில் துவங்க 84 பேருக்கு ரூ.368.28 இலட்சம் கடனுதவி வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளன.

## மாவட்ட மறுவாழ்வு மையம்

மாவட்ட மறுவாழ்வு மையத்தின் மூலம் 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் பார்வையுள்ளவர், பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.30 ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடும் உடல் ஊனமுற்றோர்/மனவளர்ச்சி குன்றியோருக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 160 பேருக்கு ரூ.2,52,000 நிதி வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமானவரை உடல் ஊனம் அல்லாதோர் திருமணம் செய்துகொள்ளும் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.15 ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது.


முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பேருக்கு ரூ.7,200 நிதி வழங்கப்பட்டுள்ளது.

1 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 886 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3,59,275 வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தின் கீழ் 207 பேருக்கு பஸ் பாஸ் வழங்கப்பட்டு அதற்காக ரூ.66,139 செலவிடப்பட்டுள்ளது.

மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 107 பேருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.2,67,500 செலவிடப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.15,500 செலவிடப்பட்டுள்ளது.



வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம்

பார்வையற்றோருக்கு கருப்புக் கண்ணாடி வழங்கும் திட்டத்தின் கீழ் 40 பேருக்கு கருப்புக் கண்ணாடி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.4 ஆயிரம் செலவிடப் பட்டுள்ளது.

காது கேளாதோருக்கு காதொலி கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 117 பேருக்கு காதொலி கருவி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.1,17,000 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கு பிரெய்லி கடிகாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பேருக்கு பிரெய்லி கடிகாரம் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.2,750 செலவிடப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கு மடக்கு ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தின் கீழ் 39 பேருக்கு மடக்கு ஊன்றுகோல் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.3,425 செலவிடப்பட்டுள்ளது.

காலிப்பர் கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 34 பேருக்கு காலிப்பர் கருவி வழங்கப்பட்டு, அதற்காக ரூ.43,600 செலவிடப்பட்டுள்ளது.

ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பேருக்கு ஊன்றுகோல் வழங்கப்பட்டு, அதற்காக ரூ.6,600 செலவிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் பள்ளி மானியத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சிவகாசி சி.எஸ்.ஐ. காதுகேளாதோர் பள்ளி மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளிக்கு மானியத்தொகை ரூ.3,63,168 வழங்கப்பட்டுள்ளது.

இளம்பிள்ளை வாத தடுப்பு மற்றும் தீவிர மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 254 பேருக்கு ரூ.1,34,200 செலவிடப் பட்டுள்ளது.

## மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக 1996ஆம் ஆண்டு மே திங்கள் முதல் இதுநாள் வரை 39,274 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. 4,638 பேருக்கு ரூ. 53.95 இலட்சம் செலவில் இலவச வீட்டுமனைப்பட்டாக்களையும், 978 பேருக்கு இலவச சலவைப் பெட்டிகளையும், 26 பேருக்கு இலவச சவரக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இத்துறையின் மூலம் 1996-97 ஆம் ஆண்டில் உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி, இலவச பட்டப்படிப்பு, இலவச தொழிற்கல்வி பயிலும் 31,472 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 75.66 இலட்சம், 1997-98 ஆம் ஆண்டில் 33,263 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.82.52 இலட்சம் வழங்கப்பட்டது.

மேலும் 1996-97 மற்றும் 1997-98 ஆகிய ஆண்டில் புதிதாக 3 மாணவர்கள் விடுதியும், 3 மாணவியர்கள் விடுதியும் துவங்கப்பட்டு, மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**தாட்கோ**

விருதுநகர் மாவட்டத்தில் தாட்கோ மூலமாக 1996-97, 1997-98 ஆம் ஆண்டில் 46 பேருக்கு உழவு மாடு வாங்குவதற்காக 1,38,000யும், 132 பேருக்கு டயர் வண்டி மாடு வாங்குவதற்காக ரூ.14,24,250யும், 21 பேருக்கு ஆயில் எஞ்சின் வாங்குவதற்காக ரூ.1,43,000யும், 5 பேருக்கு மின்சார மோட்டார் வாங்குவதற்காக 25 ஆயிரம் ரூபாயும், 3 பேருக்கு விசைத் தெளிப்பான் வாங்குவதற்காக 9 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 178 பேருக்கு தொழில், விவசாயம் மற்றும் வாகனங்கள் வாங்க கடன் தொகையாக ரூ.84,60,157 வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் படித்த 182 இந்து ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதற்காக ரூ.8,04,400 செலவிடப் பட்டுள்ளது.

துப்புரவுப் பணியாளர் பயிற்சித்திட்டத்தின் 40 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதற்காக ரூ.95,600 செலவு செய்யப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர் திட்டத்தின் கீழ் துப்புரவுப் பணியில் ஈடுபடுவோர் மற்றும் அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் 113 பேருக்கு ரூ.8,50,650 ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் திட்டத்தின் கீழ், சிறு தொழில் துவங்க 50 பேருக்கு கடன் தொகையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகள் தொடர்ந்து படிக்கும் பொருட்டு, 1,431 மாணவிகளுக்கு உதவித்தொகையாக ரூ.7,75,000 வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பட்டியலினத்தோர் நிதி முன்னேற்றக் கழகத் திட்டத்தின் கீழ் வாகனங்கள் வாங்குவதற்காக கடனாக 6 பேருக்கு ரூ.22,09,681 வழங்கப்பட்டுள்ளது.

**பொதுப் பணித்துறை**


விருதுநகர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை (கட்டடம், கட்டுமானம் பராமரிப்பு) மூலமாக 1996-97 ஆம் ஆண்டில் பொதுப்பணிகளுக்காக ரூ.7,24,000 நிதியும், கல்வித்துறை பணிகளுக்காக ரூ.14,10,000 நிதியும், மருத்துவத்துறை பணிகளுக்காக ரூ.18 இலட்சம் நிதியும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் பணிகளுக்காக ரூ.14,40,000 நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது.


1997-98 ஆம் ஆண்டில் பொதுப்பணி பணிகளுக்காக ரூ.87,35,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. பிற்பட்டோர் நலத்துறைக்காக ரூ.23,70,000 நிதி ஒதுக்கீடும், மருத்துவத்துறை பணிகளுக்காக ரூ.78,16,000 நிதி ஒதுக்கீடும், கல்வித்துறை பணிகளுக்காக ரூ.38,12,000 நிதி ஒதுக்கீடும், செலுத்துத் தொகை வேலைகளுக்காக ரூ.27,22,000 நிதி ஒதுக்கீடும், சமூக நலத்துறைப் பணிகளுக்காக ரூ.15,04,000 நிதி ஒதுக்கீடும், வீட்டு வசதி பணிகளுக்காக ரூ.1,45,000 நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டிற்கு பொதுப்பணிகளுக்கு ரூ.2,30,14,000, பிற்பட்டோர் நலத்துறை பணிகளுக்காக ரூ.93,60,000, கல்வித்துறை பணிகளுக்காக ரூ.4,37,000, சமூகநலத்துறை பணிக்காக ரூ.65 இலட்சம், ஆக மொத்தம் ரூ.3,93,11,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதி திட்டம்**

சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை கிராமத்தில் வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97 ஆம் ஆண்டு ரூ.28 இலட்சத்தில் தொடங்கப்பட்டு 60 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இதனால் 3,280 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.





குல்லூர்சந்தை நீர்த்தேக்கம்

சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி கிராமத்தில் கோல்வார்பட்டி நீர்த்தேக்க திட்டம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97ஆம் ஆண்டு, ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, கால்வாய் புதுப்பிக்கும் பணி 30 சதவீதம் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இதனால் 1821 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதி பெறுகின்றன.

அருப்புக்கோட்டை வட்டம் குல்லூர்ச்சந்தை கிராமத்தில் குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி 1996-97 ஆம் ஆண்டு ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. விரைவில் முடிக்கப்படும் 1,170 ஹெக்டேர் நிலங்கள் இதனால் பாசன உறுதி பெறுகின்றன.

திருச்சுழி வட்டம், அத்திக்குளம் கிராமத்தில் கிருதுமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு மற்றும் இடது வலது புற வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.347 இலட்சம் மதிப்பீட்டில் 96-97ல் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்புதிய திட்டத்தில் இப்பகுதியில் 8 கண்மாய்களின் கீழ் உள்ள 1,255 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதிபெறுகிறது.

### திட்டப் பணிகள்

- ஏரிகள் தூர்வாரும் பணிகள் 1997-98

திருச்சுழி வட்டம் அம்பநேரி கண்மாய் ஆயக்கட்டு 95.26 ஹெக்டேர், ரூ.10 இலட்சத்தில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.

சிவகாசி வட்டம், புதுக்கோட்டை கிராமம் புதுக்கோட்டை கண்மா 150.92 ஹெக்டேர் ரூ.10 இலட்சத்தில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.

சாத்தூர் வட்டம் நென்மேனி கிராமம் நென்மேனி கண்மாய் 169.22 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் முடிவுற்றன.


அருப்புக்கோட்டை வட்டம் பரளச்சி கிராமம் பரளச்சி கண்மாய் 192.96 ஹெக்டேர் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

சிவகாசி வட்டம் திருத்தங்கல் கிராமம் திருத்தங்கல் பெரிய கண்மாய் 53.87 ஹெக்டேர் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்றன.

இராஜபாளையம் வட்டம் அயன்கொல்லங் கொண்டான் கிராமம் அயன்கொல்லங் கொண்டான் பெரிய கண்மாய் 355.33 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் விரைவில் துவங்கப்படுகிறது.

சாத்தூர் வட்டம் கோல்வார்பட்டி கிராமம் கோல்வார்பட்டி கண்மாய் 273 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

திருவல்லிபுத்தூர் வட்டம் சுந்தரபாண்டியம் கிராமம் சுந்தரபாண்டியம் புதுக்கண்மாய் 107.65 ஹெக்டேர், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் முடிக்கப்படும்.



மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

### சிறப்பு சிறுபாசனத் திட்டம்

### நாபார்டு நிதி உதவித் திட்டம்

சாத்தூர் வட்டம் பாப்பாக்குடி கிராமத்தருகில் புதிய கண்மாய் அமைக்கும் பணி, ரூ.45.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. பாசன வசதிபெறும் நிலப்பரப்பு 83 ஹெக்டேர் ஆகும்.

சிவகாசி வட்டம் அழகாபதி கிராமத்தருகில் உப்போடை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் பணி, ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் பணி துவங்கப்பட்டுள்ளன. இதனால் சிவகாசி வட்டத்தில் எரிச்சநத்தம் கண்மாய் மற்றும் நான்கு கண்மாய்களுக்கு பாசன உறுதியளிக்கிறது.

### பெரிய பாசனத்திட்டம்


சாத்தூர் வட்டம் இருக்கண்குடி கிராமம் அருகே இருக்கண்குடி நீர்த்தேக்க திட்டம் அமைக்கும் பணி ரூ.2870 இலட்சம் நிதி ஒதுக்கி, 1992ல் அரசாணை வழங்கப்பட்ட இத்திட்டத்தின் பிரதான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ராஜபாளையம் வட்டம் சாஸ்தாகோவில் அருகே நகரியார் ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க, ரூ.797 இலட்சம் நிதி ஒதுக்கி, 16-6-98ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

விருதுநகர் மாவட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் மூலம் 1996-97, 1997-98 ஆகிய ஆண்டில் ரூ.147.18 இலட்சம் செலவில் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ரூ.53.50 இலட்சம் செலவில் 32 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.981 இலட்சம் செலவில் 172 கி.மீ. தூரத்திற்கு சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில், ரூ.176.10 இலட்சம் செலவில் பல்வேறு சாலை மேம்பாட்டுப்பணிகளும், ரூ.425 இலட்சம் மதிப்பில் 161 கி.மீ. தூரத்திற்கு சாலைப் புதுப்பிக்கும் பணியும், நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.532 இலட்சம் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகிறன.



சமுதாயக் கிணறு

● ● ●

# அரசு ஆணைகள்

## காவலர் நல்வாழ்வு நிதி

**1995-ஆம்** ஆண்டில் தமிழ்நாடு காவல்துறைப் பணியாளர்கள், தனித்தன்மை வாய்ந்த அறுவை சிகிச்சை/சிகிச்சை பெறுவதற்கு நிதி உதவியைக் கடனாகவும், மானியமாகவும் வழங்குவதற்கு ஏதுவாக - "தமிழ்நாடு காவலர் நல்வாழ்வுத் நிதித் திட்டம்" (Tamil Nadu Police Health Fund Scheme) ஒன்று அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.50 இலட்சம் ஒட்டு மொத்தத் தொகையாக வழங்கியது. அண்மையில் இத்திட்டத்திற்கு ஆண்டு மானியமாக ரூ.30 இலட்சம் அரசால் அளிக்கப்பட்டது.

25-5-1998 அன்று சட்டப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை நிறைவேறும் சமயம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவலர் நலநிதித் திட்டத்திற்கான ஆண்டு மானியம் ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும் என அறிவித்தார். அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு காவலர் நலநிதி ஆண்டு மானியத்தை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்குக் கூடுதல் செலவினம் ரூ.20 இலட்சம் ஆகும்.

## சென்னிமலை ஒன்றியம் : குடிநீர்த் திட்டம்

**ஈ**ரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்திலுள்ள வாய்க்கால்புதூர் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத் திற்கு ரூ.4.15 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக் குடியிருப்பில் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ளதால், தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இக்குடியிருப்பில் 150 மி.மீ.விட்டம் உள்ள 156 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழாய் கிணற்றிலிருந்து 800 மீ. நீளம் கொண்ட நீருந்துக் குழாய் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுடன் அமைக்கப்படவுள்ள, மேல்நிலைத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு 500 மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். முடிக்கப்பட்ட பின் கிராமப் பஞ்சாயத்திடம் பராமரிப்புக் காக ஒப்படைக்கப்படும்.

## பெருந்துறை ஒன்றியத்தில் புதிய குடிநீர்த் திட்டம்

**ஈ**ரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியத்திலுள்ள மந்திரிபாளையம் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.3.69 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்குடியிருப்பில் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 10 லிட்டருக்குக் குறைவாக உள்ளதால் ஆழ்துளைக் கிணறு அமைத்து, தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இக்குடியிருப்பில் 150 மி.மீ. விட்டம் உள்ள 202 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழாய்க் கிணற்றிலிருந்து 350 மீ. நீளம் கொண்ட நீருந்து குழாய் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுடன்அமைக்கப்படவுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு, 500 மீ.நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும். முடிக்கப்பட்டபின் கிராமப் பஞ்சாயத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்படும்.

## காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

**ச**ட்டமன்றப் பேரவையில், 25-5-98ல் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் உள்ள 40 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்றும், இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவிப்பு செய்தார்கள். மேற்கண்ட அறிவிப்பில் அடங்கிய 40 காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்களை கட்டுவதற்கு அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.6.40 கோடி ஆகும். 1998-99ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1.6 கோடி ரூபாயாகும்.

## கேளிக்கை வரி

**த**மிழ்நாடு அரசு, 1997-98ஆம் ஆண்டுக்குக் கேளிக்கை வரியின் பங்காக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.108.55 கோடி ஒப்படைத்துள்ளது. மே 1997 வரை வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரிக்கு ஒப்படைப்பு 70 சதவீதமாக இருந்தது. இந்த ஒப்படைப்பு 1.6.97 முதல் 90 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கெனத் தனி நுகர்வோர் குறைதீர் மன்றம்

**நா**கப்பட்டினம் மாவட்டத்திற்கெனத் தனியாக மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஏற்படுத்த வேண்டுமெனச் சில தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதற்கேற்ப நாகப்பட்டினம் மாவட்டத்திற் கென தனி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஒன்று நாகப்பட்டினத்தில் அமைக்கப்படுகிறது. நாகப்பட்டினத்தில் நுகர்வோர் குறைதீர் மன்றம் அமைக்க மாவட்ட நீதிபதி நிலையில் ஒரு தலைவர் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, புதிய அலுவலகம் தொடங்குவதற்குத் தேவையான உள் கட்டமைப்பும் ஏற்படுத்த பகுதி -2 திட்டத்தின் கீழ் ரூ.4.22 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.

## கல்வித் துறை துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு ஊதியம் உயர்வு

பள்ளிக் கல்வித் துறையில் உயர் நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளி களிலும் பகுதிநேரப் பணியாளர்களாகத் துப்புரவுத் தொழிலாளர்கள், பெருக்குப வர்கள், இரவு நேரக் காவலர்கள் ஆகியோர் தொகுப்பு ஊதியம் பெற்றுப் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியாளர்கள் 1.1.96 அன்று 210/- தொகுப்பூதியமாகப் பெற்று வந்தார்கள். இதனை 50/- ரூபாய் உயர்த்தி 260/- ரூபாயாக வழங்கிட அலுவலர் குழு பரிந்துரைத்தது. அப்பரிந்துரையைப் பரிவுடன் ஆய்வு செய்து 50/- ரூபாய் உயர்வுக்குப் பதிலாக 100/- ரூபாயாக உயர்த்தி 1.1.96 முதல் மொத்தம் 310/- ரூபாய் தொகுப்பூதியமாக வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன்மூலம் தொகுப்பூதியம் பெறும் 13,000 பகுதி நேரத் துப்புரவுத் தொழிலா ளர்கள், பெருக்குபவர்கள், இரவு நேரக் காவலர்கள் பயன்பெறுவார்கள்.

## தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் 20 நேரடி கொள்முதல் நிலையங்கள்

**1998-99** ஆம் ஆண்டில் 20 நேரடி நெல்கொள் முதல் நிலையங்கள் மொத்தம் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங் களில் கட்டப்படும். இதற்கென 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### *நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்படும் அமைப்புகளுக்குப் பரிசுகள்*

நுகர்வோர் விழிப்புணர்வை மக்களி டையே உருவாக்கி, நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளில் தீவிர ஈடுபாட்டுடன் செயல் படும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புக் களை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறப்பாகச் செயல்படும் முதல் மூன்று இயக்கங்களுக்கு முறையே முதல் பரிசாக ரூ.3,000-மும், இரண்டாவது பரிசாக ரூ.2,000-மும், மூன்றாவது பரிசாக ரூ.1,000-மும் இந்த ஆண்டு வழங்கப்படும். இத்தகைய இயக்கங்களுக்கு நிதிஉதவி அளிக்கவும், உரிய பயிற்சி அளிக்கவும், மாநில அளவில் நுகர்வோர் கல்வி குறித்து கருத்தரங்கு நடத்தவும் ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி

**1998-99** ஆம் ஆண்டில், கரூர் மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு ரூ.20 இலட்சம் விளிம்புத்தொகை நிதியுதவி வழங்கவும், சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நடப்பு ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் பாண்டியன் நகர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருவண்ணாமலை மாவட்டம், தேவிகாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை, நாகை மாவட்டம் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, நீலகிரி மாவட்டம் இண்ட்கோ பணியாளர் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் கோவை மாவட்டம் பீளமேடுபுதூர் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய 5 பண்டகசாலைகளுக்கு மொத்தம் ரூ.3 இலட்சம் நிதியுதவி முடிவு செய்யப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொடக்க கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கான - நிதியுதவி மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டம் சூலூர் கூட்டுறவுப் பண்டகசாலை, மதுரை மாவட்டம் பசுமலை கூட்டுறவுப் பண்டகசாலை, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி கூட்டுறவுப் பண்டகசாலை, திருச்சி மாவட்டம் பெருவளநல்லூர் கூட்டுறவுப் பண்டகசாலை, தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய 5 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கத் திருவண்ணாமலை மாவட்ட மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரெங்கநாதன் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகிய இரண்டு பண்டகசாலைகளுக்கும் மொத்தம் ரூ.2.70 இலட்சம் நிதியுதவி வழங்கவும், நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்க முதுகுளத்தூர், திருக்காட்டுப்பள்ளி, செங்கல்பட்டு கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு மொத்தம் ரூ.6 இலட்சம் நிதியுதவி வழங்கவும் பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசாணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

### *கூட்டுறவு அச்சகங்கள் நவீனமயம் ரூ.8 இலட்சம் நிதியுதவி*

நடப்பாண்டில் தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கத் தலா ரூ.4 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.8 இலட்சம் நிதியுதவி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### *தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கிகளின் மகளிர் அங்கத்தினர்கள் கடன்பெறும் தகுதியை உயர்த்த ரூ.11.25 இலட்சம் நிதியுதவி*

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களில் மகளிர் பங்கு மூலதன முதலீடு செய்வதற்குச் சிரமப்படுகிறார்கள். அங்கத்தினர்களின் கடன் வாங்கும் சக்தி, அவர்தம் பங்கு மூலதனத்தைப் பொறுத்தே உள்ளதால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உள்ள மகளிர் உறுப்பினர்களுக்குத் தேவையான பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வினத்தில் ஒரு நபருக்கு ரூ.250-க்கு மிகாமல் வட்டியில்லாக் கடனாக அளிக்கப்படும். இதன்படி, 1998-99 ஆம் ஆண்டில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களாக உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.6.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் 2,500 மகளிர் பயனடைவார்கள். இதற்கான அரசாணை சமீபத்தில் வெளியிடப்பட்டு உள்ளது. இதேபோன்று கூட்டுறவு நகர வங்கிகளில் உள்ள மகளிர் அங்கத்தினர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மகளிர் உறுப்பினருக்கும் தலா ரூ.500 வட்டியில்லாக் கடனாக வழங்க ரூ.5 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதனால் 1,000 மகளிர் உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

### *பெண் உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன உதவி*

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலும், மகளிர் உறுப்பினர்களின் கடன்பெறும் சக்தியை உயர்த்துவதற்கான அவர்தம் பங்கு மூலதனத்தை உயர்த்த நிதியுதவி அளிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இவ்வங்கிகளில் உள்ள 200 மகளிர் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தலா ரூ.1,000-வீதம் ரூ.2இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் மொத்தம் ரூ.1 கோடியே 22 இலட்சத்து 17 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டங்களைச் செயல்படுத்த பகுதி -2 திட்டத்தின்கீழ் அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளன.

## சத்துணவில் முட்டை

73 இலட்சம் குழந்தைகள் பயனடையும் வகையில், ரூ.45 கோடி செலவில், சத்துணவோடு வாரம் ஒரு முட்டை வழங்கப்படும்.

## இலவசத் தொழிற் பயிற்சி

இதுவரை பட்டதாரிகள்/டிப்ளமோதாரர்கள் இல்லாத, ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த, தகுதிவாய்ந்த மாணவர்கள் அனைவருக்கும் - எண்ணிக்கையில் உச்சவரம்பின்றி இவ்வாண்டு முதல், அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் இலவசத் தொழிற்பயிற்சி பெற அரசு ஆணை.

## ஓய்வூதியம் உயர்வு

ஆதரவற்ற முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், வயது முதிர்ந்த வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.100லிருந்து 21-4-98 முதல் ரூ.150 ஆக உயர்த்தி வழங்கிட ஆணை.

## முதியோர் உதவித் தொகை

23-4-98 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி, மறுமணம் செய்யாத விதவைப்பெண்கள், 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு 20 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும், அவர்கள் முதியோர் உதவித்தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

ஈரோடு மாவட்டத்தில் - அம்மாபேட்டை, அந்தியூர் ஒன்றியங்களிலுள்ள 190 கிராமக் குடியிருப்புகளுக்குக் காவிரியாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொணரும் ரூ.21.26 கோடியிலான கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆணை.

## சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், தருமபுரி மாவட்டம், திண்டுக் கல் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தேனி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பொதுப்பணித் துறையின் சார்பில், சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றிட ரூ.13.56 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் கலைஞர் ஆணை.

## ஆதிதிராவிட மாணவர்-மாணவியருக்கு விடுதிகள்

ஆதிதிராவிட மாணவர்- மாணவியருக்கென நடப்பாண்டில் ரூ.75 இலட்சம் செலவில், 22 பள்ளி விடுதிகளும், ஒரு கல்லூரி விடுதியும் கட்டிட அரசு ஆணை.

## காவலர்களுக்கு உதவி

காவலர் குடியிருப்புகளின் பராமரிப்புக்கு ரூ.5 கோடி; ரூ.1.67 கோடியில் மின்விசிறியில்லாத 11,140 குடியிருப்பு களுக்கு மின்விசிறி இணைத்துக் கொடுத்திட அரசு ஆணை.

காவல் துறையினருக்குத் தற்பொழுது மானிய விலையில் 12 கிலோ அரிசியும், ரேஷன் கடை விலையில் 8 கிலோ அரிசியும் வழங்கப்படுவதற்குப் பதிலாக 20 கிலோ அரிசியையும் மானிய விலையிலேயே வழங்க அரசு ஆணை.

## போக்குவரத்து ஆணையர் அலுவலகம்

திண்டுக்கல், கரூர், பொள்ளாச்சி, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்கும், திருநெல்வேலியில் போக்கு வரத்து ஆணையர் அலுவலகத்துக்கும் புதிய கட்டடங்கள் கட்ட ரூ.1.75 கோடிக்கு அனுமதியளித்து அரசு ஆணை.

## உள்ளாட்சிகளுக்கு நிதி

நடப்பு நிதியாண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.392 கோடியே 40 இலட்சத்தில், இடைக்கால முதல் தவணையாக 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.34.81 கோடியும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.7.73 கோடியும், ஊராட்சிகளுக்கு ரூ.34.81 கோடியும் ஒதுக்கி அரசு ஆணை.

## திரைப்படங்களுக்கு மானியம்

1996ஆம் ஆண்டில், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.3 இலட்சம் வீதம் - 17 படங்களுக்கும், ரூ.5 இலட்சம் வீதம் - 8 படங்களுக்கும், ஆகமொத்தம் 25 படங்களுக்கு ரூ.91 இலட்சத்தை அரசு மானியமாக முதலமைச்சர் கலைஞரால் வழங்கப்பட்டது.

## பள்ளிகள் சீரமைப்பு

மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களிலுள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், மாணவியர்க்குக் கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் 58 ஆசிரியர் பணியிடங்கள் போன்ற வற்றை உருவாக்க ரூ.70 இலட்சம் ஒதுக்கி அரசு ஆணை.

## மினிபஸ் மற்றும் நவீன ஓட்டுநர் தேர்வு வளாகம்

தொலைதூரக் கிராமப்புறங்களுக்கும் போக்குவரத்து வசதியளித்திடும் வகையில் தனியார் மினிபஸ்களுக்கு அனுமதியளித்திடும் திட்டத்தின்படி, இதுவரை 146 வழித்தடங்களுக்கு அரசு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, வேலூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தருமபுரி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் ஆகிய 6 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் நவீன ஓட்டுநர் தேர்வு வளாகம் அமைக்க அரசு ஆணை.

# விழியில் இருட்டு மொழியில் வெளிச்சம்

கவிஞர் சாமி பழனியப்பன்

கண்போன்றது என்றால் மிகமிக இன்றியமையாதது -மிகவும் முக்கிய மானது என்று பொருள். மனிதனுக்கு மிக முக்கியமானது கல்வி. கல்வியே மனிதனை வாழவாங்கு வாழவைப்பது. கல்வியின் சிறப்பை அதன் அவசியத்தை வலியுறுத்தாத இலக்கியங்கள் இல்லை. பொதுவாகக் கண்கள் எல்லாருக்கும் இருந்தாலும் 'கற்றவர் முகத்திலிருப்பனவே கண்கள், கல்லாதார் முகத்திலிருப்பன புண்கள்" என்றார் திருவள்ளுவர்.

ஆனால், புலவர் பெருமக்கள் சிலர், ஊனக்கண்களை இழந்தாலும், ஞானக்கண் பெற்று, வரலாற்றில் காலங்கடந்து - காலத்தை வென்றாண்டு வாழ்கிறார்கள். இந்தக்காலத்தில் கண்களை இழந்தவர்களும் கற்றுத் தேர்வு - பெற பிரெய்லி எழுத்துக்கள், அதற்கேற்ற நூல்கள் வந்துள்ளன. இது விஞ்ஞான உலகம். அந்தக்காலத்தில் இந்த அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி இல்லை என்றாலும் கண்ணிழந்தோர் சிலர் கவிஞர்களாக -கவியரசர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பஷீர் அப்பாவும், பதினைந்தாம் நூற்றாண்டில் இரட்டையரும், பதினேழாம் நூற்றாண்டில் வீராகவக் கவிராயரும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மாம்பழக் கவிச்சிங்க நாவலரும், தம்புகழ் நிறுவிய கவிஞர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துவன; நம் சிந்தைக்கு விருந்தாவன.

## பஷீர் அப்பா

பஷீர் அப்பா கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பிறந்தவர். அப்போது அரேபியாவிலிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்ட மரக்கலங்களில் சில, புயலால் இந்தியாவின் மேற்குக்கரையில் ஒதுங்கின. அவற்றிலிருந்து இறங்கிய முஸ்லீம் குடும்பத்தினரில் சிலர் நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தில் வந்து குடியேறினர். அவர்களின் வம்சாவழியில் பிறந்தவர் இவர் தந்தை உதுமான் லெப்பை என்பவர். தாய் உறவ்வா பீபி.

முஹயிதீனுக்கு மூன்றாவது வயதில் அம்மைநோய் வந்தது. அவர் இரு விழிகளையும் இழந்தார். பெற்றோர் பெரிதும் மனம் வருந்தினர்.

ஒருநாள் உதுமான் லெப்பையின் குரு, சகாஸ் முகம்மது புதுமனை புகுவிழாவிற்கு வந்தார். பெற்றோர் பெரிதும் மனம் நொந்திருந்ததைக் கண்டு "குழந்தையைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் அவனை வளர்த்துப் பெரியவனாக்கிவிடுகிறேன்" என்று கூறினார். பெற்றோரும் மகிழ்ச்சியோடு குழந்தை முஹயிதீனை அனுப்பிவைத்தனர்.

குரு, குழந்தை முஹியிதீனின் முதுகில் விரலால் எழுதி எழுதி, வாயால் சொல்லும்படி கூறினார். இப்படியே குழந்தை முஹியிதீனுக்கு திருக்குர்ஆன் முழுவதையும் கற்றுக் கொடுத்தார். முஹியிதீனும் திருக்குர்-ஆன் முழுவதையும் கற்று அழகான ஒலியுடன் ஓதும் ஆற்றலும் பெற்றார்.

அப்போது சென்னை ராஜதானியை ஆண்டுக்கொண்டிருந்த நவாப் மஹபூப்கான் மேலப்பாளையம் வந்தார். அங்கு திருக்குர்ஆனை மனனம் செய்த பல ஹாஃபீஸ்களையும் காணவிரும்பினார். அவர் விருப்பதிற்கிணங்க அனுப்பி வைக்கப்பட்ட ஹாஃபீஸ்களில் எட்டுவயதுச் சிறுவனான முஹியிதீனும் ஒருவர்.

முஹியிதீன் கண்ணிழந்தவராக இருந்தும், மிக அழகிய முறையில் குர்-ஆன் ஓதியதைக் கண்டு வியந்த நவாப், அவருக்குப் பல்வேறு பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

பின்னர் முஹியிதீன் தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றார். தக்க வயது வந்ததும் அவருக்குத் திருமணம் செய்துவைத்தனர். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட அவர், பின்னர் ஞானகுருவிடம் தீட்சைபெற விரும்பினார். இதனை அறிந்த அவரது குருவான கோஸ் முஹம்மது கடையநல்லூரிலிருந்த தம் குருவும், ஞானியுமான செய்கு உதுமான் ஆலிம் அவர்களிடம் முஹியிதீனை அழைத்துச் சென்றார். விவரங்களைக் கூறினார். அப்போது அந்த ஆத்மஞானி, 'இவர் குருடர் அல்ல - கண்பார்வையிழந்தவராக இருந்தாலும் அகக்கண் உடையவர் என்று பாராட்டி, ஞானதீட்சை வழங்கினார்'. 'கலிஃபா' என்ற தலைமைப் பொறுப்பையும் பெற்றார். அன்றுமுதல் முஹியிதீன் பஷீர் அப்பா ஆனார்.

பின்னர் பஷீர் அப்பா மேலப்பாளையம் திரும்பி, அங்கு பலருக்குத் தீட்சையளித்து அவர்களைச் சீடர்களாகப் பெற்றார். மேலும், பஷீர் அப்பா தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து, 'நபிநாயகம்' மீது ஞானப்பனுவல் பலவற்றைப் பாடினார். பல்வேறு அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டினார்.

கவிஞரும், மாமேதையுமான பஷீர் அப்பா அவரது 75-ஆம் அகவையில் இயற்கையெய்தினார்.

இவரை மேலப்பாளையம் கடையம் அருகே நல்லடக்கம் செய்தனர். முஸலீம்கள் இவரது ஞானப்பனுவல்களை இன்றும் பாடி மகிழ்கின்றனர். கவிஞர் பஷீர் அப்பாவின் சந்நிதியில் இன்றும் ஏராளமான மக்கள் கூடுகின்றனர். வழிபாடு செய்கின்றனர்.

ஆண்டுதோறும் 'உருஸ் விழா' சிறப்பாக நடைபெறுகிறது. கவிஞர் பஷீர் அப்பாவின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு.

## இரட்டையர்கள்

இவர்கள் இருவரும் சோழவள நாட்டில் ஆடுதுறைக்கு அருகில் பிறந்தவர்கள். இருவரும் அத்தை மகனும், மாமன்மகனும் ஆவர். இருவரின் பெயர்களும் முறையே இளஞ்சூரியர் - முதுசூரியர். இருவரில் ஒருவர் கண்பார்வை இல்லாதவர்; இன்னொருவர் கால்களை இழந்தவர். எனவே, தனித்தனியே வாழமுடியாமல் இரட்டையராகவே - இணைந்து வாழ்ந்தனர். இவர்களுள், கால்கள் இல்லாதவரைக் கண் இல்லாதவர்

தோளில் சுமந்தும், கால்கள் இல்லாதவர் வழிகாட்ட இருவரும் பல்வேறு இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார்கள். வெண்பாவின் முதலிரண்டு வரிகளை ஒருவர் சொல்ல, பின்னுள்ள இரண்டடிகளை இன்னொருவர் சொல்லி முடிப்பார்.

'கலம்பகத்திற்கு இரட்டையர்' என்று கற்றோர்கள் ஏற்றிப் போற்றும் வகையில் 'திருவாமாத்தூர்க் கலம்பகம்', 'தில்லைக் கலம்பகம்', மற்றும் 'ஏகாம்பரநாதர் உலா' முதலிய செல்வங்களைத் தமிழுக்கு வழங்கியுள்ளனர்.

இரட்டையர்கள் யாத்திரை செல்லும்போது, ஆங்கூரில் சிவன் கோவிலைக்கண்டு, கண்ணுள்ளவர் -

***'ஆங்கூர்ச் சிவனே***
***அல்லாளி யப்பா***
***நாங்கள் பசித்திருக்க***
***ஞாயமோ?'...***

என்று பாட, இன்னொருவர் -

***'போங்காணும்***
***கூறுசங்கு தோல்முரசு***
***கோட்டோசை யல்லாமல்***
***சோறுகண்ட மூளியார் சொல்'***

- என வெண்பாவை முடித்திருக்கிறார். இதிலுள்ள உண்மை, கருத்தாழம், பொருட்சுவை, நகைச்சுவைகளை எண்ணிப்பாருங்கள். இது ஓர் எடுத்துக்காட்டு. இத்தகைய இரட்டையர் நூல்களைப் படித்து இன்புறுங்கள். இவர்கள் காலம் பதினைந்தாம் நூற்றாண்டு!

### வீரராகவர்

'அந்தகக்கவி வீரராகவர்' என்று பெயர் விளங்கும் இவர் பிறவிக்குருடர். இவர் பாலாற்றங்கரையின் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பூதூரில் பிறந்தார். பிறவிக் குருடர். இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே கல்வியறிவூட்ட, பெற்றோர் விரும்பினர். இதற்காகப் 'பொன்விளைந்த களத்தூர்' என்ற ஊருக்குக் குடியேறினர். இங்கு 'வெண்பாவிற்குப் புகழேந்தி' என்று பெருமைமிக்கவரும், 'நளவெண்பா'வை இயற்றியருளியவருமான அரும்புலவர் அவதரித்தார்.

இங்குதான் வீரராகவர் ஆரம்பக் கல்வியைச் செவிவழி கேட்டுப் பயின்றார். பின்னர் காஞ்சிமா நகருக்குச் சென்று அங்கு வாழ்ந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கேட்டறிந்து, நெஞ்சமே ஏடாகக்கொண்டு கற்றுத்தேறினார்.

ஒருசமயம், கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த வள்ளலுக்கு எழுதிய சீட்டுக்கவியில்,

***'ஏடாயிரம் கோடி எழுதாது***
***தன்மனத்தே***
***எழுதிப் படித்த விரகன்'***

- என்று தான் கற்றவித்தைதை விளக்கியுள்ளார். சில ஆண்டுகளில் சிறந்த கவிஞராக விளங்கினார். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார், "இங்கொருவன் பல்கலை எய்திப் போய்க் கவியினார் இசைபெற்றானே' என்று சிறப்பித்துள்ளார்.

வீரராகவர் கவிஞராக மட்டுமல்ல. அவதானக் கலைஞராகவும் பயிற்சி பெற்றார். பின்னர். திருமணம் செய்து கொண்டார். இல்லறவாழ்வில் ஈடுபட்டார். பின்னர், தன் மாணாக்கன் ஒருவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சென்றார். வள்ளல் பலரின் அன்பையும், ஆதரவினையும் பெற்றார். பின்னர் இலங்கைக்குச் சென்று அப்போது அங்கு ஆட்சிபுரிந்த பரராசசேகரனின் அவைக்களத்தில் யானை, பொற்பந்தர், ஓர் ஊர் ஆகியவற்றைப் பரிசுகளாகப் பெற்றுத் திரும்பினார்.

வீரராகவர் 'சீட்டுக்கவி' எழுதுவதிலும் வல்லவர். சொற்சுவையும், கருத்தாழமும் ததும்பி வழியப் பாடுபவர். கயத்தாற்றில் ஆட்சிபுரிந்த அரசன் ஒருவன்மீது, 'உலா'ப் பாடினார்.

இவர் இயற்றிய 'சந்திரவாணன் கோவை', 'சேவூர் முருகன் பிள்ளைத் தமிழ்', 'திருக்கழுக்குன்ற மாலை', 'தியாகேசர் உலா' ஆகியவற்றை இயற்றியுள்ளார். மற்றும் பல தனிப்பாடல்களையும் இவர் பாடி இன்பத் தமிழுக்கு இனிய தொண்டு செய்துள்ளார்.

கவிஞர் வீரராகவனின் காலம் பதினேழாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பகுதியாகும்.

### மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

மன்னர் திருமலை நாயக்கரால் 'மாம்பழம்' என்று சிறப்பித்துப் பாராட்டப்பெற்ற 'சிற்பக் கலைஞர்' மரபில் வந்தவர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

அப்போது பழனியில் சிறப்புற வாழ்ந்த முத்தையா ஆச்சாரியின் இரண்டாவது மகனாக 1836-ஆம் ஆண்டில் பிறந்தவர். அவருக்குப் பெற்றோர் இட்டழைத்த பெயர் பழனியப்பன்.



தம் மூன்றாம் அகவையில் அவருக்கு அம்மைநோய் கண்டது. பின்னர் நோய் தணிந்தது. எனினும் அந்நோயினால் பழனியப்பனின் கண்கள் பறிபோயின.

முத்தையா ஆச்சாரி தினமும் காலையிலும் மாலையிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பதிகங்களை இசையோடு பாடி மகிழ்ந்து வழிபாடு செய்யும்போது, கண்ணிழந்த தன் மகன் பழனியப்பனுக்கு அவற்றைப் பயிற்றுவிப்பார்.

பழனியப்பனுக்கு ஐந்து வயதாயிற்று. அப்போது தன்மகன் கண்ணொளி இழந்தவனாதலால் அவனைப் பள்ளிக்கு அனுப்பாமல், தன் மடியிலேயே குப்புறக்கிடத்தி, தமிழ் எழுத்துக்களை அவன் முதுகிலேயே எழுதிக் கற்பித்தார்.

பிறகு பழனியப்பன் மாரிமுத்துக் கவிராயர் என்பவரிடம் முறையாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பயின்று, கவிபாடும் ஆற்றல் பெற்றார்.

வேதாந்த சித்தாந்த சாத்திரங்களையும் தக்கார்வழிக் கேட்டறிந்தார். தர்க்கம், சோதிடம், இசை முதலிய கலைகளிலும் பயிற்சி பெற்றார். சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கினார்.

வடமொழி வல்லுநர்களாக அப்போது திகழ்ந்த சுப்பராய பாரதியார், இராமசாமி அய்யர் ஆகியோரிடம் சென்று, வடமொழியும் கற்றுத் தெளிந்தார்.

பழனியப்பன் இளம் வயதிலேயே 'ஞானகாந்தம்' என்று புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்றார்.

பழனியப்பன், முதன்முதலில் குமரகுருபரனையே தம் ஞானாசிரியனாகக் கொண்டு, பழனிப்பதிப்பகம், குமரகுரு பதிப்பகம், சிவகிரிப்பதிகம், திருச்செந்தில் பதிகம் எனும் நான்கு பதிகங்களையும் பாடினார். அவரது கவியின்பத்தில் மூழ்கித்திளைத்த அறிவறிந்த பெருமக்கள் அவரைத் 'தமிழ்ச்சக்கரவர்த்தி' என்றும், 'கலைஞான பீடம்' என்றும், 'நாமடந்தையின் நல்லிருக்கை' என்றும், 'நாவலர்' என்றும் பாராட்டினர்.

அப்போது பழனியாண்டவர் திருக்கோயில் அறநிலைய ஆட்சிக்குழுத் தலைவராக இருந்த பாப்பம்பட்டி பெருநிலக்கிழார் திரு.வேங்கடசாமி நாயக்கர்

## இரு கை எழுத்து

*நம்மில் அநேகருக்கு வலக்கை ஒன்றினால் மட்டுமே எழுதமுடியும். சிலர் இடக்கைப் பழக்கம் உடையவர்களாக இருப்பதும் உண்டு. ஆனால், இரண்டு கைகளால் ஒரே சமயத்தில் இரண்டு மொழிகளிலும் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார் ஜேம்ஸ் கார்பீல்ட் என்பவர். இவர் அமெரிக்காவின் இருபதாவது ஜனாதிபதியாக இருந்தவர். பலருக்குக் கடிதம் எழுதும்போது ஒரே சமயத்தில் லத்தீன் மொழியில் வலதுகையாலும், கிரேக்க மொழியில் இடதுகையாலும் எழுதுவாராம்!*

*– நன்றி: கலைக்கதிர்*

மாம்பழக்கவியின் பெரும்புலமையையும், கவியாற்றலையும் அறிந்து அவரைப் பாராட்டி, அவருக்குப் பல்வேறு வகையிலும், ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தார்.

மாம்பழக்கவி திரு.வேங்கடசாமி நாயக்கரின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், அவரைப் புகழ்ந்து 'வேட்டைப் புகழ்ச்சி', 'புலிப் பவனி', 'குறவஞ்சி, 'கீர்த்தனை', 'சீட்டுக்கவி' ஆகியவற்றைப் பாடினார்.

மாம்பழக்கவி தமது 17-வது வயதில் இராமநாபுரத்திற்குச் சென்று, அப்போது மன்னராக இருந்த முத்துராமலிங்க சேதுபதியையும், அவரது இளவலும் தமிழ்ப்புலவருமாயிருந்த பொன்னுச்சாமித் தேவரையும் பாராட்டிப் பாடினார். அவ்வள்ளல்கள் இவரது புலமையை வியந்து, மாம்பழக்கவியைத் தம் அவைப்புலவராக அமர்த்தினர். அப்போதுதான் அங்கு மாம்பழக்கவிக்கு 'கவிச்சிங்கம்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கினர்.

கற்ற புலவர் பெருமக்களும், நாவன்மை படைத்தோரும் கவிச் சிங்கத்தின் சொல்லாற்றலை - பேச்சுத் திறமையைக் கண்டு வியந்து, இவரை நாவலர் என்று பாராட்டினார்.

இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மீது 'ஒருதுறைக் கோவை' பாடி மாம்பழக்கவிச்சிங்க நாவலரும் பதினாயிரம் பொன் பெற்றார்.

மாம்பழக் கவிச்சிங்கம் கண்ணிழந்த போதிலும், தமிழன்னைக்குப் பல கவியாரங்களைச் சூட்டி மகிழ்ந்தார்.

பின்னர் மாம்பழக் கவிச்சிங்கம், உடல்நலக்குறைவுற்று, தேவர்கள் இருவரிடமும் விடைபெற்று வந்து, 'சந்திரவிலாசம்' என்ற நூலைப் பாடினார்.

மாம்பழக் கவிச்சிங்கம், தமது 21-ஆம் வயதில் திருமணம் புரிந்து, இல்வாழ்க்கையை இனிது நடத்தினார்.

பிறகு கவிச்சிங்க நாவலருக்கு மேகநோய் கண்டது. அதன்பின் அந்நோயினின்றும் மீண்டும் சிலகாலம் சுகவாழ்வு வாழ்ந்தார். வாழ்நாள் இறுதிவரை கவிமழை பொழிந்தார்.

இறுதியில்

**'என்னபிழை யான்செய்**
**திருந்தாலும் எண்ணாமல்**
**அன்ன பிழையெல்லாம்**
**அகற்றியின்னே - நின்று மலர்ப்**
**பாதநிழல் நல்கியெனைப்**
**பாவித்துக் கொள்சமயம்**
**நீதகுக னேநம்பி னேன்'**

- என்று பாடியவாறே இம்மண்ணுலகைப் பிரிந்தார்.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றியனவாக, கிடைத்த 1508 பாடல்களைத் தொகுத்து மார்க்கயன்கோட்டை பழனிச்சாமி ஆச்சாரி நூலாக வெளியிட்டுள்ளார். பின்னர் 1908 - ஆம் ஆண்டில் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றியருளிய பிரபந்தத் திரட்டின் 'முதற்பாகம்' என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் மறைந்து அவரது தூய பாமாலைகள் தாய்த்தமிழுக்குச் சூட்டிய வாடாமலர் மாலைகளாக இன்னும் திகழ்கின்றன, என்றும் திகழும்!

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் 19-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்தனர்.

• • •

# நினைவாற்றலைப் பெருக்கும் வல்லாரை

- டாக்டர் பி.பாலசுப்பிரமணியன்

வல்லாரை, கொடியினத்தைச் சார்ந்தது; வல்லாரைக்கு மண்டுகபரணி, மதிவல்லி, பரணி, விவேகவல்லி, சோமவல்லி, சரசுவதி, மகோஷதி, கியுதவனகா எனப் பல பெயர்கள் உண்டு. ஆங்கிலத்தில் இதனை 'இன்டியன் பென்னி வொர்ட்' (Indian Penny Wort Herb) என்பர். இலத்தீனில் இதனை 'ஹைடிரோ கோடில் ஏஷியாடிக்' என்பார்கள். உருது, சமஸ்கிருதத்தில் 'பிரம்மி' எனக் கூறுவர்.

### சிறப்பியல்புகள்

இதன் உருவம், பிறப்பு, தன்மை முதலியவை மிகவும் சிறப்புடையது. புத்தியையும் நினைவாற்றலையும் பெருகச் செய்ய நமது முன்னோர்கள் சில பச்சிலைகளை முன்னரே கண்டுபிடித்திருக்கிறார்கள். வல்லாரை சர்வசாதாரணமாக ஈரத்தரையில் கொடியாகப் படர்ந்து வளரும்; இதன் சுவை முள்ளங்கியிலையின் சுவை போலத் துவர்ப்பாக இருக்கும். இதன் தண்டுகள் லேசாயிருந்தால் சற்று செஞ்சாயலான பச்சையாக இருக்கும். உலர்ந்தால் பசுமை நிறம் மாறித் தெரியும்.

சித்த வைத்தியத்திலும், ஆயுர் வேதத்திலும் இது மருந்தாகவும், காயகல்பமாகவும் பயன்படுகிறது. இதனைப் பற்றிப் பல நூல்களில் பலவிதமாக எழுதி இருக்கிறார்கள். யூனானி முறையில் இதனை விஷக்கடி, தோல் வியாதிகளுக்கு மருந்து செய்து கொடுக்கப்படுகிறது. இதனை சொரி, சிறங்கு, படை, குட்டம், விஷக்கடி, மதுமேகம் போன்ற நோய்களுக்கு மருந்தாகச் செய்து தரலாம். மூளைக்கு வலிமையையும் ஞாபகச் சக்தியையும் தருகிறது; இரத்தத்தைத் தூய்மை செய்யும் குணமும் இதற்கு உண்டு.

பசுவின் பாலில் வேடு கட்டி ஆவி பிடித்து உலர்த்தி, மருந்து செய்து கொடுத்தால், தீய குணங்கள் நீங்கிவிடும். வல்லரையுடன் கூட்டுச் சரக்குகள் சேர்த்து சூர்ணம், நெய், லேகியம், மணப்பாகு, தைலம் முதலியன செய்யலாம்.

### காமாலை உசிதம்

வல்லாரை இலைச்சாறு வராகன் எடை ஒன்று, கீழ்க்காய் நெல்லிச்சாறு வராகன் எடை ஒன்று, பசுவின் பால் அல்லது தயிர் கால் ஆழாக்கு ஆகிய இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து பருகச் செய்யவேண்டும். இவ்விதம் நாள்தோறும் இரண்டு, மூன்று வேளை சாப்பிட்டால் காமாலை நோய்கள் தீரும்.

### வல்லாரை சூர்ணம்

சுத்தி செய்த வல்லாரை சூர்ணத்துடன் வசம்பு கூட்டி சூர்ணம் செய்து காலை, மாலை தினம் இரண்டு வேளைகள் சாப்பிட்டால் புண்கள், தேமல், சொரி, சிரங்கு குணமாகும். நினைவாற்றல் கூடும். இரத்தம் சுத்தமாகும். மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடவேண்டும்.

### குட்ட நிவாரணச் சூர்ணம்

ஆங்கில மருத்துவர் பலர் வல்லரையைக் குட்ட நோய்க்கு உபயோகித்து நற்பெயர் பெற்றிருக் கிறார்கள். இதனைப் பதம் பண்ணும் முறையாவது :-

இந்த வல்லாரைச் செடியைச் சேகரித்துக் கொடியை நீக்கி இலையை மட்டும் தரித்து ஒரு பக்கம் பரப்பி நிழலில் உலர வைத்து நன்றாக உலர்ந்த பின்பு நோர்மையாய் தூய்மை செய்து, ஒரு புட்டியில் நன்றாய் மூடி வைத்துக்கொள்ள வேண்டும். இதில் ஒரு நேரத்திற்கு 2½ முதல் 4 குன்றிமணி எடை நாளொன்றுக்கு மூன்று வேளை தக்க துணை மருந்தில், அதாவது நெய்யில் அல்லது தக்க இளகத்தில் கொடுக்க வேண்டும். இப்படி கொடுத்து வரும்போது மேற்படித்தூளைப் புண்களில் தூவினாலும் அல்லது உடனே இலையைப் பறித்து சிதைத்து வைத்துக் கட்டினாலும் நன்மை உண்டாகும். இவ்வாறு செய்து சில வாரங்கள் கழிந்தபின், நோயாளி பல விதத்திலும் நலம் பெறுவான். வல்லாரை சூர்ணத்தை உள்ளுக்கு உபயோகம் செய்தால் (30 நாட்கள் தினசரி காலை மாலை) தகுந்த அனுபானத்தினால் கொடுத்தால் தோல் நோய்கள் குணமாகும்.

### கருப்பம் காக்கும் சூர்ணம்

சுத்தி செய்த சுக்கு தூள் 70 கிராமுடன் உலர்ந்த வல்லாரையிலையைத் தூய்மை செய்து 140 கிராம், ஏலரிசி 20 கிராம், மிளகுத்தூள் 15 கிராம், கல்லுப்புத்தூள் 20 கிராம், வாதுமை நெய் அல்லது பசுவின் நெய் 90 கிராம்.

மேற்கண்ட தூள்களை எல்லாம் ஒன்றாய்க் கலந்து வாதுமை நெய் அல்லது பசு நெய் சிறுகச் சிறுக விட்டு நெய்ப்பசை உண்டாக்கி கண்ணாடிப் புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.


200 மி.கி. முதல் 500 மி.கிராம் வரை ஒரு வேளைக்குச் சாப்பிட வே ம். அதனால் உண்டாகும் பலன்களாவன :

### நோய்கள்

கருப்பத்தில் உள்ள குழந்தை அதிக அறிவும், அதிக நினைவாற்றலும் பெறும் தன்மை உண்டாகும். (மருத்துவரின் ஆலோசனைப்படி, அளவுப்படி தினம் இரு வேளை தரவேண்டும்.) வீண் கவலை நீங்கும், ஆரோக்கியம் தரும், உடல் உறுதி பெறும், மனக்களிப்பும் தரும் காய கல்பமாகப் பயன் தரும்.

### பெருநோய் சூரணம்

சுத்தி செய்த வல்லாரைத் தூள், பரங்கிப் பட்டை சூர்ணத்தூள், வசம்புத்தூள் தனித்தனியே 80 கிராம் சம அளவு எடுத்து, சர்க்கரைத்தூள் 100 கிராம் கலந்து வைத்துக்கொண்டு காலை, மாலை தினசரி இருவேளை 30 நாள் நெய்யில் சாப்பிட்டால் - மேற்படி பெருநோய் குணம் உண்டாகும். மற்றும் கிரந்தி, சிரங்கு, மேகநோய் குணமாகும் இது அனுபவ முறையாகும். ●



'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருப்பதற்குக் காரணம் - தமிழை நாடு_ தமிழ்க் கலாச்சாரத்தை நாடு_ தமிழ்ப் பண்பை நாடு_ தமிழ் உணர்ச்சியை நாடு_ தமிழ் இலக்கியத்தை நாடு_ தமிழின் உயர்வை நாடு என்பதற்குத்தான். தமிழ்நாடு என்பதை ஒரு நிலத்தின் பெயராகக் கருதாதீர்கள்; நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் அறிவுரை என்று கருதுங்கள்.

# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் தேவந்தவாடி கிராமத்தில்,

1. சுமார் 20 ஆண்டுகள் நர்ஸ் குவார்ட்டர்ஸ் சப்செண்டர் மின்இணைப்பு இல்லை.
2. 93-94ல் கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி மன்றம் - மின் இணைப்பு இல்லை.
3. பள்ளிக் கட்டடத்திற்குக் கடந்த ஓராண்டாக - மின் இணைப்பு இல்லை.
4. தொலைக்காட்சிப் பெட்டி இதுநாள் வரை வழங்கப் படவில்லை.

மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

*க.மு.தனசேகரன்*
வளத்தி வழி, செஞ்சிவட்டம்,
கடலூர் மாவட்டம்.

தீர்வு :

தேவந்தவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.க.மு.தனசேகரன் என்பவர் தெரிவித்துள்ள பிரச்சினை களுக்குக் கீழ்க் கண்டவாறு அறிக்கையினைச் சமர்ப்பிக் கிறேன்.

தேவந்தவாடி கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் மின்இணைப்பு சுகாதாரத் துறையினரால் மின் இணைப்பு பெற வேண்டியிருப்பதால், சுகாதார ஆய்வாளர் அவர்களுக்கு விரைவில் மின் இணைப்பு பெறவும், மின் இணைப்பு பெறப்படாமைக்கு விளக்கத்தினையும் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியில் ஊராட்சி மன்றக் கட்டடம் ஒயரிங் செய்யப்பட்டுள்ளது, தேவனூர் இளநிலை மின் பொறியாளர் அவர்களுக்கு மின் இணைப்பு விண்ணப்பம் அனுப்பித் தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது. தேவந்த வாடி ஊராட்சி மன்றத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு இம்மாத இறுதிக்குள் மின் இணைப்புப் பெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியின் பள்ளிக் கட்டடம் புதியதாகக் கட்டி ஒயரிங் முடிக்கப்பட்டு, தற்போது மின் வாரியத்திற்கு தேவனூர் இளநிலை மின்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்து, அதற்கான தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது. இம்மாதம் மார்ச்'98க்குள் மின்இணைப்பு பெறப்பட்டுவிடும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவந்தவாடி ஊராட்சியின் தொலைக்காட்சி மிகவும் பழுதடைந்த காரணத்தால் பழுது நீக்கம் செய்ய திண்டிவனம் தொலைக்காட்சி தொழில்நுட்ப மேற்பார்வை யாளர் அவர்களிடம் அனுப்பப்பட்டுள்ளது. முக்கிய உதிரி பாகங்கள் கிடைக்கப்பெறாததால் பழுதுநீக்கம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்னும் 15 தினங்களுக்குள் பழுதுநீக்கம் செய்து, தொலைக்காட்சிப் பெட்டியினை இயங்கவைக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
மேல்மலையனூர்

பிரச்சினை :

எங்கள் ஊர் ராஜாஜி மாவட்டம் பரமத்தி. வேலூர் வட்டத்தில் ஒரு முக்கியமான ஊர் பரமத்தி. மன்னர் ஆட்சிக் காலத்தில் விஸ்வநாத நாயக்கர் ஆட்சி செய்து வந்துள்ளார். அவர் வாழ்ந்த கோட்டையும், கோட்டையண்ணன் கோவிலும் அவர் கட்டிய கோதண்ட ராமர் கோவிலும் உள்ளது. அந்தக் கோவிலுக்கு அருகில் விக்டோரியா மகாராணியின் சில்வர் ஜூப்லி கட்டடம் மிகச் சிறப்பாகக் கட்டி அதில் அரசு அதிகாரிகள் பயணியர்கள் தங்க வாய்ப்பாக இருந்தது. இக்கட்டடத்தில் தேசியத் தலைவர்கள் பலர் வந்து தங்கி உள்ளனர். குறிப்பாகக் கேரளாவில் முன்னாள் முதல்வர் நம்பூதிரிபாடு, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜ், தியாகச்சுடர் பஜீவானந்தம், பேறிஞர்அண்ணா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி, முதல்வர் கலைஞர் இன்னும் நூற்றுக்கணக்கான தலைவர்கள் வந்து தங்கிய இடம் இப்பொழுது பழுதுபட்டு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. விவரம் அறியாதவர்கள் அந்த இடத்தைக் கழிப்பிடமாக உபயோகித்து வருகிறார்கள். இக்கொடுமையைக் கண்டு சகிக்காமல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகிப் பலமுறை நான் முறையிட்டும் பயன் இல்லை. தற்சமயம் இந்த இடம் பரமத்தி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதாக ஆணையாளரும், சேர்மனும் எனது வேண்டு கோளுக்குப் பதில் தந்தனர். ஆகவே உடனடியாக அந்த இடத்தை பழுது பார்த்து மக்களுக்குப் பயன்படும் வகையில் அரசினர் நடவடிக்கை எடுத்து அந்தப் புனிதமான இடத்தின் பெயர் காக்கப்பட வேண்டுகிறேன்.

*டாக்டர் ம.அருள்மணி*
தலைவர்
தமிழ்நாடு காமராஜ் மக்கள் இயக்கம்
பரமத்தி

**தீர்வு :**

பரமத்தி பேரூராட்சியைச் சேர்ந்த விக்டோரியா மகாராணியின் சில்வர் ஜுப்ளி கட்டடம் தற்போது பேரூராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டடம் மார்ச்'97 முடிய ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. அப்போது மிகவும் பழுதடைந்திருந்தது. தற்போது அக்கட்டடம் சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது எனப் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
பரமத்தி

**பிரச்சினை :**

கோவை மாவட்டத்திலுள்ள சிறுமுகை எங்கள் ஊராகும். இங்கு 13.3.98 முதல் நாளொன்றுக்கு 4 முதல் 6 மணி நேரம் வரை மின்சாரத் தடை ஏற்படுகிறது. இதனால் எங்களின் முக்கிய அலுவலர்கள் பல பாதிக்கப்படுகின்றன.

எங்களுக்கு ஒரு நாள் விட்டு ஒருநாள் குடிநீர் விநியோகம் என்ற திட்டப்படி குடிநீர் சீராக விடப்படுவதில்லை. மாறாக ஒருநாள் வந்தால் அதற்கு இரண்டுநாள் கழித்து பகலிலோ அல்லது இரவு 12 மணிக்கு மேற்பட்டோதான் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. எனவே - சீரான மின்சார விநியோகமும், குடிநீர் விநியோகமும் எங்களுக்கு கிடைக்கச் செய்து எங்கள் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ப.அன்பழகன்
பொதுமக்கள் சார்பாக
சிறுமுகை, கோவை மாவட்டம்

**தீர்வு :**


தமிழ்நாடு மின்சாரக் கட்டமைப்பில், மின்சார உற்பத்தியின் அளவைவிட, தேவை மிகுதியாகிவிட்டதால், கடந்த சில நாட்கள் மின்தட்டுப்பாடு இருந்து வந்தது. 20.4.98 ஆம் நாள் முதல் உயர்மின் அழுத்தத் தொழிற் சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு 30% மின்வெட்டு அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மற்ற மின்நுகர்வோர்களுக்கு நிலைமை சீரடைந்துள்ளது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்பார்வைப் பொறியாளர்
கோவை

**பிரச்சினை**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் உள்ளது, 24 கோட்டுப்பாக்கம் கிராமம். கிராமத்தின் மக்கள் தொகை 3,000-த்தைத் தாண்டியுள்ளது. இங்கு அரசு உயர்பள்ளி, அஞ்சலகம், கிராமியப் பகுதிநேர நூலகம், கால்நடை மருந்தகம், வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆகியவை இருந்தும், நல்ல சாலை வசதி இருந்தும் இதுவரை போக்குவரத்து வசதி குறை பாடகவே உள்ளது. 225 தடம் எண்ணில் செங்கம் - தெள்ளார் இவ்வூர் வழியாக எப்போதாவது வந்தாலும் அதனால் எந்தப் பலனும் இல்லை. தடம் எண்.208 எம். வருகிறது. விடிய வந்து இரவு நிற்கிறது. அதிலும் அதிகமான பலன் இல்லை. ஆகையால் டபிள்யூ 11 நகரப் பேருந்தை 4 நடைகளாவது கோட்டுப்பாக்கம் வரை நீட்டினால் பொதுமக்களுக்கு நன்மை கிடைப்பதுடன் வசூலும் இரட்டிப்பாகும். போக்குவரத்துக் குறையும் நீங்கும்.

மு.வேதகிரி
கோட்டுப்பாக்கம்
திருவண்ணாமலை மாவட்டம்



**தீர்வு :**

கோரிக்கையினை ஆய்வு செய்ததில் கோட்டுப் பாக்கம் கிராமத்திற்கு மாவட்டத் தடங்கள் முறையே 208 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோட்டம் 1 மூலம் 2 நடைகளும் 252 தடத்தின் மூலம் 4 நடைகள் எனவும் ஆக மொத்தம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இத்தடத்தில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு இதுவே போதுமானதாகும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொதுமேலாளர்
தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்
வேலூர்

**பிரச்சினை :**


நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம், வெண்மணச்சேரி ஊராட்சியில் சுமார் 6,000 பேர் வாழ்ந்துவருகிறோம். எந்த வசதியும் இல்லாத எங்கள் ஊரில் அடிப்படை வசதியான குடிநீர் வசதிகூட கிடையாது. ஓராண்டிற்குமுன் பக்கத்து ஊராட்சியான திருவாய்மூர் ஊராட்சியில் இருந்து கிணறு தோண்டித் தண்ணீர் எடுக்கப்பட்டு மேல்நிலைத் தொட்டி மூலம் கொடுக்கத் திட்டமிட்டு, அனைத்துப் பணிகளும் முடிந்து சோதனையும் முடிந்துவிட்டது. ஆனால் சோதனை மூலம் வந்த தண்ணீரைத் தவிர அதன்பின் தண்ணீர் வரவில்லை. அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, நாங்கள் குளத்துநீரை குடித்து வருகிறோம். அதனால் எங்களுக்குக் காலரா மற்றும் பல தொற்று வியாதிகள் ஏற்பட்டு மிகவும் துன்பப்படுகிறோம். எனவே தயவு செய்து எங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

ஊர்ப் பொதுமக்கள்
வெண்மணச்சேரி, நாகைமாவட்டம்

**தீர்வு :**

வெண்மணச்சேரி ஊராட்சி மக்களுக்குக் குடிநீர் வழங்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பெற்ற மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பார்வை 2ல் கண்டுள்ள கடிதப்படி ஊராட்சி வசம் ஒப்படைக்கப் பெற்று அதன் மூலம் தற்போது பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.ஆர்.வேதபுரி, பி.எஸ்.ஸி.,
வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)
நாகப்பட்டினம் மாவட்டம்



**பிரச்சினை :**

கரூர் மாவட்டம், தாராபுரம் பிரதான சாலையின் 16 கல் தொலைவில் அமைந்துள்ள பள்ளப்பாளையம் கிராமம் எங்கள் ஊராகும். இங்கும் அதைச் சுற்றியும் சமார் 20 ஆயிரம் மக்கள் வசித்துவருகிறார்கள். இங்குள்ள அஞ்சல் நிலையத்திலுள்ள பொதுத் தொலைபேசி மூலமாகத்தான் ஏதாவது முக்கிய மற்றும் அவசரப் பிரச்சினைகளுக்கு செய்தி அனுப்பித் தொடர்பு கொண்டிருந்தோம். ஆனால், கடந்த அக்டோபர் மாதம் முதல் இங்கு ஒரு பொதுத் தொலைபேசியும் இயங்குவதில்லை. தீ விபத்து, இரவு நேரங்களில் மகப்பேறு மருத்துவத்திற்குக் கொண்டு செல்ல அவசர ஊர்தி அழைக்க, மற்றும் பல பிரச்சினைகளுக்கும் மக்கள் பொதுத் தொலைபேசி இயங்காததால் மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே தாங்கள் எங்களின் இந்த பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு (பொது தொலைபேசி இயங்கச் செய்யுமாறு) மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர்ப் பொதுமக்கள்
பள்ளப்பாளையம் அஞ்சல்
கரூர் மாவட்டம்

**தீர்வு :**

கரூர் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் உள்ள பொதுத் தொலைபேசி இயங்காததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு காசிப்பாளையம் இணைப்பகத்துடன் தொடர்புடைய தொலைபேசி எண்.85235ஐ 28.4.98 முதல் பள்ளிப்பாளையம் தொலை பேசிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவ்வெண்ணைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கரூர் தொலைபேசி இணைப்பகத்தைச் சேர்ந்த கோட்டப் பொறியாளர் தெரிவிக்கின்றார் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.சோ.அய்யா இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சித்தலைவர்
கரூர் மாவட்டம், கரூர்.

**பிரச்சினை :**

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்கா, பெத்த நாயக்கன் பாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த பானியாபுரி (ஊராட்சி) கிராமம் எங்கள் ஊராகும். இங்கு சுமார் 3,000 பேர் உள்ளனர். இந்தக் கிராமத்தில் ஒரு போர்வெல் மோட்டார் (விசைப்பம்பு) இயங்கிவருகிறது. ஆனால் போதிய அளவு போர்வெல்லில் தண்ணீர் இருந்தும், அடிக்கடி குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுவருகிறது. ஏற்கெனவே போரில் 7.5 (எச்.பி.) குதிரைத் திறன் உள்ள மின்மோட்டார் பொருத்தப் பட்டு இருந்தது. அந்த மோட்டார் பழுது ஆகிவிட்டதால், மாற்று மோட்டார் 5 (எச்.பி) குதிரைத்திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டது. அதிலிருந்து நீண்ட நேரம் மோட்டார் இயங்கவேண்டி இருப்பதாலும், தற்போது சில நேரங்களில் மின்சாரத் தடை ஏற்படுவதாலும் குறித்த நேரத்தில் போதிய குடிநீர் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்படுவதால், குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மற்றும் கைப்பம்பு சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்து வருவதால் மேலும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட ஏதுவாக அமைந்துள்ளது. ஆகவே எங்கள் ஊருக்குக் குடிநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருப்பதால் உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்படி குறையைப் போக்க ஆவன செய்யுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எம். பழனிமுத்து
சமூக சேவகர், பழனியாபுரி
ஆத்தூர்வட்டம், சேலம் மாவட்டம்

**தீர்வு :**

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பழனியாபுரி ஊராட்சி குடிநீர்ப் பற்றாக்குறை தேவையை முன்னிட்டு நடவடிக்கை மேற்கொண்டு உடன் குடிநீர்த் தேவை சரிசெய்யப்பட்டது.

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் உத்திரவின்படி, பழனியாபுரி ஊராட்சி மன்றத் தலைவரிடம் நேரில் அனைத்து கைம்பம்புகளையும் உடன் பழுது நீக்கம்செய்து சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

இனிவரும் காலங்களில் அனைத்துக் கைப்பம்புகளும், மின்மோட்டார்களும் பழுது ஏற்பட்டால் தாமதமின்றி நடவடிக்கை மேற்கொண்டு நிவர்த்திசெய்ய வேண்டுமென அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் நேரில் அறிவுரை வழங்கப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியம்,
பெத்தநாயக்கன்பாளையம்.

பிரச்சினை :

காமராஜர் மாவட்டம், ராஜபாளையம் தாலுக்கா, தனவாய்புரம் கிராமப் பகுதியில் சாயம்போடும் தொழில்கூடங்கள் சுமார் 60க்கு மேல் உள்ளது. இவைகளிலிருந்து வெளியேறும் கெமிக்கல் கழிவுகள் மிகவும் நச்சுத் தன்மை கொண்டவை. இந்தக் கழிவுகள் திறந்த வாய்கால்கள் மூலம் செட்டியார்பட்டிக் கிராமம் தொண்டைமான் குளத்தில் போய்ச் சேர்கிறது. கழிவுநீர் செல்லும் வார்கால் மூடப்படாதவைகளாகத் திறந்த நிலையில் உள்ளன. மேலும், சில இடங்களில் மீன் வாய்க்கால் வழியாகச் செல்கிறது. இந்தப் பகுதிகளில் பன்றிகள் அடைகின்றன. மேலும் கழிவு நீர் குளத்தில் போய்ச் சேர்வதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதில் சாகுபடியாகும் உணவுப் பொருள்கள் சுவை குறைவாக உள்ளது. குளங்களில் வளர்க்கப்படும் நவீன ரக மீன்கள் செத்துவிடுகின்றன. கழிவு நீர் செல்லும் பகுகளில் சுமார் 6 கிலோமீட்டர் சுற்றளவுப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளில் நீர் கெட்டுவிடுகிறது. இந்தச் சாயப்பட்டறைக் கழிவுகளில் அரசு மாசுக்கட்டுபாடு விதிகளுக்கு உட்பட்டு அமைக்கப்படவில்லை. இதனால் பல நோய்கள் ஏற்படவும் பொதுமக்களின் சுகாதாரம் பாதிக்கபடவுமான நிலை உள்ளது.


எனவே, சாயப்பட்டறை கெமிக்கல் கழிவுகளை மூடிய குழாய்களின் மூலம் ஊரிலிருந்து தொலைவிற்கு வெளியேற்றி பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் வேண்டுகிறோம்.

இராஜபாளையம் (மேற்கு)
வட்டார காங்கிரஸ் சேவாதளம்,
சேர்மன்.

தீர்வு :

தளவாய்புரம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்கள், இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. இந்தக் கிராமங்களில் சுமார் 36 சிறிய அளவிலான சாயத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் மனித சக்தியைக் கொண்டு இயக்கப்படுபவை. இயந்திரமாக்கப்படவில்லை.

ஒவ்வொரு சாயப்பட்டறைகளிலிருந்தும் சுமார் 5,000 லிட்டர்கள் வரை தொழிற்சாலைக் கழிவு நீரானது உற்பத்தி செய்யப்பட்டுக் கழிவுநீர், கால்வாய் வழியாக வெளியேற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைகளின் கழிவுநீரானது புகாரில் கூறியவாறு சுமார் 1 கிலோமீட்டர்



தொலைவில் அமைந்துள்ள தொண்டைமான் குளத்திற்குத் திறந்த கழிவுநீர் வாய்க்கால் வழியாகச் சுத்திகரிக்கப்படாமல் சென்றடைகின்றது. இத்தொழிற்சாலைகளின் மற்றொரு பகுதியான கழிவுநீரானது சுத்திகரிக்கப்படாமல் சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள தெப்பக்குளம் குளத்திற்குச் சென்றடைகிறது. மேற்குறிப்பிட்ட குளத்து நீரானது மழைக்காலத்தில் விவசாயத்திற்கு பயன்படுத்தப் பட்டது அறியப்பட்டது.

ஏற்கெனவே கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சாயக்கழிவு நீரின் மாதிரி நீரானது கழிவுநீர்க் கால்வாய் மற்றும் தொன்டைமான் குளத்திற்கு அருகில் உள்ள கிணறு ஆகியவைகளில் இருந்து எடுக்கப் பட்டு வாரியத்தின் ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப் பட்டது. அந்தக் கிணற்று நீரில் பி.ஓ.டி 35 மி.கி/லி, சி.ஓ.டி. 592 மி.கி./லி மொத்தம் டிஸ்ஸால்வ்டு சாலிட்ஸ் (Total Dissolved Solids) 3022 கி.கி./லி ஆகவும் இருப்பது அறியப்பட்டது. கழிவுநீர்க் கால்வாயில் உள்ள டிஸ்ஸால்வ்டு சாலிட்ஸின் அளவானது 3352 ஆகவும் இருப்பது அறியப்பட்டது.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள சாயப்பட்டறைகளுக்கு வாரியத்தின் அனுமதி பெறாமல் முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமல் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் முகாந்திரம் கேட்கப் பட்டுள்ளது.

வாரியம் இச்சாயப்பட்டறைகளைத் தொடர்ந்து கண்காணித்து இவற்றின் மேல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.கோ.ரெங்கசாமி, பி.இ.எம்.டெக்.,
உறுப்பினர், செயலர்
தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்

✦ ✦ ✦ ✦

## 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

### பணிநிறைவில் மனம்நிறைவு

நெல்லுக்கு இறைத்தநீர், நெய்வேலிக் காட்டாமணக்குச் செடிகளுக்குப் பாய்ந்து, வண்டலிட்ட பகுதியிலே மண்டியிட்டு, பாதை யறியாது பாழாகிப் போன பழைய கதை - இனித்தொடராது என்று உறுயளித்த முதலமைச்சர், தமது பயணத்தைத் தொடர்ந்து விளைந்த பயன்களையும், எதிர்காலப் பணி களையும் ஓர் அறிக்கையில் அழகுறத் தெரிவித்தார். தூர்வாரும் பணியில் தொடர்புடைய அனைவருக்கும் நன்றி பாராட்டும் நயத்தக்க நாகரிகத்தின் விளக்கமாய் அது அமைந்தது. அது வருமாறு:

காவிரி டெல்டா பகுதியில் மொத்தம் 14,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன ஆதார நீர் வரத்துகளும், வடிகால் ஆதார வாய்க்கால்களும் இருக்கின்றன. இவை அனைத்திலும் 1934-ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்பட்ட காலத்தி லிருந்து அவ்வப்போது செய்யப்பட்ட குடிமராமத்து அளவிலான சிறுசிறு தூர் வாரும் பணிகளைத் தவிர பெரும் அளவிற்குத் தூர் வாரும் பணி பல்லாண்டு காலமாக நடத்தப்படவே இல்லை. அப்படி ஓர் தூர்வாரும் பணியை நிறைவேற்ற 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந்த 14,000 கிலோ மீட்டர் நீர்வரத்து மற்றும் வடிகால் வாய்க்கால்கள் "ஏ" மற்றும் "பி" என இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். இவை பொதுப்பணித்துறைக்கு உட்பட்டவை ஆகும் மற்றும் "சி", "டி" போன்ற சிறிய வாய்க்கால்கள் வேறு பல்வேறு துறைகளுக்கு உட்பட்டவை. தயாரிக்கப்பட்ட 154 கோடி மதிப்பீட்டு திட்டத்தில், முதல் கட்டமாக கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும் "ஏ" மற்றும் "பி" பிரிவு பாசன கால்வாய் களிலும் இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும் "ஏ", "பி" போன்ற பாசனக் கால்வாய் களிலும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான தூர்வாரும் திட்டத்தில் மிச்சம் விடுபட்டுள்ள பிரிவுகளின் வேலையும் சில நாட்களில் முடிவடையும் தருவாயில் இருக்கின்றது. பொதுவாக 154 கோடி ரூபாய் திட்டத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் 30 கோடி ரூபாய்தான் செலவழிக்க முடிந்திருக்கிறது. ஏனெனில் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் தண்ணீர் வராத காலமான ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று மாத காலத்தில் இந்த பணியைத் தொடங்கி நிறைவேற்ற வேண்டும். இந்த ஆண்டு இந்தப் பணிகளுக்கு, திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, மொத்தம் 607 பணிகளில் 508 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை 120 ஒப்பந்தக்காரர்கள் முறைப்படி ஒப்பந்தப் புள்ளிகளின் மூலம் ஏற்று நடத்தி வருகிறார்கள். மொத்தம் 1,478 கிலோ மீட்டர் நீளத்தில் 1363 கிலோ மீட்டர் நீளம் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 99 : நீளம் 115 கிலோ மீட்டர்கள் ஆகும். சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் ஏறத்தாழ 4,000 கிலோமீட்டர் நீளத்திற்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை யொட்டி, மீதமுள்ள 10,000 கிலோமீட்டர் நீளம் நீர்ப்பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களில் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு, காவிரி டெல்டாப் பகுதியில் முழுமையாக பாசன மற்றும் வடிகால்களை தூர்வாரும் பணி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணிகளை ஆர்வமுடனும், அக்கறையுடனும் நிறைவேற்றுவதற்கு அயராது உழைத்துவரும் உள்ளாட்சித் துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அமைச்சர் களுக்கும், அதிகாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் - நல்லெண் ணத்துடனும் நன்றிப் பெருக்குடனும் இப்பணிகள் நிறைவேற ஆதரவு தரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் - நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி இந்த நல்லபணி நடந்திட ஊக்கப்படுத்திய பத்திரிகையாளர்களுக்கும் என் இதயமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் வழங்கிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

### பாசன வரலாற்றில் புதிய பொன்னேடு

*படையெடுப்புகள் பல நடைபெற்ற வேளையிலும் பாதிக்கப்படாதது காவிரிப்பாசனம் என்று வரலாறு சொல்கிறது. அந்தக் காவிரியை மண்ணும், காட்டாமணக்குச் செடிகளும் மறித்து நின்றன என்பது வேடிக்கைதான். ஆனால் இந்த வேடிக்கை வாடிக்கையாகப் போனபோது விவசாயிகள் பட்ட வேதனைகள் கொஞ்சமல்ல. நெல்லுக்கு நீர் வரத்தில்லை, பெரு மழைக்காலத்திலோ, வெள்ளம் பாய்ந்து பயிர்கள் நீரில் மூழ்கும் பெருந்தொல்லை! இந்த நிலை நீடித்திருந்தால், 'சோழநாடு சோறுடைத்து' என்னும் பழமொழியே, கனவாய், பழங்கதையாய் மெல்லப் போயிருக்கும்.*

*294 பொக்லைன், ஜே.சி.பி. புல்டோசர் ஆகிய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் நடைபெற்ற தூர்வாரும் பணிகளால், ஆறுகளும் கால்வாய்களும் ஆழமாயின; கரைகள் உயரமாயின.*

*மைசூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரை 492 கி.மீ. தொலைவுக்குக் காவிரிக்குக் கரையமைத்தான் சோழமன்னன் என்பது பழைய வரலாறு. பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள ஆறுகள், கால்வாய், வடிகால்கள் ஆகியவற்றைத் தூர்வாரிக் கரை உயர்த்தினார் கலைஞர் என்பது இளைய வரலாறு.*

*உண்மையில் இன்று கலைஞரின் திருப்பணி காவிரிப்பாசன வரலாற்றில் ஒருபொன்னேடுதான்.*

### நடப்பாய் வாழி காவிரி!

*'நடந்தாய் வாழி காவேரி' என்றார் இளங்கோ. அந்த நதி நங்கைக்கு, நடைபாதை அமைத்துத் தந்து 'நடப்பாய் வாழி காவேரி' என்று கல்லணை நீரைத் திறந்துவிட்டார் கலைஞர். இனி, கடைமடை வரையிலும் இடையூறில்லை; 'நடப்பாய் வாழி காவிரி' என நாமும் காவிரிக்கு வாழ்த்திசைக்கின்றோம்.*

| | | |
|---|---|---|
| கவியரசு | **காமராசரை பற்றிக்** | பெருந்தலைவர் |
| கண்ணதாசன் | | காமராசர் |
| பிறந்த நாள் : | **கவியரசு கண்ணதாசன்** | பிறந்த நாள் : |
| ஜூன் 24 | | ஜூலை 15 |

# காமராசரை பற்றிக் கவியரசு கண்ணதாசன்

காமராசருடைய பிறந்த நாளை நான் நினைவில் வைத்துக் கொண்டது போல், என் பிறந்தநாளையும் அவர் நினைவில் வைத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கும் எனக்கும் இடையே ஒரு இடைவெளி ஏற்பட்டிருந்த நாளில்கூட, ஜூன் 24ந்தேதி என்றால் முதல் டெலிபோன் அவரிடமிருந்துதான் வரும்.

ஜூலை 15-ந் தேதி என்றால் அவருக்கு முதல் மாலை என்னுடையதாக இருக்கும்.

✦ ✦ ✦

அவர் மறைந்தபின் ஏற்பட்ட சூன்யத்தில், கானல்நீர் போல என் ஆன்மா பறந்துகொண்டிருக்கிறது.

பக்தர்கள் வரும்போதெல்லாம் கோவில் சிலைக்கு முன்னால் கற்பூரம் எரிவதுபோல், பலர் பல விஷயங்களை நினைவுபடுத்தும் போதெல்லாம் என் நெஞ்சம் நெருப்பாய்க் கொதிக்கிறது.

இலட்சக்கணக்கான மக்கள், பேராசிரியர்கள் என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் எந்த வார்த்தைகளால் என்னை அலங்கரித்திருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன்.

ஆனால், 'காட்டுக்கு ராஜா - சிங்கம், கவிதைக்கு ராஜா - கண்ணதாசன்' என என் தலைவன் புகழ்ந்து கூறிய அந்த மொழிகளை ஒரு கல்வெட்டாக என் நெஞ்சம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நான் 'ராஜா'வோ இல்லையோ, நான் அடிபணியும் ஒரு சக்கரவர்த்தி எனக்குச் சூட்டிய மகுடம் அது.

அவரது புனிதமான இரு கரங்களால் அந்த மணிமகுடம் என் தலையில் வைக்கப்பட்டது.

✦ ✦ ✦

'கண்ணதாசன் கள்ளமில்லாதவன்; எதையும் வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறான்; வஞ்சகமில்லாத உள்ளம்; அவன் சொன்ன மாதிரிதான் எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது'. என்று காமராஜ் ஒருவரிடம் சொன்னதை, அந்த நண்பர் எனக்குச் சொன்னபோது; பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியே எனக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது.

காலம்பார்த்து அவரது தீபத்தைப் பிரகாசிக்கச் செய்ததில், எனக்கும் பங்குண்டு.





கடைசிவரை அதை மறக்காமல் இருந்தவர் அவர் ஒருவரே.

தமிழகத்தில் தேசியப் பாரம்பரியத்தின் அந்தக் கடைசி மணிமண்டபம் இடிந்து விழுந்தபோது என் உள்ளமும் உடைந்து விழுந்தது.

✦ ✦ ✦

ஜூலை 15 அவர் பிறந்த நாள். என்னைப் பொறுத்தவரை என் குலதேவதையின் திருநாள்.

அந்தத் திருநாளை நான் மௌனமாகக் கொண்டாடுவேன். காலையில் அவரது நினைவாலயத்தில் நான் மலர் மாலையைச் சாத்தப் போவதில்லை.

ஒரு கவிதையை எழுதிக் கற்பூரமாக்கப் போகிறேன்.

கற்பூரமாகிவிட்ட அவனது உடலோடு அந்தக் கவிதையும் சேர்ந்துகொள்ளட்டும்.

பறந்துபோன அவனது ஆவியோடு அந்த எழுத்துக்களும் பறந்து போகட்டும்.

இரண்டும் ஒன்றை ஒன்று சந்திக்கும் போது, அவன் என்னை நினைப்பான்.

- 'பத்திரிகையாளர் நெஞ்சில் காமராஜ்' என்ற நூலிருந்து




# இந்தியாவிலேயே முதலிடம் பெறுகின்ற அளவிற்கு, தமிழகத்தை தொழில்மயமான மாநிலமாக உருவாக்குவோம்

- முதலமைச்சர் **கலைஞர்**

**செ**ன்னையை அடுத்த திருப்போரூரில் ஸ்ரீராம் நிறுவனத்தின் வாகன பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை 25.6.98 அன்று மாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :

ஸ்ரீராம் வாகன பாகங்கள் தயாரிக்கும் இந்த நிறுவனம் டிட்கோ அதாவது தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனத்தோடு இணைந்து இங்கே 21 கோடி ரூபாய் முதலீட்டில் இணைத் துறையில் வாகன பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தொடங்க 7.1.98 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த புதிய தொழிற்சாலை வாகன பாகங்களான கார்புரேட்டர், சாக் அப்சர்வர், எஞ்சின் எரிபொருள் இன்செக்சன் போன்றவற்றிற்குத் தேவையான நுட்பமான பாகங்களை உற்பத்தி செய்ய இருக்கின்றது. ஸ்ரீராம் நிறுவனம், வாகனங்களுக்கு நிதிஉதவி செய்யும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளது. இதன் சார்பு நிறுவனமான ராம்பால் நிறுவனம், சூப்பர் சாக் அப்சர்வர், வாகன உதிரி பாகங்கள் செய்யும் தொழிற்சாலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் எனக்கு முன்னால் இங்கே உரையாற்றியவர்கள் குறிப்பிட்டதைப் போல தொடக்கத்தில் ஏறத்தாழ 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளை வழங்க இருக்கிறது. காலகட்டத்திலே அது 500 ஆக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திலே 21 கோடி ரூபாய் முதலீடு என்றாலும், இதிலே டிட்கோவின் பங்கு மூலதனம் 11 சதவீதம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மகிழத்தக்க, பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க சாதனை

இதில் பாராட்டத்தக்க சாதனை என்னவென்றால் இணைத் துறையில் அமைகின்ற இந்த தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் முடிந்த 7.1.98 முதல் 3 மாத காலத்திற்குள்ளாக கட்டி முடிக்கப் பெற்று, கடந்த ஏப்ரல் திங்களிலே சோதனை உற்பத்தியை இந்தத் தொழிற்சாலை தொடங்கிவிட்டது என்பது மகிழத்தக்க, பாராட்டத்தக்க, வாழ்த்தத்தக்க, வரவேற்கத்தக்க ஒரு சாதனை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## வாகன உற்பத்தித் தொழிலில் இந்தியாவில் முதன்மை நிலையில் தமிழகம் உள்ளது

தமிழகத்தில் புதிய-கார் தொழிற்சாலைகள் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கின்றன. வாகன உற்பத்தித் தொழிலில் இந்தியாவிலேயே முதன்மையான நிலையிலே இன்றைக்கு தமிழகம் இருக்கிறது. தொழில்வளத்தில், தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்திலே இன்றைக்கு இருக்கின்ற தமிழகம் கடந்த காலங்களிலே ஐந்தாவது இடத்திலே இருந்து நல்ல வேளையாக அது ஆறாவது இடத்திற்குப் போகாமல் மூன்றாவது இடத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டு உள்ள சூழ்நிலையில், வாகன உற்பத்தித் தொழிலிலே இந்தியாவிலே முதன்மை நிலையிலே தமிழகம் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அமெரிக்க நாட்டினுடைய புகழ்பெற்ற ஃபோர்டு நிறுவனம் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைக்கு அருகிலே உள்ள

மறைமலை நகரில், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் மோட்டார் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவி இருக்கிறது. அதைவிட வேகமாக அதற்குப் பிறகு தொடங்கப்பட்ட தென்கொரிய நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனம், 2,450 கோடி ரூபாய் செலவில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்கள் உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையைக் கட்டி முடித்து, சோதனை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. வரும் அக்டோபர் மாதம் வாணிக நோக்கிலே உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. தொடக்க விழாவிற்கான தேதியையும் அவர்கள் என்னிடத்திலே பெற்றிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடலுக்காக அல்ல; கரையிலே இருக்கின்ற மக்களுக்காக அலை காற்றடிக்கிறது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கிற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர, அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அதுபோல நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்.

- அறிஞர் அண்ணா

இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம், ஜப்பான் நாட்டு மிட்சுபிஸி தொழில் நிறுவனத்தோடு இணைந்து - திருவள்ளூர் அருகில் லேன்சர் மாடல் கார்களை உற்பத்தி செய்ய, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய தொழிற்சாலையை நிறுவி வருகின்றது.

அசோக் லேலண்டு நிறுவனம் ஒசூரில் 630 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 10 ஆயிரம் சரக்கு வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்திருக்கின்றது.

## கார்களுக்கான உதிரி பாகங்கள் மிகுந்த அளவில் தேவைப்படும் சூழ்நிலை

இப்படி மிகப்பெரிய அளவில் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் அமைந்து வருவதால், அந்தக் கார்களுக்கான தரமான உதிரி பாகங்கள் மிகுந்த அளவிலே தேவைப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உதிரிதானே என்று யாரும் அலட்சியப்படுத்தக்கூடாது. உதிரிதான் மிக முக்கியமான ஒன்று.

## பழுதான காரை அண்ணாவுடன் சேர்ந்து தள்ளிச்சென்றேன்

உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டுமேயானால் ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மோடு வாழ்ந்த அந்தக் காலத்தில், காஞ்சிபுரம் சென்றிருந்த நான் விடியற்காலை அண்ணா அவர்களோடு புறப்பட்டு - அண்ணா அவர்களும் நானும் இருவரும் விடியற்காலை 4 அல்லது 5 மணிக்கு காஞ்சிபுரத்தில் இருந்து புறப்பட்டு சென்னைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றோம். அப்பொழுது என்னுடைய வாகன ஓட்டுநர் ரங்கன், என்பவர் காரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

சென்னைக்கு மிக அருகிலே வந்துகொண்டிருந்தபொழுது மிக நல்ல மழை. அந்த மழையில் கார் திடீரென்று நின்றுவிட்டது. நின்றவுடன் எவ்வளவோ முயற்சித்தும் புறப்பட வழியில்லை. பிறகு ஓட்டுநர் கீழே இறங்கி காரின் முன்பகுதி - மட்கார்டு பகுதியைத் திறந்து ஏதேதோ அந்த இயந்திரத்திலே தன்னுடைய திறமையையெல்லாம் காட்டி பழுது பார்க்கும் வேலையைச் செய்து கொண்டே இருந்தார். கார் நகருவதாக இல்லை. மறுபடியும் முன்பகுதியை மூடிவிட்டு, காரைத் தள்ளச்சொன்னார். அண்ணாவும், நானும் இருவரும் சேர்ந்து அந்தக் காரைத் தள்ளினோம்.

எங்கள் பலத்திற்கு எங்களால் முடிந்த அளவிற்கு காரை வெகுதூரம் தள்ளினோம். அப்பொழுதும் கார் இயங்க மறுத்துவிட்டது. அந்த நேரத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்கேயோ சூட்டிங்கில் இருந்து வீட்டிற்குத் திரும்பவேண்டியவரை அழைப்பதற்கு அவருடைய கார் மாத்திரம் சென்று கொண்டிருந்தது. அந்தக் கார் டிரைவர் கீழே இறங்கி "என்ன அண்ணா என்ன ஆயிற்று" என்று கேட்டார். "இப்படி ஆகிவிட்டது. கார் புறப்படவில்லை" என்று சொன்னதும், "நான் இந்த காரிலே கொண்டு போய் உங்களை வீட்டிலே விட்டு விடுகிறேன்" என்று சொன்னார். அண்ணா சொன்னார்; "என்னதான் கோளாறு இருக்கிறது பாரேன்" என்றார். அவரும் காரைத் திறந்து பார்த்து எதுவும் புரியாமல் விழித்தார். பிறகு, கடைசியாகப் பார்த்தால் அதிலே உள்ள ஒரு ஸ்குரு, நட்டு ஒன்று காணவில்லை. அது எங்கே என்று தேடிப்பார்த்தால் கிடைக்கவில்லை. அது இருந்தால் இந்நேரம் கார் ஸ்டார்ட் ஆகியிருக்குமே, அது எங்கே என்று தேடிப்பார்த்து, கடைசியாகப் பார்த்தால், அது பழுது பார்த்த அவசரத்தில் என்னுடைய கார் டிரைவர் தன்னுடைய பாக்கெட்டிலேயே போட்டுக் கொண்டுள்ளார். பிறகு, அதை எடுத்து அதைப் போட்டு திருகி கார் புறப்பட்டது. நாங்கள் வீடு வந்து சேர்ந்தோம்.

## உதிரிபாகம் கூட காரில் மிகமுக்கியமானதுதான்

ஆக, ஒரு ஸ்குரு - உதிரிபாகம் ஒரு காரிலே எவ்வளவு முக்கியமானது என்பதற்காக இந்த நிகழ்ச்சியை நான் சொல்லுகின்றேன். அப்படிப்பட்ட உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் ஒன்றாக இது இன்றைக்கு தொடங்கப் பட்டிருக்கின்றது.

## உதிரிபாகங்கள் மூலம் தமிழகத்திற்கு ரூ.8,300 கோடி ஆண்டு வருமானம்

இந்தியாவிலேயே இந்த வாகனங்களுக்கான உதிரிபாகங்கள் தயாரிக்கின்ற தொழில்களில் ஏறக்குறைய 40 சதவீதத்திற்கும் மேல் நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. இந்த உதிரிபாகங்கள் செய்யும் தொழிலின் மூலம் தமிழகத்தில் கிடைக்கின்ற ஆண்டு வருவாய் 8,300 கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய கார் தொழிற்சாலைகள் தமிழகத்திலே தோன்றுவதன் மூலம், இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த 8,300 கோடி ரூபாய்

"

இந்தியாவிலேயே

வாகனங்களுக்கான

உதிரிபாகங்கள் தயாரிக்கின்ற

தொழில்களில் ஏறக்குறைய

40 சதவீதத்திற்கும் மேல் நிறுவனங்கள்

தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன.

இந்த உதிரிபாகங்கள் செய்யும்

தொழிலின் மூலம் தமிழகத்தில்

கிடைக்கின்ற ஆண்டு வருவாய்

8,300 கோடி ரூபாய்

"

ஏறத்தாழ 16,000 அல்லது 17,000 கோடி ரூபாயாக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அமைந்து வரும் புதிய கார் தொழிற்சாலைகள் நிலையான, தரம் மிக்க உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை இந்த புதிய கார் தொழிற்சாலைகள் ஊக்கப்படுத்துகின்றன. அந்தத் தொழிற்சாலைகளோடு இணைந்து அரசும், அரசினுடைய தொழில் வளர்ச்சி நிறுவனங்களும் ஊக்கப்படுத்த தயாராக உள்ளன.

**ஒளிவுமறைவற்ற அணுகுமுறைகள்**

கழக அரசு தமிழகத்திலே தொழில் வளத்தைப் பெருக்கிட பல முயற்சிகளை 96-ஆம் ஆண்டு 4-வது முறையாக பொறுப்புக்கு வந்த பிறகு எடுத்து வருகின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள் குறிப்பாக, ஒற்றை விலைப்புள்ளி முறை முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டது. உலக அளவில் திறந்த விலைப்புள்ளிகள் கோரப்படுகின்றன. தொழில் நேயத்தோடு ஒளிவுமறைவற்ற அணுகுமுறைகள் (Transparant Approach) பின்பற்றப் படுகின்றன.

முன்பெல்லாம் டிரான்ஸ்பரண்ட் என்பதற்கு பொருளே வேறு. ஒளிவுமறைவில்லாத அப்ரோச் இன்றைக்குத் தொழில் தொடங்கப்படுவதில் ஆர்வமிகுந்த வெளிநாட்டுக்காரர்களுக்கு தமிழகத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை வசதி, இடம், தண்ணீர், மின்சாரம், கடன் வசதி ஆகிய அனைத்திற்கும் வாய்ப்புக்களைத் தருகின்ற பணிகள் இங்கே விரைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளும் - ஒரே இடத்தில் உடனுக்குடன் கிடைக்கும் ஒற்றைச் சாளர முறை (Single Window System) இப்பொழுது நீங்கள் அறிவீர்கள்.

**ஒற்றைச் சாளர முறையை அறிமுகம் செய்த முதல் மாநிலம் தமிழகம்**

இந்த ஒற்றைச் சாளர முறையை இந்தியாவிலேயே அறிமுகப்படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்று நான் அல்ல 'பிஸினஸ் டுடே' என்ற பிரபலமான ஏடு பாராட்டி எழுதியிருக்கின்றது. இத்தோடு தொழில் தொடங்க முன் வருவோர்க்கு எந்த நிலையிலும் பிரச்சினையோ, தடையோ ஏற்பட்டாலும் அவர்கள் உடனுக்குடன் அரசை அணுக, சந்திக்க வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டுள்ளன. இப்பொழுதெல்லாம் தாராளமாக தொழிலதிபர்கள் எங்களைச் சந்திக்கலாம். பிரச்சினைகளை சொல்லலாம். எந்தவிதமான தடையும் கிடையாது. தாராளமாக வரலாம். இலவசமாகவே வரலாம்.

**இரண்டாண்டு காலத்தில் 33 தொழில்களுக்கான ஒப்பந்தங்கள்**

கழக அரசின் இத்தகைய அணுகுமுறைகளின் காரணமாக உலகின் பல பகுதிகளில் இருந்தும், இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் தொழில் தொடங்க முனைவோர் பலர் வந்து கொண்டேயிருக்கின்றார்கள்.

33 புதிய தொழில்களுக்கான ஒப்பந்தங்கள் இந்த இரண்டாண்டுக் காலத்திலே ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தங்கள் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல வெளிநாட்டுத் தொழில்நுட்பங்கள், தமிழக தொழில்துறையின் மேம்பாட்டிற்காக ஈர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வளர்ந்து வருகின்ற இந்தத் தொழில் மேலும் மேலும் மேம்பாடு காண்பதற்காகவும், செம்மையான அளவிலே இந்தத் தொழிற்சாலைகள் வளருவதற்காகவும் தமிழகம் முழுவதும் எப்படி இங்கே காஞ்சிபுரம் மாவட்டத்தின் ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல காஞ்சிபுரம் மாவட்டத்திலே மாத்திரமல்லாமல் தமிழகம் முழுவதும் தொழில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, தமிழகம் தொழில்மயமான ஒரு மாநிலம் என்பதையும், இந்தியாவிலேயே முதலிடம் பெறுகின்ற அளவிற்கு, அந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்த இதைப் போன்ற நிறுவனங்கள் சிறிய அளவிலே இன்றைக்கு தோன்றினாலும் கூட சிறுகக் கட்டி பெருக வாழ் என்பதைப் போல, பெரும் அளவிலே இவைகள் விரிவடைந்து நல்ல முறையிலே இயங்க வேண்டும் என்ற என்னுடைய இனிய வாழ்த்துக்களை, இதயமார்ந்த வாழ்த்துக்களை நிறுவனத்தாருக்கு தெரிவித்து, அவர்கள் சொன்னார்கள் இன்னும் பல தொழிற்சாலைகளை நான் அடிக்கல் நாட்ட வேண்டும், திறந்து வைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் உங்களுக்குத் தேவையில்லை. அடிக்கல் நாட்டுவேன், திறந்து வைப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

● ● ●

# ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலை

சென்னையை அடுத்த மறைமலை நகரில் 24.6.98 அன்று 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் சார்பில் ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:

இன்று தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் சார்பில் ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவினை உங்களுடைய இனிய வாழ்த்துக்களோடு நடத்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் குறிப்பிட்டதைப்போல் இந்த ஆட்சியினுடைய காலத்தில்தான் மறைமலைநகர் உருவாக்கப்பட்டது. காடுமேடாகக் கிடந்த இந்த இடத்தைப் பண்படுத்தி, சென்னையினுடைய விரிவாக்கப் பகுதியாகவும் - தொழில்கள் வளருவதற்கு ஏற்ற தகுதியுடைய நிலமாகவும் இந்தப் பூமி மாற்றப்பட்டு - மறைமலைநகர் உருவாக்கப்பட்டு இன்றைய தினம் பல்வேறு தொழிற்சாலைகள் அமைவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


இங்கே மறைமலைநகர் உருவான காரணத்தினாலேதான் 1,800 கோடி ரூபாய் முதலீட்டில் போர்டு கார் தொழிற்சாலை அமைத்திடவும், ஏறத்தாழ 600 கோடி ரூபாய் முதலீட்டில் 35 சிறிய, பெரிய தொழிற்சாலைகள் அமைந்திடவும் இன்றைக்கு 24 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த ஆப்டிகல் பைபர் கேபிள் தொழிற்சாலை அமைந்திடவுமான ஒரு சூழ்நிலை - வாய்ப்பு உருவாகியிருக்கின்றது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

**தமிழகத்தில் மிகச் சிறப்பாக செயல்படும் கார் தொழிற்சாலைகள்**

கார் தொழிற்சாலை இன்றைக்கு இந்தியாவிலே, தமிழகத்திலே மிகச் சிறப்பான முறையிலே செயல்படுகின்றது என்பதற்கு சான்றாக இங்கே உருவாகின்ற போர்டு கம்பெனியின் கார் தொழிற்சாலையும், இதைவிட மிக வேகமாக, விரைவாக உருவாகிக் கொண்டிருக்கின்ற - திருப்பெரும்புதூரில், இருங்காட்டுக்கோட்டையில் உருவாகிக் கொண்டிருக்கின்ற ஹூண்டாய் கார் தொழிற்சாலையும் சான்றாக விளங்குகின்றன.

நான்காவது முறையாக, நான் 1996 ஆம் ஆண்டு கழக அரசில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது தொழிற் கொள்கையின் அடிப்படை நோக்கங்கள் சில் வெளியிடப்பட்டன.

அவை :- இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை மீண்டும் அடைதல் வேண்டும். இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாக, தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்; தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்த வேண்டும். தொழில் முதலீடுகளுக்குத் தடையை நீக்கி, விதிகளையும் நடைமுறைகளையும் எளிமையாக்க வேண்டும்; சுற்றுப்புற சூழலைப் பாதிக்காத வகையில் முன்னேற்றப் பணிகளை முடுக்கி விட வேண்டும். மிக முக்கியமாக ஒளிவு மறைவில்லாத வெளிப்படையான அணுகுமுறையுடன் முதலீட்டாளர்கள் விரும்பும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். மாநிலத்திலே உள்ள அளப்பரிய மனித சக்தியை தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு உகந்தவாறு பயன்படுத்த வேண்டும். இவற்றின் அடிப்படையில், தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் மின் சக்தியை அதிக, அளவில் உருவாக்கி, அதை நல்ல முறையில் பகிர்ந்தளிக்கவும், சாலைகளை மேம்படுத்தவும்,



நவீன தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தவும், புதிய துறைமுகங்களை உருவாக்குகின்ற முயற்சிகளில் முயன்று ஈடுபடவும், இயங்கும் துறைமுகங்களை மேம்படுத்தவும், தொழில் பயிற்சி வசதிகளைச் செம்மைப்படுத்தவும், அகல ரெயில் பாதைப் பணிகளைத் துரிதப்படுத்தவும், ஆகிய இந்த மிக மிக முக்கியமான தேவைகளில் எல்லாம் தீவிரமான கவனத்தை இந்த அரசு செலுத்தத் தொடங்கி அதிலே முழு வெற்றியைப் பெறாவிட்டாலும் பெரும் வெற்றியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

## ஏற்றுமதியில் 2 ஆண்டில் நிகழ்ந்த சாதனைகள்

தமிழகத்திலே உற்பத்தியாகும் பல்வேறு பொருட்கள் வெளிநாடுகளுக்கு இன்றைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதியில் கடந்த இரண்டாண்டுகளில் - இந்த ஆட்சியில் மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. 1991-92இல் கடந்த ஆட்சியில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 6 ஆயிரத்து 781 கோடி ரூபாய். 96-97ல் இந்த அரசு அமைந்த பிறகு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.18,500 கோடி. 97-98 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## அகில இந்திய அளவில் தமிழகத்திற்கான பெருமை

தமிழகத்தின் இந்த ஏற்றுமதி, அகில இந்திய அளவிலான ஏற்றுமதியில் 17 சதவிகிதம் என்பது தமிழகம் பெருமைப்படத்தக்க ஒரு செய்தியாகும்.

அரசு கடந்த இரண்டாண்டுகளாக உருவாக்கி வரும் புதிய தொழில் வளாகங்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு நான் அந்தப் பொறுப்பை ஏற்ற நிலையில் பல தொழில் வளாகங்களை தமிழகத்திலே தொடங்கிட முயற்சி மேற்கொண்டு ராணிப்பேட்டை, ஓசூர் போன்ற இடங்களில் பெரும் அளவில் தொழில் வளாகங்கள் உருவானது உங்களுக்குத் தெரியும்.




அதற்குப் பிறகு வேறு பல இடங்களில் ஓசூரிலேயே இரண்டாவது கட்டம், ராணிப்பேட்டையில் இரண்டாவது, மூன்றாவது கட்ட தொழில் வளாகங்கள், அதைப்போல ஈரோடு மாவட்டத்தில், வேறு சில மாவட்டங்களில் பல தொழில் வளாகங்கள் உருவாகின.

இப்பொழுது புதிதாக இந்த இரண்டாண்டு காலத்திலே உருவான தொழில் வளாகங்களைப் பற்றி மாத்திரம் இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன்.

திருப்பெரும்புதூரில் 2,469 ஏக்கர் பரப்பளவில், தொழில் வளாகம், இருங்காட்டுக்கோட்டையில் 1,829 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; செய்யாறில் 600 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; நெமிலியில் 2,429 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; வடமங்கலத்தில் 1,408 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலத்தில் தோல் பதனிடும் தொழில் வளாகம் 300 ஏக்கர் பரப்பளவில்; மாமண்டூர் - பழமத்தூரில் 860 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் 2,043 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம்; வரதராஜபுரத்தில் 1,989 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம் என்று கடந்த இரண்டாண்டுகளாக இந்த அரசு புதிய தொழில் வளாகங்களை அமைக்கும் முயற்சியிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமேயானால், ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடுகின்ற கோப்புகளில் பத்து அல்லது பதினைந்து கோப்புகளாவது ஒவ்வொரு தொழில் வளாகத்திற்கும் நிலம் கையகப்படுத்துகின்ற பணிக்கு நிதி ஒதுக்குகின்ற ஆணையிடுகின்ற கோப்புகள்தான் என்பதை நான் மிகுந்த பூரிப்போடு உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தத் தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் - தமிழ்நாடு அரசின் டிட்கோவும், இந்திய அரசு நிறுவனமான டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட் (டி.சி.ஐ.எல்.) நிறுவனமும் இணைந்த கூட்டு முயற்சியில் 1988-ஆம் ஆண்டில் உருவாக்கிய நிறுவனமாகும். தொலைத் தொடர்பு கேபிள்களை - கம்பிகளை உருவாக்குவதற்கென திட்டமிடப்பட்ட நிறுவனத்திற்காக 1989-90ஆம் ஆண்டில் கழக அரசு காலத்தில் - மறைமலை நகரில் பத்து ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 'எஸ்ஸெக்ஸ் குரூப்' எனப்படும் அமெரிக்க நிறுவனத்தின் கூட்டு முயற்சியோடு தொழிற்சாலை அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது.

இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்தும் தொலைத் தொடர்புத் துறையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. சிறந்த முறையில் தரமான பொருள்களை உற்பத்தி [illegible] நிறுவனங்களுக்கு வழங்கப்படும் "ஐ.எஸ். [illegible] சான்றிதழ் இந்தத் தொழிற்சாலை [illegible]

மாதத்திலே வழங்கப்பட்டுள்ளது. 97-98இல் இந்த நிறுவனத்தின் வருமானம் சுமார் 42 கோடி ரூபாய். இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டுவந்த நட்டம் முழுவதும் நேர் செய்யப்பட்டதோடு, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிகர இலாபத்தையும் இந்த நிறுவனம் ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்தத் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் நிறுவனம் தொலைத் தொடர்பு கம்பிகள் தவிர, ஜப்பானைச் சேர்ந்த பியூஜிகுரா லிமிடெட் நிறுவனத்தோடு இணைந்து கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளைத் தயாரிக்கும் - அதாவது ஆப்டிகல் பைபர் கேபிள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. இத்தொழிற்சாலை அமைப்பதற்காக பியூஜிகுரா லிமிடெட் நிறுவனத்துடனான கூட்டு முயற்சி ஒப்பந்தம் 1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. சென்னையிலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவில் ஜி.எஸ்.டி. சாலையில் மறைமலைநகர் தொழிற்பேட்டை வளாகத்தில் போர்டு மோட்டார் தொழிற்சாலைக்கு அருகில் இத்தொழிற் சாலைக்காக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை - நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைகிறது. கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முறையான டெண்டர் நடைமுறைகளின் மூலம், உலகிலேயே ஆப்டிகல் பைபர் கேபிள் கம்பி உற்பத்தித் துறையில் முன்னோடி நிறுவனமாக விளங்கும், பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'நெக்ஸ்ட்ரோம் டெக்னாலஜி' நிறுவனத்திடமிருந்து இத்தொழிற் சாலைக்குத் தேவையான தளவாடங்களைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதியில் அதாவது நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் அந்தத் தளவாடங்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 99-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தி தொடங்க திட்டம்

ஈரோட்டைச் சேர்ந்த ஆர்.பீ.பீ.கன்ஸ்டிரக்ஷன்ஸ் இஞ்சினீயரிங் காண்ட்ராக்டர்ஸ் நிறுவனத்திடம் இந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டு, இன்றைய விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை 99-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தியைத் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை 180 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், 250 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கும்.

கண்ணாடி நுண்ணிழைகளுக்குள் செலுத்தப்படும் லேசர் ஒளிக்கற்றை, எந்தவிதமான சேதமும் இல்லாமல் நெடுந்தூரம் பயணம் செய்கிறது. செய்தி விவரங்கள் பற்றிய சைகைகளால் தீவிரமடையும் இந்த ஒளியானது தொலைதூரத்தில் பெறப்பட்டு, பல மடங்கு ஆக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஒளி, ஒலி முதலிய வடிவிலான செய்திகளாக மாற்றப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மூலப்பொருளான சிலிகான் எனப்படும் மணல் தமிழகத்தில் பெருமளவில் கிடைப்பதால் இந்தக் கண்ணாடி நுண்ணிழைத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

நகரங்களுக்கு இடையேயான தொலைத் தொடர்புகளில் (நெட்வொர்க்) இப்படிப்பட்ட கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகள், ஏற்கெனவே தொலைத் தொடர்புத் துறையினரால் பயன் படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மாவட்டத் தலைநகரங்கள் இந்த கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகள் தொலைத் தொடர்பு பணிகளில் மென்மேலும் பயன்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன. ஏனென்றால், தொலைத் தொடர்புத் துறையில் இறுதியில் உள்ள 500 மீட்டர் தூரத்திற்கு மட்டுமே செப்புக் கம்பிகளைப் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளதால், இந்தக் கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளின் தேவை மிக அதிகமாக உள்ளது. எனவே இதன் உற்பத்தித் துறையில் தனியார் நிறுவனங்கள் மிகுந்த ஆர்வத்துடன் நுழைகின்றன.

புதிய உத்திகளான இண்டெர்நெட், ஐ.எஸ்.டி.என், ஈ.டி.ஐ., மின்னணு வர்த்தகம் போன்றவற்றில் தகவல் அளிப்பதற்குத் தேவையான உன்னதமான சாதனமாக இந்தக் கேபிள்கள் பயன்படுகின்றன. எனவே, கண்ணாடி நுண்ணிழைக் கம்பிகளின் தேவை நமது நாட்டில் அதிகரிக்கும் வாய்ப்பு நிறைய உள்ளது. இந்தத் தேவையை வெற்றிகரமாக சந்திக்கவும் நிறைவேற்றவும் இந்தத் தொழிற்சாலை உதவும் என்று நான் நம்புகிறேன்.

எனவே இத்தகைய அரிய பல்வேறு பயன்களைத் தரத்தக்க இந்தத் தொழிற்சாலையை நாம் தொடங்கு கிறோம். தொழிற்சாலையைத் தொடங்குகிறோம் என்று சொல்வதை விட தொழிற்சாலை வருவதற்கான அடிக்கல்லை நாட்டுகிறோம். எப்பொழுதுமே என்னை அழைக்கும்போது, அடிக்கல் நாட்டு விழாவென்றால் நான் உடனடியாக ஒப்புதல் தருவதில்லை. ஏனென்றால் அமைச்சர்கள் நாட்டிய பல அடிக்கற்கள் அப்படியே நின்று கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பல இடங்களில் காணுகிறோம். இந்தப் பக்கம் வருவோர் போவேரெல்லாம் அது யார் நாட்டிய அடிக்கல் என்று கேட்டு - அடிக்கல் வைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் - அதிலே இருக்கின்ற பெயரைப் பார்த்துவிட்டு - இவர் நாட்டிய அடிக்கல்லா? அது அப்படித்தான் என்று அடிக்கல்லை நாட்டியவரைத் திட்டிக்கொண்டு போவார்கள். அந்தச் சாபம் எனக்குக் கிடைக்கக்கூடாது என்பதற்காகவே பெரும்பாலும் அடிக்கல் நாட்டு விழாக்களை ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால் ஒரு நம்பிக்கை, இன்றைக்கு அடிக்கல் நாட்டுகின்றவர்கள் வெகு விரைவிலே தொழிற் சாலையைக் கட்டிமுடித்து, இதன் திறப்பு விழாவிற்கு என்னை அழைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அடிக்கல்லை நாட்டியிருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். ★

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி




தமிழரசு

பதிவு எண். M. 8676

Licence No.TN/MS(C)/PP-23